# திருத்தணி



ஆசிரியர்
**பெ. தங்கவேல்**

பதிப்பாசிரியர்
முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
**2010**

# திருத்தணி

ஆசிரியர்

**பெ. தங்கவேல்**

பதிப்பாசிரியர்

**முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2010

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | திருத்தணி |
| ஆசிரியர் | : | பெ. தங்கவேல் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,<br>முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் |
| வெளியீட்டு உரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| பிரதிகள் | : | 1000 |
| நூல் வெளியீடு எண் | : | 216 |
| ஆண்டு | : | 2010 |
| பக்கங்கள் | : | 125 |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம். மேப் லித்தோ |
| விலை | : | ரூ. 41.00 |
| அச்சிட்டோர் | : | சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு<br>சங்கம் லிட்.,<br>6, பாரதி சாலை, திருவல்லிகேணி<br>சென்னை-600 005 |
| வெளியிட்டோர் | : | தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை<br>தமிழ்வளர்ச்சி வளாகம்<br>ஆல்சு சாலை, எழும்பூர்<br>சென்னை-600 008 |

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.
நாள் : 23-03-2010

# பதிப்புரை

தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்க வேண்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1973-74-ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுகலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 192 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சி காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்ந்தெடுத்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயிலைப் பற்றி விரிவாக ஆய்வுசெய்து ஆய்வேடு ஒன்றினை சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 19 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறவனத்தில் 1982-83ஆம் ஆண்டு பயின்ற திரு. பெ. தங்கவேல் அவர்கள் எழுதிய **'திருத்தணி'** என்னும் ஆய்வேடு தற்போது நூலாக வெளிவருகிறது. இந்நூல் சுப்பிரமணிய சுவாமி கோயில் வீரட்டானேசுவரர், ஆறுமுக சுவாமி, விஜயராகவப் பெருமாள் ஆகிய கோயில்களைப் பற்றியும் மற்றும் கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் தெரிவிக்கிறது.

இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், மற்றும் திரு. இரா சிவானந்தம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலை வெளிக்கொணர பகுதி-II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்து சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி ச.சரஸ்வதி மற்றும் அச்சுப்பிழைத் திருத்திய கோ. செம்மலர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூல் வரலாறு மாணவர்களுக்கும், வரலாற்று ஆய்வாளர்க்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# பொருளடக்கம்


பதிப்புரை

1. அமைவிடம் 1
2. திருத்தணி பெயர்க்காரணம் 7
3. வேலஞ்சேரி 12
4. இலக்கியங்களில் திருத்தணி 15
5. கோயில்கள் 26
   அ. வீரட்டானேசுவரர் கோயில் 33
   ஆ சுப்பிரமணியசுவாமி கோயில் 38
   இ. விஜயராகவப் பெருமாள் கோயில் 48
   ஈ. ஆறுமுகசுவாமி கோயில் 53
6. சிற்றாலயங்கள் 57
7. தணிகையில் வழிபட்டோர் 60
8. கல்வெட்டுச் செய்திகள் 65
9. சிறப்புச் செய்திகள் 84
10. செப்பேட்டுச் செய்திகள் 85
11. செப்புத் திருமேனிகள் 99
12. திருவிழாக்கள் 102
13. ஓவியங்கள் 105
   துணை நூற்பட்டியல் 106
   நிழற்படங்கள் 108

# திருத்தணி

## அமைவிடம்

தமிழ் தெய்வமாகிய முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தணியம்பதி திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டத்தில் சென்னைக்கு மேற்கே 85 கி.மீ. தொலைவிலும், காஞ்சி மாநகருக்கு வடக்கே 30 கி.மீ. தொலைவிலும், திருப்பதிக்குத் தெற்கே 70 கி.மீ. தொலைவிலும், அரக்கோணம்-ரேணிகுண்டா புகைவண்டிப் பாதையில் அமைந்துள்ளது. தொண்டை நாட்டின் தலைநகரமான காஞ்சிபுரம் தெற்கிலும், விரிஞ்சிபுரம் - வள்ளிமலை - சோளிங்கபுரம் ஆகியவை மேற்கிலும், திருவாலங்காடு கிழக்கிலும் திருக்காளத்தி மற்றும் திருப்பதி வடக்கிலும் சூழ்ந்திருக்க, நடுநாயகமாக திருத்தணிகை எனும் இவ்வூர் அமைந்துள்ளது.

இத்திருத்தணி பச்சரிசி மலை, பிண்ணாக்கு மலைகளுக்கு இடையே சற்று உயரம் தாழ்ந்து காணப்படும் மலையுச்சியின் மேல் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் சந்நிதியின் அடிவாரத்தில் திருத்தணி நகர் இயற்கை கொஞ்சும் அழகுடன் அமைந்துள்ளது.

தொல்காப்பியத்தில் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்ற வரிகள் தமிழ்நாட்டின் எல்லையைக் குறிப்பிடுகின்றன. திருவேங்கடம் என்னும் திருப்பதியைத் தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாக குறிப்பிடுகின்றது. ஆனால், இன்று தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாக திருத்தணியே சிறந்து விளங்குகிறது.

## பரப்பளவு- நிலவளம்

- திருத்தணிகையின் பரப்பு[1] சுமார் 675 ஹெக்டேர் பரப்பளவுடையதாகும். திருத்தணிகையைச் சுற்றி குன்றுகள் காணப்படுகின்றன. குன்றுகளுக்கிடையே திருத்தணி நகரும், நகரைச் சுற்றிலும் பசுமையான வயல்வெளிகளும் இருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

---

1. Census of India 1971, Chenglepet District.

நஞ்சை நிலங்களைக் காட்டிலும் புன்செய் நிலங்கள் இங்கு அதிகம் காணப்படுகின்றன. நன்செய் நிலங்களில் நெல், கரும்பு போன்ற முக்கியமான பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன. ஆங்காங்கே தென்னை, வாழை பயிர் செய்யப்படுகின்றன. புன்செய் நிலங்களில் சோளம், சாமை, வரகு. நிலக்கடலை போன்ற பயிர்களும் துவரை, கொள், பச்சைப்பயறு போன்ற பருப்பு வகைகளும் பயிரிடப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு சிறந்து விளங்குகின்றது.

திருத்தணிக்கு வடக்கே **'நந்தியாறு'** எனும் ஆறு ஓடுகிறது. இவ்வாற்றங் கரைகளின் இருபுறமும் நெல்வயல்களும், கோயில்களும் அமைந்துள்ளன. நந்தியாறு பெரும்பாலான நாட்களில் வறண்டே காணப்படுகின்றது.

## திருத்தணி நகரமைப்பு

திருத்தணிகை ஒரு சிறந்த புண்ணிய தலமாகும். திருத்தணியின் மேற்கே மலையுச்சியில் சுப்பிரமணிய சுவாமி கோயிலும், திருத்தணிக்கு வடக்கே ஆறுமுக சுவாமி கோயில், விஜயராகவப் பெருமாள் கோயில், வீரட்டானேசுவரர் கோயில் ஆகிய இம்மூன்று கோயில்களும் அமைந்துள்ளன. ஊரின் நடுநடுவே பல சிற்றாலயங்கள் காணப்படுகின்றன. நகருக்கு மிக அருகிலேயே திருத்தணிகை இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இருப்புப்பாதை திருத்தணிக்குத் தெற்கு வடக்காக அமைந்திருக்கிறது. இதன் மேற்கிலும், கிழக்கிலும் திருத்தணி நகரம் பரவியுள்ளது. திருத்தணி ஒரு வட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளது.

## தட்பவெப்பநிலை

திருத்தணி மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலப் பிரதேசமாகும். ஆகவே திருத்தணி சிறிது வெப்பம் மிக்க இடமாகும். பருவ காலங்களில் வெப்பத்தைத் தணிக்க நல்ல மழை பொழிகிறது. ஆண்டின் சராசரி மழையளவு 1066 மி.மி. தட்பவெப்பநிலை[1] அதிக அளவு $32^0$ 9C ஆகவும் குறைந்த அளவு $20^0$ 7C ஆகவும் இருக்கும்.

---

1. Census of India 1971, Chenglepet District

## திருத்தணி மலைச் சிறப்பு

திருத்தணியில் முருகக்கடவுள் மலையுச்சியில் எழுந்தருளி யிருக்கிறார். திருத்தணிகை மலையில் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இம்மலையின் இருபுறங்களிலும் மலைத் தொடர்ச்சிகள் பரவிக் காணப்படுகின்றன.

## பச்சரிசி மலை

வடக்கே உள்ள மலை சிறிது வெண்ணிறமாக இருப்பதால் இதனை 'பச்சரிசி மலை' என்று அழைக்கின்றனர்.

## பிண்ணாக்கு மலை

தெற்கே உள்ள மலை கருமை நிறம் பெற்றிருப்பதால் 'பிண்ணாக்கு மலை' என்றழைக்கின்றனர்.

திருக்குளத்தின் கிழக்குக் கரையினின்று மலையைப் பார்த்தால், வளைவாக இடம் பெற்ற ஒரு மாலை போலவும், மூவுருவம் எடுத்த ஒரு பரம்பொருள் போலவும், மூன்று மலைகள் விளங்கும். அவற்றின் மத்தியில் திருமுருகன் திருக்கோயில் நடுநாயகமாகச் சிறந்தோங்கி விளங்குகின்றது. அக்காட்சியைப் பார்ப்பவர் மனதிற்கு விருந்தாக அமைகிறது. அதனால் அருணகிரிநாதர் இதனை "அழகு திருத்தணி மலை" என்று புகழ்ந்து போற்றியிருக்கிறார். திருத்தணி திருமுருகனுக்கு இணையான தெய்வங்கள் ஏதும் இல்லாமை போலவே திருத்தணிகைக்குச் சமமான தலமும் வேறேதும் இல்லை எனலாம்.

"திருவி ளங்கிய வனப்பில்
    அறிவினில் திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்தமுன்
    முருகனை உவமையாக்குவர் அன்னான்
பொருவில் வள்ளியோடு ஆடிடம்
    ஆகிய புகழ்த்தணிகையும், யாங்கும்
ஒருந கர்க்குஅணி உயர்த்தமுன்
    உவமையா உரைப்பதால் எவராலும்"[1]

---

1. திருப்புகழ் - அருணகிரிநாதர்

இன்றைக்கு சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் தமது நூலில்[1] மலர்களில் தாமரை மலர் போலவும், நதிகளில் கங்கை நதி போலவும், தலங்களில் காஞ்சி போலவும் மலைகளிளெல்லாம் சிறந்தோங்கி விளங்குவது "திருத்தணிகையே" என்றும் "உலகில் மலைகள் பல இருப்பினும், சிவபெருமான் கயிலாய மலையையே காதலித்தது போல, முருகன் திருத்தணிகை மலையினையே பெரிதும் விரும்பி அங்கு மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கின்றான்" என்றும், இதனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## திருத்தணி மலையைச் சிறப்பிக்கும் பாடல்கள்

"விரை இடங் கொளும் போதினுள்
மிக்கபங் கயப் போல்
நிரை இடங் கொளும் நதிகளிற்
சிறந்தகங் கையைப் போல்
தரை இடங் கொளும் பதிகளில்
காஞ்சியத் தலம் போல்
வரை இடங்களிற் சிறந்தது இத்
தணிகை மால் வரையே"[2]

"மந்த ரத்தினும் மேருமால்
வரையிலும் மணிதோய்
கந்த ரத்தவன் கயிலையே
காதலித் தது போல்
கந்த ரக்கிரி தொல்புவி
தனிற் பல எனினும்
இந்த வெற்பினில் ஆற்றவும்
மகிழ்ச்சி யுண்டு எமக்கே[3]

## சமுதாயம்

பல்லவர்கள் கால கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் திருத்தணி மக்களின் சமுதாய வரலாற்றைக் குறிப்பிடுகின்றன. திருத்தணியில் இந்துக்களும், முஸ்லீம்களும், கிறித்தவர்களும், சமணர்களும் இணைந்து வாழ்கின்றனர். இவர்களின் முக்கியமானத்

1. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாசாரியர்
2. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாசாரியர்
3. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாசாரியர்

தொழில் விவசாயமே. விவசாயிகள் நீர் வசதியில்லாத காரணத்தால் ஒரு போகம் மட்டுமே நெல் அறுவடை செய்வர். நல்ல நீர் வசதியுள்ள கிணறுகளும் உண்டு. இவைகளின் மூலம் இருபோகம் பயிர் செய்பவர்களும் உண்டு. நெல், வாழை, கரும்பு போன்ற தோட்டப்பயிர்களும் பருப்பு வகை பயிர்களும் விளைவிக்கின்றனர்.

## சிறப்புச் செய்திகள்

### மகாத்மா வருகை

'இந்தியாவின் தந்தை' என்று போற்றப்படும் மகாத்மா காந்தி அவர்கள் 1929-ஆம் ஆண்டு மே மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துக்கொண்டார். மாநாடு முடிந்தவுடன் காந்தியவர்கள் அப்போது ஆந்திர எல்லையிலிருந்த தமிழக எல்லைப் பகுதியான திருத்தணிகைக்கு வருகை[1] புரிந்தார்.

### டாக்டர் இராதாகிருஷ்ணன் (1888 - 1975)

இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர் டாக்டர் S. இராதாகிருஷ்ணன் (1962-67). இவர் பிறந்தது திருத்தணி நகரே ஆகும். இவர் தலைசிறந்த தத்துவ மேதை. சிறந்த எழுத்தாளர். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் "A Hindu View of Life", "East and West" முக்கியமான நூல்களாகும். இவர் பிறந்த வீடு இப்போது தலை சிறந்த நூலகமாக செயல்பட்டு வருகிறது. திருக்கோயிலின் சார்பில் ரூ. ஒரு லட்சம் செலவு செய்யப்பட்டு இவரது வீட்டினை நூலகமாக மாற்றப்பட்டுள்ளது.

### முனுசாமி நாயுடு

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரா பிரிவினை செய்யாதிருந்தபோது சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக பதவி வகித்தவர் முனுசாமி நாயுடு அவர்கள். இவர் பிறந்ததும் திருத்தணி அருகேயுள்ள வேலஞ்சேரி என்னும் சிற்றூரில்தான். திருத்தணியிலுள்ள பெரிய பூங்கா ஒன்றினுக்கு "முனுசாமி நாயுடு பூங்கா" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இவர் தனது பதவி காலத்தில்

---

1. விடுதலைப்போரில் தமிழகம் - மா.பொ.சி. பக்கம் - 10

சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். இவருடைய பரம்பரையினர் தற்போது திருத்தணிக்கு அருகே உள்ள வேலஞ்சேரியில் வசித்து வருகின்றனர்.

## மடங்கள்

திருத்தணி மடங்கள் நிறைந்த ஒரு நகரமாகும். திருக்குளத்தின் நான்கு பக்கங்களிலும், குளத்திலிருந்து மேற்கே செல்லும் வீதிகளின் இரு மருங்கிலும், மலையுச்சிக்கு செல்லும் பாதைகளின் இரு பக்கங்களிலும், கோயிலின் பின்புறம் உள்ள அந்தணர் குடியிருப்பு பகுதிகளிலும் ஏராளமான மடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு அந்தந்த வகுப்பினர் தங்குவதற்கு வசதிமிக்க சத்திரங்கள் சுமார் 150 உள்ளன. ஆடிக்கிருத்திகை, படித்திருவிழா போன்ற சிறப்பு நாட்களில், இச்சத்திரங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும். மற்ற நாட்களில் சத்திரங்கள் சாதாரணமாகக் காணப்படும்.

## பணிகள்

திருவிழாக் காலங்களில் சத்திரங்கள் பல நல்ல பணிகளை செய்துவருகின்றன. அவற்றில் ஏழைகளுக்கு உணவிடுதல் முக்கியப் பணியாகும். இதுதவிர கல்யாணம், உபநயனம் முதலிய நிகழ்ச்சிகளும் இச்சத்திரங்களில் நடைபெறும். விழா இல்லாத மற்ற காலங்களில் இச்சத்திரங்களில் பயணிகள் தங்குவதற்கு இடம் தாராளமாகக் கிடைக்கும். எல்லா மடங்களின் பெயர்களும் இடவசதி கருதி எழுத முடியவில்லை. மடங்கள் பெருகி இருப்பதால் 'மடக்கிராமம்' என்று இப்பகுதிக்கு வழங்கப்படுகிறது.

## புண்ணியத்தலம்

திருத்தணி ஒரு புண்ணியத் தலமாகும். இங்கு தேவஸ்தானத்தில் ஏராளமான தங்கும் அறைகள் இருக்கின்றன. இதற்காக குறைந்த வாடகையையே வசூலிக்கின்றனர்.

❖❖❖

# திருத்தணி - பெயர்க்காரணம்

'திருத்தணி' பெயர்க்காரணம் பற்றி பல்வேறாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. முருகப்பெருமான் தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டு சூரபத்மனுடன் செய்த பெரும் போரும், வள்ளியம்மையை மணந்து கொள்ள வேடர்களுடன் விளையாட்டாக நிகழ்த்திய சிறு போரும் முடிந்து, தணிந்து அமர்ந்த தலம். ஆதலின் இதற்குத் 'தணிகை' என பெயரமைந்தது.

தேவர்களின் அச்சம் தணிந்த இடம், முனிவர்கள் காம, வெகுளி மயக்கங்களாகிய பகைகள் தணியும் இடம், அடியார்களின் துன்பம், கவலை, பிணி, வறுமை ஆகியவற்றைத் தணிக்கும் இடம் ஆதலாலும் இதற்குத் 'தணிகை' என்று பெயரமைந்தது. இதனை

"செங்கண் வெய்ய சூர்ச் செருத்தொழிலினுஞ் சிலை வேடர்
தங்க ளிற்செயுஞ் செருத்தொழிலினுந் தணிந்திட்டே
இங்கு வந்தியாம் இருத்தலால் செருத்தணி என்றோர்
மங்கலந் தரு பெயரினைப் பெற்ற திவ்வறையே"

என்ற பாடல்[1] மூலம் நன்கு அறியலாம். சூரனோடு செய்த போர்க் காரணமாக கோபம் தணிந்து ஸ்ரீவள்ளி, தெய்வயானை சமேதராய் வீற்றிருக்கும் திருப்பதி யாதலின் இது செருத்தணி எனப் பெயர் பெறும்.

## திருத்தணி - வேறு பெயர்கள்

திருத்தணிக்கு இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் ஏராளமான வேறு பெயர்கள் காணப்படுகின்றன. புறம்பயத்துத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள்

"அஞ்சுக வைகல் இவ்வகன்கிரி நண்ணியெம் அடிகள்
தஞ்சம் என்று துன்னியே வழிபடுந் தவத்தோர்
நெஞ்சகந் தனில் வெ.'.கிய போகங்கள் நிரப்பி
எஞ்சல் இல்லத்தோர் வீடு பேறடைந் தினி திருப்பார்கந்தபுர
கன்மலிந் தோங்கும் கழுநீர்க்குன்று"

1. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார், பாடல் 216

என்று பாடுவது கவனிக்கத்தக்கது. ''கழுநீர்க்குன்று'' என்பது திருத்தணி மலை மீதுள்ள குளத்தினைக் குறிக்கும். பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த கந்தபுராணத்திலும் "வரையிடங்களிற் சிறந்தது இத்தணிகை மால் வரையே'' என்று திருத்தணிகையை குறிப்பிடுகின்றார். கி.பி.15-ஆம் நூற்றாண்டினரான அருணகிரிநாத சுவாமிகளின் "திருப்புகழ்" என்ற நூலிலும் திருத்தணியின் பல்வேறு பெயர்கள் காணப்படுகின்றன. இந்நூலில்

"திரைகடல் சூழும் புவிக்கயிராகிற்
திருத்தணி மேவும் பெருமாளே"[1] என்ற வரிகளும்,

"தணிமலையு லாவு பெருமாளே"[2] என்ற வரியும்,

"தணிகை மாமலை மணிமுடியாழா இயல் பெருமாளே"[3] என்ற வரியும்,

"தனிமணர் குவளை நித் தமுமலர்த்
தரு செருத்தணியினிர் சரவணப் பெருமாளே"[4] என்ற வரியும்,

"குவளைச் சிகரி"[5] என்ற வரியும்,

"நீலவெற்பு"[6] என்ற வரியும்,

திருத்தணியைக் குறிக்கும் வேறு பெயர்களாகும். இவருடைய "கந்தரலங்காரம்'' என்ற நூலில் 76, 77 எண்ணுள்ள பாடல்கள் திருத்தணியைப் பற்றிச் சொல்லப்பட்ட பாடல்கள் ஆகும். திருத்தணிகை, 73, 197, 439, 454, 458, 510, 800, 844, 845*

---

1. திருப்புகழ், பாடல் எண், 258
2. மேலது ,, 273
3. மேலது ,, 282
4. மேலது ,, 283
5. மேலது ,, 290
6. மேலது ,, 298

* இங்கு குறிப்பிடப்படும் எண்கள் திருப்புகழ் பாடல் எண்களைக் குறிப்பவை.

| | |
|---|---|
| அப்பணி கடையான் மெச்சிய தணி மலை | 279 |
| அழகு திருத்தணி மலை | 285 |
| ஐந்து தலையரவுகொழுகின்ற தணி மலை | 370 |
| கொங்கின் குவளை பூக்கிற கிரி | 1181 |
| சலமிடை பூவினடுவினில் வீறு மலை | 260 |
| சிவ சரணர்கள், முநிக் கணத்தவர் இமையவர் பணி தணிகை | 266 |
| செப்பத் துற்பலவெற்பு | 458 |
| தமிழ்த்ரய நீடு திருத்தணி | 255, 257 |
| திருக்குளத்தின் விஷேசம் | |
| திருக்குளநாளும் பல திசை | |
| திருத்தணிமலையில் சுவாமி அழகர் என்பது | 282 |
| திருத்தணிமலையில் தீர்த்தம் | 285, 308 |
| திருத்தணியின் வளமை | 73, 253, 309, 311 |
| திருப்புகழோதுங் கருத்தினர் சேருந் திருத்தணி | 259 |
| தூரத்தொழுவார் வினை சிந்திடும் | 311 |
| நீடு மெய்த்தவர் வாழ் திருத்தணி | 277 |
| நீலோற்ப சுனை | 252,269,272,274, 283,287,291,309, 310 |
| பிரபல ஸ்தலம் என்பது | 297 |
| புலவ ருலாவுந் தணிகை | 261 |
| புவிக் குயிராகுந் தணிகை | 258 |


திருத்தணித் தலத்தின் பெயர்கள் குறித்து 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கந்தப்பையயர் தனது நூலில்[1] தணிகவெற்பு* கந்தாசலம் - 206, 219, 260.

1. தணிகைப்புராணம், கந்தப்பைய்யர் இயற்றியது.

* இதில் குறிப்பிடும் எண்கள் தணிகைப்புராணம் பாடல்களின் எண்களைக் குறிப்பவை.

கல்லார வெற்பு - 109, 180. காவியங்கிரி - 395 குருகிரி - 380. சீபரிபுராணம் - 179, 218, 400. செருத்தணிகாசலம் - 369. நீலகிரி - 180 என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வெட்டுகளில் திருத்தணி

பல்லவ மன்னர்களில் கடைசி மன்னனான அபராஜித மன்னன் காலத்தில் இருந்து கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

"ஸ்வஸ்திஸ்ரீ கொவிசைய அபராஜித விகூஉ வஃடுக்குப் பதினெட்டாவது திருத்தணியல் திருவீரட்டானத்து"[1] என்று திருத்தணியைப் பற்றி கல்வெட்டு குறிப்பிடுகின்றது. சோழர்கால கல்வெட்டுகளிலும் 'திருத்தணியல்' என்ற பெயரே வழங்கியிருக்கிறது. இதனை

"ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கொப்பரகேசரி பந்மற்கு யாண்டு ௫ • உ ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேலூர் கோட்டத்து ஒகவல் நாட்டு பெருங்காஞ்சி கிழ் பிடாகையான அகுவூர் திருத்தணியற் திருமலை மேலேளுந்தருளி நிற்கும் சுப்ரமணிய பிள்ளையாற்கு"[2] என்ற முதலாம் பராந்தகன் கல்வெட்டு மூலம் அறியலாம்.

தெலுங்கு சோழர் காலத்திலும் திருத்தணியில்[3] என்ற பெயரும் விஜயநகர காலத்தில்

". . . . . . . . . கம்பண உடையார்க்கு *விஸ்வாஸு* வருஷம் மீன நாயற்று வூஒவுடு பஷத்து . . . . யும் பெ . . . பெற்ற *சுஸ்வதி* நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் குன்ற வத்தனகோட்டத்து மென்மலைத் தணியல் . . . திருத்தணியல் திருமலை மெல் நின்றருளிய"[4] என்று கல்வெட்டுக்கள் திருத்தணியல் என்றே குறிப்பிடுகின்றன.

## செப்பேடுகளில் திருத்தணி

செப்பேடுகளில் திருத்தணி என்ற பெயரே காணப்படுகின்றன. ". . . . கோனோலை குன்றவத்தன கோட்டத்து மேன்மலை தணியல் நாட்டார் கண்டு தங்கள் நாட்டு பூதூர் முன் பெற்றாரை மாற்றி மேலிருஞ் செற்றோடேய் கலந்து ஒன்றாக்கி திருத்தணியில்

1. 435 / 1905 (A.R.E.)
2. 489 / 1905 (A.R.E.)
3. 139 / 1942 - 43 (A.R.E.)
4. 440 / 1905 (A.R.E.)

திருமலையில் நின்றருளின"[1] என்று அபராஜிதவர்மன் செப்பேட்டிலும் ". . . . . . குன்றவத்தன கோட்டத்து நடுவின் மலை இல்லத்தூர் நாட்டாரொம் மேன்மலை திருத்தணியில் நாட்டாருங் கண்டு"[2] என்று பராந்தக சோழனின் செப்பேட்டிலும் திருத்தணியல் என்றே வழங்கப்பட்டிருக்கிறது. எனவே பழங்காலந்தொட்டு இன்று வரை திருத்தணி என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு தேசிய கவிஞரான சுப்பரமணிய பாரதியார்

"திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலுவீற்றிருக்கும் அதன் பொருளைக் கேளீர்,
திருத்தணிகை என்பதிங்குப் பொறுமை யின்போ,
செந்தமிழ்க் கண்டீர்பகுதி, தணிகை எனும் சொல்,
பொருத்தமுறும் தணிகையினாற் புலமை சேரும்,
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்றும்
அருத்தம் மிகு பழமொழியும் தமிழில் உண்டாம்,
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்!"

என்று திருத்தணிகை முருகனின் பெருமையினை வாயாறப் புகழ்ந்து பாடியுள்ளார். தணிகை என்னும் சொல்லுக்குப் பொறுத்தல் (பொறை) என்பதும் ஒரு பொருளாகலின் "அடியார்களின் பிழைகளையும் பாவங்களையும் பொறுத்து அருள்புரியும் தலம், திருத்தணிகை" என்று கொள்ளுதலும் பொருந்தும்.

---

1. Velanjeri plates of Aparajita
2. Velanjeri plates of Parantaka chola

❖❖❖

# வேலஞ்சேரி

## இருப்பிடம்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டம், திருத்தணியில் இருந்து 3 கி.மீ தொலைவில் வேலஞ்சேரி என்னும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. வேலஞ்சேரி மக்களின் முக்கியத் தொழில் விவசாயமே. வேலஞ்சேரியில் ஏரிகள், கிணறுகள் மின்சார பம்பு செட்டுகள் மூலம் நீர் பாசனம் செய்யப்படுகின்றது. நஞ்சை நிலங்களில் இருபோகம் பயிர் செய்யப்படுகிறது. நெல், கேழ்வரகு போன்ற பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன.

## திருத்தணியும் - வேலஞ்சேரியும்

திருத்தணி - வேலஞ்சேரி வரலாறுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. கல்வெட்டுகளும், செப்பேடுகளும் வேலஞ்சேரியின் வரலாற்றுக்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளன. வேலஞ்சேரிக்கு வேறு சில பெயர்களும் வழங்கி வந்தன என்பதைக் கல்வெட்டுகள் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. பழுதடைந்த நிலையிலுள்ள அம்மன் கோயிலின் கல்வெட்டொன்று[1]

*ஸ்வஸ்திஸ்ரீ வெஹுயாந்* வஷ உ தை மாதம் வெலிருஞ் செற்றில் நயினார் தெக்ஷிணாமூத்தி தெவர் கொயிலுக்கும் என்று வேலஞ்சேரியின் பழைய பெயரைக் குறிப்பிடுகின்றன.

"கோனோலை குன்றவத்தன கோட்டத்து மேன்மலை தணியல் நாட்டார் கண்டு தங்கள் நாட்டு பூதூர் முன் பெற்றாரை மாற்றி மேலிருஞ்செற்றொடேய் கலந்து ஒன்றாக்கி திருத்தணியில் திருமலையில் நின்றருளின" என்றும்,

". . . . . . விண்ணப்பத்தால் *ஸ்ரீஹாயிரா*ஜன் ஆணத்தியால் மேலிருஞ்செற்று ஸமெஹையார்க்கெ காணியாய்" என்றும்,

". . . . . கீழ்பாற்கெல்லை மேலிருஞ்செற்றெல்லையின் மேற்கு தென்பால் எல்லை திருத்தணியல் எல்லையின் வடக்கும் மேல்பால் கெல்லை திருத்தணியலும் ஓவியூரிலும் இருகனூர்கும்

---

1. (A.R.E.) 115 / 1942-43

மெல்லையினினும் கிழக்கும் வடபாற்கெல்லை பொன்பதிநாட்டும் மேலிரிஞ் செற்றெல்லையினினும் தெற்கும்[1] " என்றும் திருத்தணி - வேலஞ்சேரி செப்பேடுகள் வேலஞ்சேரியின் பெயரை "மேலிருஞ்செறு" என்றே வழங்குகின்றன.

## சிறப்புச் செய்திகள்

வேலஞ்சேரியில் பழுதடைந்த நிலையிலுள்ள அம்மன் கோயிலில் ஒரு கல்வெட்டும், ஏரியின் தூம்பின் அடியில் கன்னர தேவன் கல்வெட்டு ஒன்றும், ஏரித் தூம்பின் நிலைக்கல்லில் பல துண்டுக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

## திருத்தணிச் செப்பேடுகள்

இக்கிராமத்தில் கல்யாண சுந்தரர் செப்புத் திருமேனி பூமிக்குள்ளிருந்து தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்டது. அத்திருமேனி கிடைத்த விதம் பற்றித் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் ஆய்வு செய்ய சென்றபொழுது அவ்வூரில் இரு செப்புப் பட்டயங்கள் இருப்பது தெரியவந்தது.

ஒரு செப்புப் பட்டயம் பல்லவ மன்னன் அபராஜிதவர்மனின் 9-ஆம் ஆட்சியாண்டினையும் மற்றொன்று சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டினையும் சேர்ந்தவையாகும். இச்செப்பேடுகளின் செய்திகளை தனித் தலைப்பின் கீழ் காணலாம்.

## கோயில்கள் (வேலஞ்சேரி)

வேலஞ்சேரியிலுள்ள பள்ளியின் தென்புறம் பாழடைந்த கோயில் ஒன்று உள்ளது. இதே கிராமத்தின் மற்றொரு பகுதியிலும் ஒரு கோயில் காணப்படுகிறது. இக்கோயில்களின் அதிட்டானப் பகுதியில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆங்காங்கே கல்வெட்டுக்கள் சிதைந்தும் உள்ளன. பாழடைந்த சிவன் கோயிலினையடுத்து அம்மன் கோயில் ஒன்றும் இருந்திருக்க வேண்டும். தற்போது கோயில் தெரியவில்லை.

வேலஞ்சேரிக்கு வடக்கே கன்னிமார்கள் கோயில் ஒன்று உள்ளது. இங்கே சப்தமாதர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவைகளில் சாமுண்டாவைத் தவிர மற்றவை சோழர் காலத்தவை. இங்குள்ள வினாயகர் சிற்பம் தற்போது திருத்தணிகையில் உள்ளது.

1. Tiruttani -Velanjeri Copper Plates

**வீரபத்திரர்**:- நான்கு கரங்கள், விரிசடை, பின்னிரு கைகளில் வலது மழு, இடது கையில் மான் காணப்படுகிறது. அமர்ந்த நிலையில் உள்ளார்.

**பிராமி**:- நான்கு முகங்கள், நான்கு கரங்கள், மேலிரு கரங்களில் அக்கமாலை, கெண்டியும், கீழிரு கரங்களில் ஒரு கை அபய முத்திரையிலும், மற்றொரு கை தொடைமீதும் வைத்துள்ளது.

**மாகேஸ்வரி**:- நான்கு கரங்கள், மேலிரு கரங்களில் மழு, மான், கீழிரு கரங்களில் அபயம், தொடைமீதும் வைத்துள்ளது. மார்பு கச்சை, தலையில் ஜடாமகுடம் அலங்கரிக்கிறது.

**கௌமாரி**:- நான்கு கரங்கள் மேலிரு கரங்களில் அக்கமாலை, கெண்டி, கீழிரு கரங்களில் அபயம், தொடைமீது வைத்துள்ளது. கிரீட மகுடம் - மார்பு கச்சை, இடைக் கச்சை காணப்படுகிறது.

**வராகி:-** பன்றி முகம், நான்கு கரங்கள், மேலிரு கரங்களில் சங்கு, சக்கரம், கீழிரு கரங்களில் அபயம், தொடைமீது வைத்துள்ளது கிரீட மகுடம், முழு ஆடை காணப்படுகிறது.

**வைஷ்ணவி:-** நான்கு கரங்கள், மேலிரு கரங்களில் சக்கரம், சங்கு, கீழிரு கரங்களில் அபயம், தொடைமீது வைத்துள்ளது கிரீட மகுடம் காணப்படுகிறது.

**இந்திராணி:-** நான்கு கரங்கள், மேலிரு கரங்களில் வஜ்ஜிரம், அங்குசம், கீழிரு கரங்களில் அபயம், தொடைமீது வைத்துள்ளது

**சாமுண்டா:-** நான்கு கரங்கள் மேலிரு கரங்களில் சூலம், பாசம் கீழிரு கரங்களில் அபயம், தொடைமீது வைத்துள்ளது ஜ்வாலை மகுடம், மகுடத்தில் மண்டையோடு, மார்புக் கச்சை காணப்படுகிறது. இது சோழர் காலத்திற்கு முற்பட்டதாகும்.

❖❖❖

# இலக்கியங்களில் திருத்தணி

சங்ககாலம் முதல் இன்று வரை தமிழ் இலக்கியங்களில் திருத்தணிகையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்ககாலத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களுக்கு அடுத்து இயற்றப்பட்ட இலக்கியங்கள் பத்துப்பாட்டு நூல்களாகும்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பொருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்ற பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல்கள் இன்னின்னவை என்று தெரிவிக்கிறது. இவற்றில் முதலாக வைத்தென்னப்படுவது திருமுருகாற்றுப்படையாகும். இதனை இயற்றியவர் நக்கீரர் ஆவார். முருகப்பெருமான் கோயில் கொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளை இது இனிமையுற விளக்கி நிற்கின்றது.

## ஆறுபடைவீடுகள்

திருப்பரங்குன்றத்தில் முருகனின் தோற்றப்பொலிவு விளக்கமுறுகிறது. திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரிலே ஆறுமுகமும் பன்னிரு கையுமாய் அடியவர்க்கு அருள் வழங்க வேண்டி யானைமீது எழுந்தருளுகிறான். திருமுருகன், திருவாவினன் குடியிலே தேவர்களும், முனிவர்களும் முருகனைப் பரவுவார்கள். திருவேரகம் என்னும் சுவாமி மலையில் அந்தணர் பற்றிய செய்திகளும், அவர் வழிபாட்டு முறைமையும் கூறப்படுகின்றன. குன்றுதோறாடலில் குன்றிலே வாழும் குறவர்களின் வாழ்வு உணர்த்தப்படுகிறது. ஆறாவது படைவீடாகிய பழமுதிர்சோலையில் அடியவர்கள் மேற்கொள்ள வேண்டிய தவநெறியினையும் அவர்க்கு ஆறுமுகன் அருள்சுரக்கும் தன்மையினையும் குறிக்கும்.

## ஆறுபடை வீடுகளில் திருத்தணி உண்டா?

திருத்தணி ஆறுபடை வீடுகளில் ஒன்று என்பர் சிலர். இல்லை என்பர் சிலர். இலக்கிய மேதைகளிடையே இறுதியான முடிவு இன்னும் ஏற்படவில்லை. ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படை

குன்றுதோறாடல். குன்றுதோறாடல் திருத்தணியைக் குறிக்குமா என ஆராய்வோம். குன்றுதோறாடல் என்பது, முருகன் எழுந்தருளி விளங்கும் மலைத் தலங்கள் எல்லாவற்றையுமே குறிக்குமாயினும், திருத்தணிகைத் தலத்தையே தனிச்சிறப்பாகக் குறிக்கும் என்று அறிஞர்கள்[1] கருதுகின்றனர்.

'குன்றுதோறாடல்' என்பது பல மலைகளுக்கும் பொதுவாக வழங்கும் சொல். முருகக்கடவுள் மலைக்கடவுளாதலின் 'மலை கிழவோன்' 'கிரிராஜன்' 'குறிஞ்சி வேந்தன்' எனப் பலப் பெயர்களால் அழைப்பர். குன்றுதோறாடலில் அடங்கியுள்ள கோயில்கள் பின்வருமாறு:

1. கயிலைமலை
2. திருமலை (ஸ்ரீசைலம்)
3. திருவேங்கடம்
4. திருத்தணிகை
5. வள்ளிமலை
6. திருக்கழுக்குன்றம்
7. மயிலம்
8. திருச்சிராப்பள்ளி
9. திருக்கற்குடி
10. ரத்திநகிரி
11. விராலிமலை
12. வினாயகமலை
13. திருச்செங்கோடு
14. கொல்லிமலை
15. ராஜகம்பீர வளநாட்டு மலை
16. ஞானமலை
17. ஊதிமலை
18. குருடிமலை
19. தென்சேரிமலை
20. கொங்கணகிரி
21. தீர்த்தமலை
22. கறகமலை
23. புகழிமலை
24. பூம்பாறை
25. கொடுங்குன்றம்
26. குன்றக்குடி
27. பொதியமலை (பாபநாசம்)
28. கழுகுமலை
29. வள்ளியூர்
30. கதிர்காமம்
31. அருக்கொணாமலை
32. திருக்கோணமலை

என்று பல மலைகள் குன்றுதோறாடலில் அடங்கும். குன்று தோறாடல் ஒரு குறிப்பிட்ட மலையைக் குறிக்காமல் பல மலைகளைக் குறிப்பிடுகிறது.

---

1. திருத்தணிகை தல விளக்கம், பக்கம் - 9.

குன்றுதோறாடலில் முதலாவதாக வைத்தெண்ணப்படுவது திருத்தணிகை மலை என்பதால் திருத்தணிகை ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## தேவாரத்தில் திருத்தணி

திருநாவுக்கரசர் தனது புறம்பயத்து தேவாரத்தில் திருத்தணிகையைப் பற்றி பாடுவது குறிப்பிடத்தக்கவையாகும்.

"எஞ்சல் இல்லதோர் வீடு பேறடையத் தினிதிருப்பார் கந்தபுர
கன்மலிந் தோங்கும் கழுநீர்க் குன்று"

என்ற வரிகளில் 'கழுநீர்க் குன்று' என்பது சுப்பரமணிய சுவாமியின் கோயிலுக்கு தென்வாயிலுக்கு நேராக தென்புறத்தில் இருக்கும் "இந்திர நீலச் சுனை"யைக் குறிக்கும். அருணகிரிநாதரும் தம் திருப்புகழில்

"கழுநீர்த் தரு நீள் சுனை வாய்த்த
திருத்தணி மாமலை மேவிய பெருமாளே"

என்று பாடியுள்ளார். "இதில் வரும் கழுநீர்த் தரு" இந்திர நீலச் சுனையையே குறிக்கும்.

## கந்தபுராணம்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய 'கந்தபுராணம்' என்னும் நூலில் "மலர்களில் தாமரை மலர் போலவும் நதிகளில் கங்கை நதி போலவும் தலங்களில் காஞ்சி போலவும் மலைகளிலெல்லாம் சிறந்தோங்கித் திகழ்வது திருத்தணிகையே" என்று புகழ்ந்து பாடியுள்ளார். இதனை,

"விரை இடங்கொளும் போதினுள்
மிக்கபங் கயம் போல்
திரை இடங்கொளும் நதிகளில்
சிறந்தகங் கையைப் போல்
தரை இடங்கொளும் பதிகளில்
காஞ்சியந் தலம் போல்
வரை இடங்களிற் சிறந்தது இத்
தணிகை மால் வரையே"

இப்பாடல் வரிகளால் அறியலாம்.

"உலகில் மலைகள் பல இருப்பினும், சிவபெருமான் கயிலாய மலையையே காதலித்தது போல, முருகன் திருத்தணிகை மலையையே பெரிதும் விரும்பி அங்கு மகிழ்சிசியுடன் வீற்றிருக்கிறான்" என்பதனை

"மந்த ரத்தினும், மேருமால்
வரையிலும் மணிதோய்
கந்த ரத்தவன் கயிலையே
காதலித் ததுபோல்,
சுந்த ரக்கிரி தொல்புவி
தனிற்பல எனினும்,
இந்த எவற்பினில் ஆற்றவும்
மகிழ்ச்சியுண்டு எமக்கே"

என்ற பாடல்[1] நமக்கு விளக்குகிறது.

## திருப்புகழ்

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழில்[2] குன்றெறிந்த குமரக் கடவுளின் புகழினை இன்னிசைப் பாடல்களால் போற்றிப் பாடியுள்ளார். இவரால் பாடல் பெற்ற இடங்கள் எல்லாம் இன்று சைவர்களால் பெரிதும் போற்றி வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இவர் தனது நூலில் 1307 பாடல்கள் பாடியுள்ளார். இவற்றில் 64 பாடல்கள் திருத்தணிகை முருகனைப் பற்றி பாடப்பெற்றவையாகும். "சூரனைக் கொன்ற வேலாயுதத்தை ஏந்திய வேலவனே! தினைப்புனம் காத்த வள்ளியம்மை நாணுமாறு அவளைத் தொழுது புகழ்ந்தவனே! திருத்தணிகையில் அமர்ந்து தமிழ் வேதம் தந்த பெருமானே" என்று

"கவடுற்ற சித்தர்சட் சமயப்ர மத்தர்நற்
கடவுட்ப்ர திஷ்டைபற் பலவாகக்
கருதிப்பெ யர்குறித் துருவர்க்க மிட்டிடர்க்
கருவிற்பு கப்பகுத் துழல்வானேன்
சுவடிக்கி லச்சினைக் கிருகைச்ச ரிக்குமிக்
கசரப்ப ளிக்கெனப் பொருள்தேடி

1. கச்சியப்ப சிவாச்சாரியார், கந்தபுராணம்
2. திருப்புகழ், அருணகிரிநாதர்

சகலத்து மொற்றைபட் டயல்பட்டு நிற்குநின்
சரணப்ர நித்திசற் றுணராரோ?
குவடெட்டு மடடுநெட் டுவரிக்க ணத்தினைக்
குமுறக்க லக்கிவிக் ரமசூரன்
குடலைப்புய த்திலிட் டுடலைத் தறித்து
உதிரத்தி னிற்குளித் தெழும்வேலா!
சுவடுற்ற அற்புதக் கவலைப்பு னத்தனில்
துவலைச்சி மிழ்த்தநிற் பவள்நாணத்
தொழுதெத்து முத்தபொற் புரிசைச் செருத்தணிச்
சுருதித் தமிழ்கவிப் பெருமானே!"

என்ற பாடலில் பாடியுள்ளார்.

திருத்தணிகையின் இயற்கை வருணனையைப் பின்வருமாறு பாடியுள்ளார்.

"வங்கம் பெறுகடல் எங்கும் பொருதிரை
வந்துந் தியதிரும் அதனாலே
வஞ்சம் பெறுதிட நெஞ்சன் தழலுறு
அஞ்சம் பதும்விடும் அதனாலே
பங்கம் படுமென தங்கந் தனிலுதி
பண்பொன் றியவொரு கொடியான
பஞ்சொன் றியமயில் நெஞ்சொன் றியேயழல்
பொன்றுந் தனிமையை நினைவாயோ!
தெங்கந் திரளுடன் எங்குங் கதலிகள்
சென்றொன் றியபொழில் அதனூடே
தெந்தெந் தெனதென என்றண்டுறஅளி
நின்றுந் திகழ்வொடு மயிலாட
பொங்குஞ் சுனைகளில் எங்கும் குவளைகள்
என்றும் புகழ்பெற மலரினும்
பொன்றென் தணிகையில் நின்றங்கெழுபுவி
என்றுஞ் செயவல பெருமானே!"

என்ற பாடலில்[1] தென்னையும், வாழையும் நிறைந்த சோலைகள் எங்கும் வண்டுகள் பாட, மயில்கள் ஆட, சுனைகளில் குவளைகள்

1. திருத்தணிகை திருப்புகழ், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருத்தணிகை பாடல் எண் - 44.

மலர விளங்கும் புகழ்பெற்றது தணிகை மலை என்று வருணித்துப் பாடியுள்ளார். நீலோற்ப மலர் மலரும் சுனையை உடைய திருத்தணிகையினை,

"சிவத்தகுக் குடக்கொடிச் செருக்கவுற்
பலச்சுனைச்
சிறப்படைத் திருத்தணிப் பெருமாளே!"

என்று பாடியுள்ளார் வயல்வளம் மிக்க தணிகையில் வாழும் பெருமாளே என்று

"பிறப்பிலிக் குணர்த்துசித் தவுற்றநெற்
பெருக்குவைப்
பெருக்கு மெய்த் திருத்தணிப் பெருமானே!"

என்ற வரிகள் உணர்த்துகிறது. தமிழ் வழங்கும் நிலத்தின் வடஎல்லையில் சிறந்தொளிரும் திருத்தணிகையை

"சிறப்புறப் பிரித்தறத் திறத்தமிழ்க் குயர்திசை
சிறப்படைத் திருத்தணிப் பெருமாளே"

என்று தமிழகத்தின் வட எல்லையைக் குறித்துப் பாடியுள்ளார்

இவைகள் தவிர தேவரும் மூவரும் தணிகையைத் தொழுதது; இந்திரநீலச் சுனையின் சிறப்பு; வள்ளியை மணந்தது: திருத்தணிகையில் முத்தமிழும் சிறந்திருந்தது; சரவணப் பொய்கை குறித்தும் அருணகிரிநாதர் தமது 'திருப்புகழில்' ஏராளமான பாடல்கள் பாடியுள்ளார். இவரது காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். இவர் இயற்றிய 'கந்தர் அலங்காரம் என்ற நூலில் திருத்தணிகைப் பற்றி இரு பாடல்கள் பாடியுள்ளார். தேவரீரை வணங்காத தலையும், காணாத கண்ணும், தொழாத கையும், பாடாத நாவும் ஆகிய இவைகளை எனக்குப் படைக்க அடியேன் அயனுக்குச் செய்த பிழையாது என்று

"கோடாத வேதனுக் கியான் செய்த குற்றமென் கின்றெறிந்த
நாடாள னேதென் றணிகைக் குமர நின்றண்டை யந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவ மெனக்கே தெரிந்து படைத்தனனே"

என்ற பாடலில் கேட்கிறார். திருத்தணிகேசா! கந்தப்பெருமாளே! குமாரக் கடவுளே! பாவையர் பார்வையிற் பட்டுழலுந் துன்பத்தைத் தீர்க்கருள் புரிவீர் என்பதை

"பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வை
யிற்பட்டுழலுஞ்
சிந்தா குலத்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய
வேண்டுமுருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக்
குன்றளிற்குங்
கந்தா இளங்குமரா அமராவதி காவலனே"

என்று திருத்தணி முருகனைப் போற்றிப் பாடியுள்ளார்.

## கந்தப்பையர்

கந்தப்பையர் இயற்றிய நூல்[1] 18-ஆம் நூற்றாண்டினை சேர்ந்ததாகும். இவர் ஸ்ரீ கச்சியப்ப முனிவருடைய மாணாக்கர். இப்போது திருத்தணிகையில் "சீர்கருணீகர் மடம்" என்று வழங்கும் இடத்தில் வாழ்ந்து வந்தார். திருத்தணி முருகன் மீது இவர் 'திருத்தணிகைப் புராணம்', 'திருத்தணிகைத் திருவிருத்தம்', 'திருத்தணிகைச் சந்நிதி முறை' முதலிய நூல்களும், வசன நூல்களும் எழுதியுள்ளார்.

## கச்சியப்ப முனிவர்

கச்சியப்பரின் திருத்தணிகைப் புராணம் அவருடைய பன்னூலறிவையும், கம்பீரத்தையும் வெளிப்படுத்துகிறது. வடமொழியில் இதற்கு முதல் நூல் ஒன்றுண்டு. ஆனால் இப்போது வடமொழி நூல் கிடைக்கவில்லை.

". . . . வடமொழிக் கெதிரேயானும் தீதிலாத
தமிழினாலே செப்புறுந் தன்மை"
"வளமான வடமொழியில்
விளங்குயிருள் தணிகைவரை
மான்பியத்தைத் . . . . ."

என்ற வரிகள் வடமொழியிலிருந்த நூலைக் குறிப்பிடுகின்றது.

மூர்த்தி தலம், தீர்த்தம், இவற்றின் சிறப்புக்களையும், பூசித்தோர் செய்திகளையும் கந்தப்பையரின் தணிகாசல புராணத்தில் காணலாம்.

---

1. தணிகாசல புராணம்

ஆபத்சகாய வினாயகர்[1], செங்கழுநீர் வினாயகர் பற்றி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆபத்சகாய வினாயகரைப் பற்றி

"தூவச்ச காய யில்வேல் சுந்தரனை வள்ளி புனம்
மேவச்ச சாயனென வேழஅரு முழுமையுங் கொண்
ஆவச்ச காயனெனு மைந்தரனை யவனருளார்
பாவச்ச காயமலப் பற்றற்றயாம் பற்றுவோம்"

என்று பாடியுள்ளார்.

## முத்துசாமி தீட்சிதர்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் பல அரிய இசைக் கீர்த்தனைகளைத் தணிகை முருகன் மீது இயற்றியுள்ளார்.

## வடலூர் இராமலிங்க அடிகளார்

இவர் தமது திருவருட்பாவின் ஐந்தாம் திருமுறையில் தணிகையைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

"வெம்பும் உயிருக் கோர் உறவாய்
வேளை நமனும் வருவானேல்,
தம்பி தமையன் துணை ஆமோ?
தனயர் மனைவி வருவாரோ?
உம்பர் பரவும் திருத்தணிகை
உயர்மா மலைமேல் இருப்பார்க்குத்
தும்பைக் குடலை எடுக்காமல்
துக்க உடலை எடுத்தேனே!" என்ற பாடலும்,

தொல்லைக் குடும்பத் துயர் அதனில்,
தொலைத்தேன் அந்தோ! காலம் எல்லாம்
அல்லல் அகற்றிப் பெரியோரை
அடுத்தும் அறியேன் அரும்பாவி;
செல்வத் தணிகைத் திருமலைவாழ்
தேவா என்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை எடுக்காமல்
வீணுக்கு உடலை எடுத்தேனே!" என்ற பாடலும்,

---

1. தணிகாசல புராணம், கந்தப்பையர் இயற்றியது பாடல் 1,407 - 5,339

"அவல வயிற்றை வளர்ப்பதற்கே
அல்லும் பகலும் அதில் நினைவாய்க்
கவலை படுவ தன்றிச் சிவ
கனியைச் சேரக் கருதுகிலேன்;
திவலை ஒழிக்கும் திருத்தணிகைத்
திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளை குடலை எடுக்காமல்,
கொழுத்த உடலை எடுத்தேனே"

என்றும் திருத்தணிகை முருகனை இராமலிங்க அடிகளார் பலவாறாக பாடியுள்ளார். இவரது காலம்[1] கி.பி. 19-ஆம் நூற்றாண்டு ஆகும்.

## டாக்டர் உ.வே.சா.

இவர் கந்தப்பையரின் நூலுக்குக்[2] குறிப்புரை எழுதியுள்ளார். அதில் திருத்தணிகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவை பின்வருமாறு

"அத்தணிகைச் சண்முகவர் சந்நிதியி
திகட்கு மந்த ணர்க்கும்
பக்தியுடன் சங்கமர்க்கு மன்னதா
னங் கொடுத்தல்[3]"

என்பதிலுள்ள சங்கமென்பது சங்கமரென்பதும், அகத்தியர் தென்னாடு நோக்கி வருகையில் சீபருப்பதத்தைத் தரிசித்து அதன்

"பிசை வாழ் நாயகி பிரமராம்
பிகையே, குகைத்திருவடியான்"

மல்லிகார்ச்சுனனைப் பணிந்துப் போற்றியதாகக் கூறியதும் கந்தப்பையரது வீர சைவாபிமானத்தை நினைவூட்டுகின்றன.

திருத்தணி முருகனின் ஷடாக்ஷர மந்திரத்தை 31, 353, 410-ஆம் பாடல்களில் சிறப்பித்துள்ளார். கட்டட வகைகளையும் (பாடல் எண் 66), மர வகைகளையும், நைமிசாரணிய வனத்திலுள்ள மரங்களையும் (பாடல் 91) அரசு முதலிய 51 மரங்களையும் (223-5) தொகுத்துக் கூறியுள்ளார்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, சி. பாலசுப்பிரமணி, பக்கம் - 252
2. தணிகாசலபுராணம்
3. மேலது. பாடல் எண்: 130

திருத்தணி முருகனின் ஆறுமுகங்கள் உதித்த பொருள்களையும் இசைக் கருவிகளையும் (பா.404) தமது குறிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

## பிள்ளைத்தமிழ் நூல்கள்

பிள்ளைத்தமிழ் நூல்களும் திருத்தணி முருகனைப் பற்றிப் போற்றுகின்றன. அவற்றுள் வ.சு. செங்கல்வராயர் நூலும்,[1] நல் முருகேச முதலியார் நூலும்[2] குறிப்பிடத்தக்கவையாகும்.

திருத்தணி முருகனுக்கு பொட்டிட்டு பூவைத்துத் தாலாட்டும் அழகை,

"திருப் பூத்த விளையாடல் பயில்
திருத்தணிகை யிறை செங்கீரை யாடியருளே[3]" என்று பாடுகிறார்.

"தேனொழுகு பைங் குவளை மலருத்
தணிகை யிறை செங்கீரை பாடியருளே[4]" என்றும்,

"தேமருவு கல்லார மலர்த்
செருத் தணிகை யிறை செங்கீரை பாடியருளே[5]" என்றும்,

"அறத்திக ழன்பர் தொழுந்
தணிகைப் பரனாடு செங்கீரை"[6] என்றும் பலவாறாகப் பாடியுள்ளார்.

திருத்தணியிலுள்ள செங்கழுநீர் வினாயகர் மீது பிள்ளைத் தமிழ்[7] ஒன்று பாடப்பட்டுள்ளது. செங்கழுநீர் வினாயகர் மீது, காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய தலைப்பின் கீழ் நூல் பாடப்பட்டுள்ளது.

திருத்தணி முருகன் மீது ஈ.வே. வேங்கடசுப்பிரமணியம் அவர்களும் பிள்ளைத்தமிழ்[8] பாடியுள்ளார்.

---

1. திருத்தணிகை பிள்ளைத்தமிழ்
2. திருத்தணிகை பிள்ளைத்தமிழ் மூலமும் உரையும்
3. மேலது. 11
4. மேலது. 12
5. மேலது. 13
6. மேலது. 17
7. செங்கழுநீர் வினாயகர் பிள்ளைத்தமிழ் - திருவாவடுதுறை ஆதினம் - 1960
8. திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ்

## சுப்பிரமணிய பாரதியார்

இருபதாம் நூற்றாண்டின் இணையிலா தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் என்றால் மிகையாகாது. இவர் திருத்தணிகையினைப் பற்றியும் பாடியுள்ளார்.

"திருத்தணிகை மலைமேலே குமாரதேவன்
திருக்கொழுவீற் றிருக்கும் அதன் பொருளைக் கேளீர்:
திருத்தணிகை என்பதிங்குப் பொறுமையன்போ;
செந்தமிழ்கண் டீர்பகுதி தணிகை எனும் சொல்
பொறுத்தமுறும் தணிகையினாற் புலமை சேரும்;
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்றும்
அருத்தம்மிகு பழமொழியம் தமிழில் உண்டாம்;
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்"

என்று பாடியிருப்பதும் இங்கு நாம் உணர்ந்து இன்புறத்தக்கது. 'தணிகை' என்னும் சொல்லுக்குப் பொறுத்தல் என்பதும் ஒரு பொருளாதலின், "அடியார்களின் பிழைகளையும், பாவங்களையும் பொறுத்து அருள்புரியும் தலம் திருத்தணிகை" என்று கொள்ளுதலும் பொருந்தும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஏராளமான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவைகள் திருத்தணிகையின்மீது பாடப்பட்ட பக்திப் பாடல்களாகவும், வசனங்களாகவும் மிளிர்கின்றன. திருமுருகக் கிருபானந்த வாரியார், பித்துக்குளி முருகதாஸ், கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாலி போன்றோரும், பெங்களூர் ரமணியம்மாள், கே.பி. சுந்தராம்பாள் போன்ற பெண்பால் அறிஞர்களும் திருத்தணிகை மீது பக்திப் பாடல்கள் பாடியுள்ளனர். இதுதவிர டி.எம். சௌந்திர ராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி. சுசிலா, எல்.ஆர். ஈஸ்வரி, எஸ். ஜானகி, வாணிஜெயராம் போன்றோர் தங்களின் இனிமையான குரலில், திருத்தணிகை இறைவன் மீது பக்திப் பாடல்கள் பாடியுள்ளனர். திருத்தணி முருகனின் பெருமைகளை "தெய்வம்" "திருவருள்" "வருவான் வடிவேலன்" போன்ற திரைப்படங்களின் வாயிலாகவும் கூறியுள்ளனர்.

சங்ககாலம் முதல் இன்றுவரை "திருத்தணிகை" மீது ஏராளமான நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

❖❖❖

# கோயில்கள்

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதல் அவனுடைய வாழ்வில் இன்றியமையாத நிலை வகிப்பவை தெய்வங்களுக்கு எடுக்கப்படும் ஆலயங்கள், கோயில்கள். இயற்கையாகிய அன்னை பல சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழ வைக்கின்றாள். கதிரவனும், வெண்ணிலவும், நீரும், தீயும், காற்றும் இன்றேல் வாழ்வு இல்லை. சக்திகளை எப்பொழுதும் தனக்கு நல்வாழ்வு மலரவேண்டி மனிதன் வணங்கினான். இச்சக்திகளைப் பல்வேறு உருவங்களில் கண்டு, அவற்றிற்கு கோயில்கள் எழுப்பி நாள்தோறும் வழிபட்டான்.

தென்னிந்தியாவில் புராண, இதிகாசங்கள் அடிப்படையில் பல ஆலயங்கள் தோன்றியுள்ளன. இவற்றிலே முருகப்பெருமானுடைய கோயில்கள் சிறந்து திகழ்கின்றன. திருவனந்தபுரத்தில் ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்தோன் கோயிலும், திருவரங்கத்திலுள்ள திருமர்மார்பன் கிடந்த கோயிலும், வீங்க நீரருவி வேங்கடத்தின் உச்சி மீமிசை செங்கணை நெடியோன் நின்ற கோயிலும் தொன்று தொட்டு சிறந்து விளங்கும் கோயில்களாகும்.

"தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுன்
பூவியலும் முடி பொன்றுவித்த பழி போயற
ஏவியலுந் சிலையண்ணல் செய்த இராமேச்சுரம்"

- சம்பந்தர்

என்று இராமபிரானால் பூசிக்கப்பட்டது இராமேச்சுரம். இதுபோன்ற பலபல கோயில்களும் தொன்றுதொட்டே தென்னகத்தில் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் தமிழகத்தின் வடவெல்லையான திருத்தணிகையும் ஒன்றாக திகழ்கின்றன.

தென்னிந்திய மக்களை தன்பாற் ஈர்த்துக் கொண்டிருக்கும் திருத்தணிகையின் புகழுக்குக் காரணம் அங்கு அமைந்திருக்கும் கோயில்களேயாகும். அக்கோயில்களில் மிகவும் பிரசித்திப் பெற்ற கோயில், திருமலைமேல் நின்றருளி இருக்கும் சுப்ரமண்யர் கோயிலாகும். இது தவிர ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தனது இயற்கை வனப்பை இழக்காமல் இருக்கும் பசுமையும் கருமையும்

கலந்த கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும் வீரட்டானேசுவரர் கோயிலும் ஒன்றாகத் திகழ்கிறது. இதனைக் கல்வெட்டுகள்

"கருங்கல்லால் கற்றளியா நிற்க"

என்று குறிப்பிடுகிறது. இக்கோயில் நந்தியாற்றின் வடகரையிலுள்ளது. இவ்வாற்றங்கரையின் தென்கரையில் ஆறுமுகசுவாமி கோயிலும், விஜயராகவப்பெருமாள் கோயிலும் திருத்தணியிலுள்ள கோயில்களில் முக்கியமானதாகும். இக்கோயில்களின் கட்டட அமைப்பு, சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்புத்திருமேனிகள் பற்றி ஒன்றன் பின் ஒன்றாக தனித்தலைப்பின் கீழ்க் காணலாம்.

# வீரட்டானேசுவரர் கோயில்

திருத்தணியில் கிழக்கு நோக்கி ஓடும் நந்தியாற்றின் வடகரையில் வீரட்டானேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் திருத்தணி ரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் பசுமையான வயல்களுக்கு இடையேயும், மாமரங்களின் கீழேயாயும் அமைந்திருப்பதால் இயற்கையன்னையும் இக்கோயிலுக்கு மேலும் பெருமை சேர்க்கிறாள். பிற்கால பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயிலின் அமைப்பு, கட்டடக்கலை, சிற்பங்கள் போன்றவை வரலாற்றறிஞர்களைப் பெரிதும் ஈர்க்கின்றன.

## கட்டட அமைப்பு

இக்கோயிலின் கட்டட அமைப்பு அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம் போன்ற கட்டட அங்கங்களைக் கொண்டிருக்கிறது. அதிட்டானம் பகுதியில் உபானம், முப்பட்டை, கண்டம், பட்டிகை போன்ற பகுதிகளைக் கொண்டு எளிமையாகக் காட்சியளிக்கிறது. கருவறையின் மூன்று புறமும் மகர தோரணங்களால் அழகுபெறும் கோட்டங்களும், அர்த்தமண்டபத்தின் வடக்கு, தெற்கு பகுதியில் இரு கோட்டங்களும் உள்ளன. பிரஸ்தரப் பகுதியின் மேலுள்ள விமானம் "தூங்கானை மாடம்" என்னும் அமைப்பைக் கொண்டுள்ளது. சிகரத்தின் மேல் மூன்று ஸ்தூபிகள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டும் காலத்தால் முற்பட்டது. மற்ற இரண்டும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் விமானம் முழுவதும் கருங்கல்லால் ஆனது. கருங்கல் பசுமையும், கருமை நிறமும் கொண்ட வழவழப்பான அமைப்புடையது. இதனைக் கல்வெட்டும் குறிப்பிடுகிறது. அர்த்தமண்டபத்தின் முன் உள்ள முன்மண்டபம் சாதாரண கருங்கல்லால் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். இதன்

வடக்குச் சுவரில் அம்மன் கோயில் ஒன்று சிறிய அளவில் உள்ளது இதனைச் சுற்றி ஒரே திருச்சுற்று மட்டும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டுள்ளது. தற்போது ஆற்றங்கரை அருகில் இருப்பதால் திருச்சுற்றின் தென்பகுதியில் நுழைவாயில் உள்ளது.

## விமான அமைப்பு

இக்கோயில் விமானம் நின்ற நிலையில் தூங்கும் யானையைப் போன்று இருத்தலின் "தூங்கானை மாடம்" என்று வழங்கப்படுகிறது இது தொண்டைமண்டலத்திற்கு உரிய விமான அமைப்பாகும். தூங்கானை மாடம் என்பதை வடமொழியில் "கஜபிருஷ்ட விமானம்" என்பர். போதிகைக்கு மேலே பூதகண வரிகளை மூடினாற் போன்று கபோதம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குமேல் யாளி வரி செல்கிறது யாளி வரி வரைச் சதுரமாகச் சென்ற விமானம், இப்போது கிழக்குப் பகுதி தவிர பிற பகுதிகளனைத்தும் வட்டமாக நீண்டு செல்கிறது கிரீவப் பகுதியில் அன்னப்பறவை வரிசை செல்கிறது. சிகரத்தின் தெற்கு, மேற்கு வடக்குப் பகுதியில் கோஷ்டங்கள் கலைகளின்றி காணப்படுகின்றன. கோட்டங்களுக்கு மேலே கூடுப்பகுதி தெரிகிறது. கீரிவப் பகுதியில் இருந்து சிகரத்தின் மேல்பகுதி வரை வளைந்து செல்கிறது. யானை படுத்திருப்பது போன்று இதன் பின் அமைப்பு அமைந்துள்ளது. சிகரத்தின் மேல்பகுதியில் பெரிய அளவிலான பத்மம் காணப்படுகிறது. பத்ம வரிக்கு மேலே மூன்று ஸ்தூபிகள் வைக்கப்பட்டுள்ளது. இவை கற்களால் ஆனவை. விமானத்தின் கிழக்குப்பகுதி கபோதத்திற்கு மேல் பகுதியில் இருந்து வளைந்து செல்லாமல் நேராகவே செலகிறது. நுனிப் பகுதிகள் மட்டும் வளைந்து காணப்படுகிறது. இதன் நடுவிலுள்ள கோட்டத்தில் சிவனும், பார்வதியும் அமர்ந்துள்ளனர்.

**சிவன் :** இடது காலைத் தொங்கவிட்டு வலது காலை மடக்கி சாதாரண பீடத்தின் மீது அமர்ந்துள்ளார். பின்னிரு கரங்களில் வலது கரத்தில் மழுவும், இடது கரத்தில் மானும் முன்னிரு கரங்களில் வலது கை அபயமாகவும், இடது கை தொடையினைத் தொட்டுள்ள நிலையிலும் காணப்படுகின்றன.

**பார்வதி :** சிவனுக்கு இடப்புறம் அமர்ந்து காணப்படும் நிலை. கரங்களில் மலரும், தொடைமீது வைத்தும் காணப்படுகிறது.

இவ்விமானத்தின் அதிட்டானப் பகுதியின் பட்டிகையும், கபோதத்தின் மேல்பகுதியிலுள்ள வரி, சிகரத்தின் கீழ்பகுதிகளில் சாதாரணமான கருங்கல் பலகைகள் காணப்படுகின்றன. பிற அமைப்புகள் அனைத்தும் பசுமை கலந்த வழவழப்பான கருங்கற்களால் கட்டப்பட்டவையாகும். தற்போதுள்ள தூங்கானை மாடக் கோயில்களில் காலத்தால் முற்பட்டது திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில் விமானமாகும்.

இக்கோயிலின் கருவறையில் உள்ள லிங்கம் பட்டைகளின்றி எளிமையாகக் காணப்படுகின்றன. லிங்கம் மணற்கல்லிலானது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் எதிரே நந்தியொன்று உள்ளது. இது காலத்தால் பிற்பட்டதாகும்.

## கோட்டங்கள்

கோட்டங்களின் அமைப்பு இக்கோயிலின் காலத்தை கணிக்க பெரிதும் உதவுகின்றன. கருவறையினைச் சுற்றி மூன்றும், அர்த்த மண்டபத்தில் இரண்டுமாக ஐந்து கோட்டங்கள் உள்ளன. கோஷ்டங்கள் பல்லவர் காலத்தவை. இவைகளுக்கு மேலேயுள்ள தோரணங்கள் மகர தோரணங்களாகும். தோரணங்களின் நடுவில் லிங்கம், மனித உருவ தலை, பறவைகள் போன்றவை செதுக்கப்பட்டுள்ளன.

## விநாயகர்

அர்த்தமண்டபத்தின் தென்பகுதியிலுள்ள கோட்டத்தில் வினாயகர் பத்ம பீடத்தில் இடது காலை ஊன்றி, வலது காலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். நான்கு கைகளில் பின்னிரு கைகளில் தந்தம், பாசமும், முன்னிரு கைகளில் வலது கையில மோதகமும், இடது கை தொடை மீதும் வைக்கப் பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது.

## தட்சணாமூர்த்தி

கருவறையின் தென்புற தேவகோட்டத்திலுள்ள தட்க்ஷிணாமூர்த்தி உருவம் ஆலமரத்தின் அடியில் பீடத்தின் மீது இடது கால் குத்திட்டும் வலது கால் தொங்கவிட்டு இருக்கை மீது வைத்து அமர்ந்த நிலையிலுள்ளது. பீடத்தின் நடுவில் இரண்டு மான்கள் எதிர்எதிரே அமர்ந்துள்ளன. பீடத்தின் வலப்புறம் பாம்பும், இடப்புறம் எலியும் செதுக்கப்பட்டுள்ளன. மேல் வலது கையில் அக்கமாலையும், மேல் இடது கையில் மலர் ஏந்தியும், கீழ் வலது

கை சின் முத்திரையுடனும், கீழ் இடது கையில் நூல் ஏந்தியும் காணப்படுகிறார். கழுத்தில் ருத்ராக்ஷ மாலையும், காதுகளில் அணிகலன்களும் காணப்படுகின்றன. மார்பில் உபவீதம் ஐந்து நூல்களாகப் பிரிந்து செல்கிறது. கைகளில் வாகுபந்தம் அழகு செய்கின்றது.

## விஷ்ணு

மேற்கு தேவகோட்டத்தில் மூன்று அடி உயரமுள்ள விஷ்ணு சாதாரண பீடத்தின்மீது வலது காலை மடக்கி இடது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். மேல் கைகளில் பிரயோக சக்கரமும், சங்கும் உள்ளன. கீழிரு கைகள் அபயம், தொடை மீதும் உள்ளார். கணுக்கால் வரை ஆடை காணப்படுகிறது. காதுகளில் மகர குண்டலங்களும், கைகளில் வளையங்களும், மார்பில் உபவீதமும், வயிற்றில் செல்லும் உதரபந்தமும், வாகுபந்தமும் உடைய விஷ்ணு கிரீட மகுடத்துடன் விளங்குகிறார். தலைக்குப் பின் பிரபை தெரிகிறது. விஷ்ணுவின் தலைக்கு மேலே குடையும், இரண்டு சாமரமும் காணப்படுகின்றன.

## பிரம்மா

பிரம்மா தனது வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு பத்மபீடத்தின் மீது அமர்ந்துள்ளார். கணுக்கால் வரை ஆடை காணப்படுகிறது. நான்கு கைகளில் மேலிரு கைகளில் அக்ஷமாலை, கெண்டி, கீழிரு கைகளில் அபயம், விருச்சிக முத்திரை, நான்கு முகங்களில் மூன்று மட்டும் தெரிகிறது. காதுகளில் மகர குண்டலமும், உதரபந்தமும், உபவீதமும் கழுத்தில் பட்டையான அணிகலனும், வாகு பந்தமும், தலைக்கு மேலே குடையும் காணப்படுகிறது. இருபுறமும் சாமரம் உள்ளன. இந்த கோட்டத்தின் கீழ்தான் கோமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

## கொற்றவை

அர்த்தமண்டபத்தின் வடக்கு தேவகோட்டத்தில் கொற்றவை நான்கு கரங்களுடன் நின்றவண்ணமிருக்கிறாள். பிரயோக சக்கரம், சங்கு, அபயம், தொடைமீது கை, கைகளில் வளையல்களும், கால்களில் காப்புகளும் உள்ளன. மார்பு கச்சையும், ஆடைகள் முழங்காலுக்கு மேல்வரையிலும் உள்ளன. காதுகளில் பத்ர குண்டலங்கள் உள்ளன. இடையில் இடைக்கச்சை, இடைக்கட்டு கணுக்கால் வரை உள்ளது.

## சப்தமாதர்கள்

அர்த்தமண்டபத்தின் தென்பகுதியில் ஏழு சப்தமாதர்கள் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## பிராமி

பிராமி சப்தமாதர்கள் வரிசையில் முதலில் வைக்கப்பட்டுள்ளது. அன்னப்பறவை வாகன பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது. முன்னிரு கரங்களில் வலது கை அபய முத்திரையுடனும், இடது கை தொடை மீதும், பின்னிரு கரங்களில் வலது கை அக்கமாலையுடனும், இடது கை கெண்டியுடனும் காணப்படுகின்றன. இங்குக் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் பீடத்தின் நடுவே உள்ளன. கணுக்கால் வரை ஆடையும், மார்பில் குஜபந்தம் காணப்படுகிறது.

## மாகேஸ்வரி

ரிஷப வாகனத்தின் மீது அமர்ந்த நிலையில் முன் வலது கை அபய முத்திரையுடனும், இடதுகை தொடைமீதும் உள்ளன. வலது கையில் மழுவும், இடது கையில் மானும் ஏந்தியுள்ளாள். தலையில் ஜடாமகுடம், இடைக்கச்சை தொடை வரையும், மார்பில் குஜபந்தம், கழுத்தில் ஆபரணங்கள் அலங்கரிக்கின்றன.

## கௌமாரி

மயில் வாகனத்தின் மீது கௌமாரி தனது வலதுகாலை மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் பின்னிரு கைகளில் வலது கையில் அக்கமாலையும், இடது கையில் கெண்டியும், முன்னிரு கைகளில் வலது கையில் அபயமும், இடது கை தொடை மீதும் காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுடம், நெற்றியில் கன்னி மாலை, மார்பில் குஜபந்தம், இடையில் இடைக்கச்சை, இடைக்கட்டு ஆகியவை அணிசெய்கின்றன.

## வைஷ்ணவி

கருடவாகனத்தின் மீது அமர்ந்த நிலையில் வலது காலை மடக்கி, இடது கால் தொங்கவிட்டு காணப்படுகிறாள். பின்னிரு கரங்களில் வலது கையில் பிரயோக சக்கரமும், இடது கையில் சங்கும், முன்னிரு கரங்களில் வலது கை அபய முத்திரையிலும்,

இடது கை தொடை மீதும் காணப்படுகின்றன. தலையில் கிரீட மகுடம், தலைக்குப் பின்னால் வட்ட பிரபை, மார்பில் குஜபந்தம் காணப்படுகிறது.

### வராகி

சிம்ம வாகனத்தின் மீது வராகி தனது வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு காணப்படுகிறாள். பின்னிரு கரங்களில் வலது கரத்தில் பிரயோகச் சக்கரமும், இடது கையில் சங்கும், முன்னிரு கரங்களில் வலது கை அபயமுத்திரையிலும், இடது கை தொடை மீதும் காணப்படுகின்றன.

### இந்திராணி

யானை வாகனத்தின் மீது இந்திராணி வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் பின்னிரு கைகளில் வலது கையில் வஜ்ஜிரமும், இடது கையில் பாசமும், முன்னிரு கைகளில் வலது கை அபய முத்திரையிலும் இடது கை தொடை மீதும் வைக்கப்பட்டுள்ளது.

### சாமுண்டா

சாமுண்டா அமர்ந்த நிலையில் முன்னிரு கைகளில் வலது கை அபயமாகவும், இடது கை தொடைமீதும் வைக்கப்பட்டுள்ளது. பின்னிரு கரங்களில் வலது கையில் சூலமும், இடது கையில் உடுக்கையும் காணப்படுகிறது. இவளது காதில் பிணத்தையே அணிகலனாகக் காட்டப்பட்டுள்ளது. மார்புக் கச்சையாகப் பாம்பு சுற்றப்பட்டுள்ளது. ஜ்வாலை மகுடம், இங்கு பேய் வாகனம் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

### சூரியன்

நின்ற நிலையிலுள்ள சூரியனின் இரு கைகளிலும் தாமரை காணப்படுகின்றன. தலைக்குப் பின் ஒளிவட்டம் உள்ளது.

### விநாயகர்

அர்த்தமண்டபத்திலுள்ள விநாயகரைப் போன்றே முன்மண்டபத்திலுள்ள இவ்விநாயகரும் உள்ளார். துதிக்கை இடஞ்சுழியாக உள்ளது. காதுகளில் மணிகள் தொங்குகின்றன.

### துவாரபாலகர்கள்

அர்த்தமண்டபத்தின் நுழைவாயில் இருபுறமும் இரண்டு துவாரபாலகர்கள் உள்ளனர். இடப்புறம் உள்ள துவாரபாலகரின் வலது கால் நேராகவும், இடது கால் வளைந்தும் முன் இடது கை கதையின் மீது ஊன்றியும், இடது கை சுட்டும் விரலாக உள்ளன. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் பத்ரகுண்டலங்கள், இடையில் ஆடை முட்டி வரை உள்ளது. வாயின் இரு புறமும் கோரை பற்கள் நீண்டு இருக்கின்றன. தலை விரிசடையாக காணப்படுகிறது.

வலதுபுற துவாரபாலகர் நான்கு கைகளுடன் இடம் பெற்றுள்ளார். வலது கால் நேராகவும், இடது கால் சற்று வளைத்து நின்ற நிலையில் உள்ளது. மேலிரு கைகளில் வலது கை அடிக்கும் கை போன்றும், இடது கை தளிர் கையாகவும், கீழ் வலது கை தர்சினி முத்திரையிலும், இடது கை கதை மீதும் வைத்துள்ளனர். இவ்விரு துவாரபாலகரின் சிற்பங்கள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாகும். இதுபற்றி இக்கோயிலின் இறுதி தலைப்பின் கீழ் காணலாம்.

## வீரட்டானேசுவரர் - ஓர் ஆய்வு

வீரட்டானேசுவரர் கோயில் எடுக்கப்பட்டதைப் பின்வரும் கல்வெட்டு[1] ஒன்று குறிப்பிடுகின்றது.

"ஸ்வஸ்திஸ்ரீ திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு கருங்கல்லால் கற்றளியா நிற்க - விரும்பியே நற்கலைகளெல்லாம் நவின்ற சீர் நம்பியப்பி பொற்பமையச் செய்தான் புனைந்து இவெண்பா பெருமானடிகள் தாம் பாடி அருளுத்து" என்று முடிகிறது. இக்கோயில் நம்பியப்பி என்பவரால் கருங்கல்லால் கட்டப்பட்டது என்று இக்கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் நரசிம்மவர்மனும் அவனுக்குப் பிறகு ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களும் எடுப்பித்த கருங்கற் கோயில்கள் மிகச்சிலவேயாகும். இவற்றுள் திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில் ஆராய்ச்சி செய்யும் வகையில் அமைந்துள்ளது. "திருத்தணிகைக் கோயில் கற்றளியாக அமைத்தவன்

1. S.I.I. Vol. XII - No. 94

நம்பியப்பி என்ற தலைவன் என்பதும் இச்செய்தியைக் குறித்த மேற்கண்ட பாடலை இயற்றியவன் ஓர் அரசனாயிருத்தல் வேண்டும் என்பதும் நன்கு துணியப்படும்"[1] என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் குறிப்பிடுகிறார். அக்கோயிலுள்ள மற்றொரு கல்வெட்டு[2] அபராஜித விக்கிரமவர்மனது 18-ஆம் ஆட்சியாண்டில் நம்பி அப்பி என்பான், இங்கு நடைபெற வேண்டிய நாள் வழிபாடு முதலானவற்றிற்கு நிவந்தமாக நிலம் அளித்ததை உணர்த்துகின்றது. எனவே நம்பி அப்பி என்பவனது திருத்தணிகைக் கோயில் திருப்பணியைப் புகழ்ந்து வெண்பா இயற்றியவன் பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் என்பது தேற்றம். இவன் தன் நண்பர்களாகிய முதலாம் ஆதித்த சோழன், கங்க மன்னன் முதல் பிருதிவிபதி ஆகியோர் துணைகொண்டு, இரண்டாம் வரகுணப் பாண்டியனைத் திருப்புறம்பயப் பெரும் போரில் கி.பி. 880-ஆம் ஆண்டில் வென்று வாகை சூடியவன் (பிற்கால சோழர் சரித்திரம் - தி. வை. சதாசிவ பண்டாரத்தார்). எனவே பல்லவ அரசர்களுள் இறுதியில் ஆட்சி புரிந்தவன் இவனேயாவான். இவனது ஆட்சிக் காலமாகிய கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருத்தணிகையில் அமைக்கப்பட்டுள்ள தூங்கானை மாடக்கோயில், பல்லவ ஆட்சியின் இறுதிக்காலத்தில் தோன்றிய ஒரு புதிய அமைப்பைக் கொண்டுள்ளது என்பது அறிஞர்களது கருத்து.[3] எனவே தூங்கானை மாடக் கோயில்கள் எல்லாம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலும் அதற்குப் பின்னரும் கட்டப்பெற்றவை என்பதும் அவை அபராஜிதவர்மன் காலத்துக் கோயில் அமைப்பு என்ற ஒரு வகைத் தனி அமைப்புடையவை என்பதும் இவர்கள் கண்ட முடிவுகளாகும்.[4]

"திருத்தணிகையில் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ள வீரட்டானேசுவரர் கோயில் பிற்காலப் பல்லவர்களின் கட்டடக் கோயில்களின் சிகரமாகத் திகழ்கிறது என்றும் இதனைக் கட்டியவன் அபராஜிதவர்மன் என்று எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்[5] அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். சோழர் காலக் கட்டடக்கலைப்

1. கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்
2. S.I.I. Vol. XII - 95
3. Pallava Architecture, P. III, by A.H. Longhurst
4. Pallava Antiquities by Jouveau Dubrell Vol. II, pp. 18 - 24
5. Early Chola Temples by S.R. Balasubramaniam Page 247

பற்றி ஆய்வுகள் செய்த டக்ளஸ் பார்ரெட் என்பவர் வீரட்டானேசுவரர் கோயில் விமான அமைப்பை முதல் என்ற பட்டியலில் சேர்த்துள்ளார்.[1] இவர் அர்த்தமண்டபத்தையும் இதே பட்டியலில் சேர்த்துள்ளார். முதல் பட்டியலில் கட்டப்பட்ட கோயில்கள் கி.பி. 900-950 வரையுள்ள ஆண்டுகளில் கட்டப்பட்ட கோயில்களாகும். ஆனால் அபராஜிதவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டு கி.பி. 888 ஆண்டிற்கு சமமான ஆண்டாகும். எனவே இக்கோயில் சோழர் காலக் கட்டடக்கலையின் முதல் பிரிவினுள் அடங்காது என்பது தேற்றம்.

## ஒப்பீடு

திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில் தூங்கானை மாடக் கோயிலாகும். இது முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டது. இதேபோன்று தூங்கானை மாட வடிவிலான பல கோயில்கள் உள்ளன. பல்லவ மன்னன் இராஜசிம்மனால் உருவாக்கப்பட்ட மாமல்லபுரம் ஐந்து ரதங்களில் ஒன்றான சகாதேவ ரதம் இதே கட்டட அமைப்பைக் கொண்டதாகும்.. மேலும் சகாதேவர் ரதம் பாறையினை வெட்டி அமைக்கப்பட்ட ஒற்றைக் கற்கோயிலாகும். ஆனால் வீரட்டானேசுவரர் கோயில் கட்டடக் கோயிலாகும். குடிமல்லத்திலுள்ள பரமேஸ்வரக் கோயிலும், ஓரகடம் என்ற ஊரிலுள்ள வாடமல்லீஸ்வர கோயிலும் தூங்கானை மாடக் கோயிலாகும். . ஆனால் இக்கோயிலின் கபோதகத்திற்கு மேலுள்ள பகுதிகள் செங்கற்களினாலும், சுதையினாலும் கட்டப்பட்டவையாகும். ஆனால் திருத்தணியிலுள்ள அழகுவாய்ந்து ரசிக்கக் கூடிய இக்கோயில் முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளதால் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் தனது பழம் பெருமைகளை இழக்காமல் நின்றும் நிலைத்து நிற்கிறது"[2] என்று வில்லியம் வில்லட்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறார். காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில்களுக்குப் பிறகு கருங்கற்களால் கோயில்கள் கட்டும் முறை ஏற்பட்டது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். மாமல்லபுர முகுந்த நாயனார் கோயிலும், பனமலை தாளகிரீஸ்வரர் கோயிலும்

---

1. Early Chola Architecture and Sculpture Page 65-66
2. The Temple at Virattanesvara - Tiruttani by Douglass Barrot (1958) William Willets (1961)

கருங்கற்களால் கட்டப்பட்டவை. இவை ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் எவ்வித தட்பவெப்ப நிலைகளுக்கும் சிதையாமல் பழமைப் பொலிவுடன் திகழ்கின்றன என்றும் கூறுகிறார்.[1]

அபராஜிதவர்மன் காலத்தில் பல்லவப் பேரரசு சுருங்கிவிட்டது. காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், மாமல்லபுரச் சிற்பங்கள் அமைக்கப்பட்டபோது கட்டடக்கலை சிறப்பான நிலையில் இருந்தது. ஆனால் திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலின் கோட்டங்களில் மட்டும் சிற்பங்களை வைத்து பிற இடங்களில் சிற்பங்களை வைக்காமல் விட்டுவிட்டனர். இக்கோயிலின் சிற்பங்கள், கட்டட அமைப்பு போன்றவை பாதாமி சாளுக்கியர்களின் கோயில்களின் அமைப்பை ஒத்துள்ளன என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார்.[2]

## சிற்பங்கள் - ஓர் ஆய்வு

பல்லவ கலைகளினின்று சோழர் கலை எவ்வாறு பிரிந்து சென்றது என்பதை அறிய விரும்பும் ஆராய்ச்சியாளர்களுக்கு இக்கோயில் சிற்பங்கள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. இக்கோயிலின் கட்டட அமைப்பு மிக எளிமையானது.

தேவகோட்டங்களிலுள்ள தட்சணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, கொற்றவை, வினாயகர் போன்ற சிற்பங்கள் சிற்பக்கலையின் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. மேலும் யாளிவரிகளும், பூத கணங்களும், துவாரபாலகர் சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவையாக உள்ளன. Douglass Barret அவர்கள் "The Two (door gardians) . . . . . . are master process and their combination of grace and magnificent vitality makes them perhaps the first representations of door gardians in India" என்று தனது நூலில்[3] குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ள சப்தமாதர்களின் சிற்பங்கள் மிகப் புகழ்பெற்றவை. இச்சப்தமாதர்களின் பீடத்தின் கீழுள்ள வாகனங்கள் அளவில் பெரியவை. இவைகளில் நரசிம்மத்தினையும், பேய் வாகனத்தையும்

1. Ibid., Page 4
2. Prof. K.A. Nilakanta Sastri Felicitation volume, Wall decoration in Chola Temples - by V.M. Hari Rao
3. The Temple of Virattanesvara at Tiruttani, Dougless Barrot, Page 5

குறிப்பிட்டுச் சொல்லலாம். பல்லவர் காலக் கோயிலான இக்கோயிலின் கட்டட மற்றும் சிற்பக்கலை ஒட்டியே சோழர் காலக் கட்டடக்கலை வளர்ச்சியுற்றது எனலாம். இதனை இக்கோயில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை எடுத்தியம்புகின்றன.

பல்லவர் காலக் கோயில்களில் கருவறைக்கு பின்னால் சோமாஸ்கந்தர் உருவம் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால் இங்கு சோமாஸ்கந்தர் சிற்பம் அமைக்கப்படவில்லை. அதனால் இது பல்லவர் காலக் கோயில் இல்லை எனக் கூற இயலாது. விமானத்தின் கிழக்குப் பகுதி கிரீவ கோட்டத்தில் ஸ்கந்தர் இன்றி சிவனும், பார்வதியும் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர்.

பிற்கால பல்லவர் காலத்தில் தேவகோட்டங்களின் மேலுள்ள மகர தோரணங்கள் நீண்டு செல்லாமல் முடிவடைகிறது. இந்த அமைப்பை இங்கே காணலாம். பூதகணங்கள் ஒன்றையொன்று கயிறுகளால் கட்டப்பட்டது போன்று காணப்படுகின்றன.

இதே காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் தஞ்சையிலும், திருச்சி மாவட்டத்திலும் உள்ளன. இக்கோயில் நார்த்தமலையிலுள்ள “விஜயாலய சோழீஸ்வரத்”திற்கு முற்பட்டதாகும். இக்கோயில் துவாரபாலகர் சிற்பங்கள் காவேரிப் பாக்கத்திலுள்ள துவாரபாலகர் சிற்பங்களை ஒத்துள்ளன என்று கூறுகின்றனர்.[1]

---

1. The Temple of Virattanesvara at Tiruttani, William Willets 1761

❖❖❖

# சுப்பிரமணிய சுவாமி கோயில்

தென்னிந்திய கோயில்களில் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் புகழ்பெற்ற கோயிலாகும். திருத்தணி மலை மேல் சுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அமைப்பு, கட்டட அமைப்பக்கள், திருச்சுற்று மாளிகை, சிற்பங்களின் அமைதி, விமானங்கள், கோபுரங்கள் அமைப்பு ஆகியவை பற்றி ஒவ்வொன்றாக இங்கு காணலாம்.

## கோயிலின் அமைப்பு

கோயிலின் அமைப்பு சரவணப்பொய்கையில் இருந்து துவங்குகிறது. மலைக்குமேல் செல்ல 365 படிக்கட்டுகளைக் கடந்து செல்லவேண்டும். மலைமீது பேருந்துகள் செல்லும் அளவுக்கு சாலை வசதி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர துணை நடைபாதை ஒன்றும் படிக்கட்டுகளின் பாதையை ஒட்டிச் செல்கிறது. கோயில் நான்கு திருச்சுற்றுக்களுடன் கட்டப்பட்டுள்ளன. முதல் திருச்சுற்றின் நடுவில்தான் சுப்பிரமணிய சுவாமியின் கருவறை அமைந்துள்ளது. சுப்பிரமணிய சுவாமி கோயில் வள்ளி, தெய்வானையின் கோயில்களுக்கு மேல் விமானங்கள் அமைந்துள்ளன. இரண்டாம் பிரகாரத்தின் கிழக்கிலும், மேற்கிலும், முதல்வெளிப் பிரகாரத்தின் கிழக்கிலும் கோபுரங்கள் சிறிய அளவில் கட்டப்பட்டுள்ளன.

## கட்டட அமைப்பு

கோயிலின் கட்டட அமைப்பு அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம் போன்ற பகுதிகளைக் கொண்டிருக்கிறது. அதிட்டானப் பகுதியில் உபானம், முப்பட்டை குமுதம், பட்டிகை போன்ற கட்டட அமைப்புகளும் பித்தியில் வேதிகை, பலகை, போதிகை, கபோதம் போன்ற அமைப்புகளும் உள்ளன. இதற்கு மேலே விமானம் அமைந்துள்ளது. விமானப் பகுதி முழுவதும் சிமெண்டினால் புதுப்பிக்கப்பட்டு, வண்ண ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கருவறை வெளிப்புறச் சுவரில் கோட்டங்கள் காணப்படுகின்றன. அர்த்தமண்டபத்திலும் கோட்டங்கள் உள்ளன. வள்ளி தெய்வானை ஆகிய இருவருக்கும் தனித்தனியே ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையைச் சுற்றி முதற் திருச்சுற்று மாளிகை உள்ளன.

## திருச்சுற்று மாளிகைகள்

திருத்தணி கோயில்களின் திருச்சுற்று மாளிகை தஞ்சை பெருவுடையார் கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில்களின் திருச்சுற்று மாளிகைகளைப் போலன்றி சாதாரணமாகவே கட்டப்பட்டுள்ளன.

## முதல் திருச்சுற்று

சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை திருச்சுற்றின் மேற்கு சுவரில் உள்ள பாலசுப்பிரமணியர், சண்டிகேசுவரர், சிற்பங்கள் முதற் திருச்சுற்றில் உள்ளன. திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் பைரவர் சன்னதி ஒன்றும் உள்ளது.

## விமான அமைப்பு

சுப்பிரமணிய சுவாமி சன்னதியின் விமானம் இரு தளங்களை உடையது. முதல் தளம் கர்ணக்கூடு, சாலை, இவைகளின் நடுவே உள்ள கும்ப பஞ்சரம் ஆகிய அங்கங்களை உடையதாக முதல் தளம் அமைந்துள்ளது. சாலையின் நான்கு புறமும் விமான தேவர்களின் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் தளத்தில் இதே போன்ற அமைப்புக்களுடன் சாலையில் முருகன் தன் பன்னிரு கைகளுடன் காட்சியளிக்கிறார். குடங்களில் இரு பெண்களின் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்குப் பகுதியில் ருத்திர தாண்டவம், மோகினி, முனிவர்களின் சிற்பமும், வடக்குப் பகுதியில் வினாயகர் தேவதைகளின் சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் கிரீவப் பகுதியில் முருகன் தனது தேவியர்களுடன் இருக்கிறார். மயில் மீது அமர்ந்த நிலையில் நான்கு பகுதியிலும் முருகன் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கிறது. சிகரத்தின் மேல்பகுதியில் திசைபாலர்கள் சிற்பம் காட்சியளிக்கிறது. முதல் தளத்தின் வடக்கில் முருகனே பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும் இருந்து அருள்புரியும் காட்சியை பிரம்மா, விஷ்ணு, ஆறுமுகம் கொண்ட முருகன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எண்பட்டையுள்ள திராவிட சிகரம் விமானத்தை அழகு செய்கிறது. சிகரத்தின் மேலே தங்க முலாம் பூசப்பட்ட 2 அடி உயரமுள்ள ஐந்து ஸ்தூபிகள் வைக்கப்பட்டுள்ளன. இவ்விமானம் முழுவதும் கோயில் தேவஸ்தானத்தினரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சிமெண்டினால் கட்டப்பட்டுள்ள இவ்விமானம் வண்ணப் பூச்சுக்கள் பூசப்பட்டுள்ளன.

## சுப்பிரமணியர்

கருவறையிலுள்ள திருவுருவத்திற்கு 'சுப்பிரமண்யர்' அல்லது 'ஞானசக்திதரன்' என்று பெயர். முருகன் இரண்டு திருக்கைகளுடன், ஒரு கையில் வேலேந்தி, மற்றொரு கையைத் தொடையில் வைத்துக் கொண்டு, மயில் இன்றித் தனியே நின்றிருக்கும் தோற்றமே 'ஞானசக்திதரர்' என்னும் திருவுருவமாகும். திருத்தணிகை முருகன் ஞானசக்திதரர் என்னும் நிலையிலேயே எழுந்தருளி விளங்குகிறார். இத்திருவுருவத்தின் இயல்பையும் சிறப்பையும் பின்வரும் தணிகைப் புராணம் பாடல் விரிவாகக் கூறுகின்றது.

"செங்கமல மலர் ஏய்க்கும் ஒரு திருக்கை
தொடையமைத்துச், செம்பொன் மேருத்
துங்க வரிச் சிலைக்கடவுள் அருள்ஞான
சக்திஒரு தொடிக்கை ஏந்திப்,
பொங்கும் அருட் கருணவிழிக் கடைஒழுக
மலர்ந்தமுகப் பொலிவி னோடும்,
அங்கண் அமர் ஞானசக்திதரனை, அகத்
துறநினைப்போர் அவனே ஆவர்"

இச்செய்யுள் கூறியுள்ளதற்கு ஏற்ப, தணிகை முருகனின் வலத் திருக்கரத்தில் மூவிதழ்ச் சக்தியாகிய ஞானவேல் அமைந்திருக்கின்றது. அவர்தம் தொடையில் இடக்கரம் படிந்துள்ளது. முருகன் மயில் இன்றித் தனித்த நிலையில் நின்றிருக்கும் அழகிய சிறந்த திருவுருவம் இது. இவ்வழகிய சிறந்த திருவுருவத்தினை வியந்தே,

"தணிகை மலையப்பனே!
அழகிய பெருமானே!
தணிகையில் இணையிலி"

என்று அருணகிரிநாதர் (திருப்புகழ், அருணகிரிநாதர் பாடல் 273,289) பாடியுள்ளார்.

## வள்ளி

சுப்பிரமணியர் சன்னதிக்கு வலப்புறம் வள்ளியம்மன் ஆலயம் உள்ளது. இதுவும் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபங்களை பெற்றிருக்கிறது. கருவறையிலுள்ள வள்ளியின் உயரம் சுமார் 3 அடி உயரமுடையதாகும். இரு கரங்களில் வலது கரம் தொங்கிய

நிலையிலும், இடது கரத்தில் பத்மமும் கொண்டு விளங்குகிறது. தலையில் கரண்ட மகுடம், ஆடைகள் பாதம் வரை அழகு செய்கின்றன.

## தெய்வயானை

சுப்பிரமணியரின் சன்னதிக்கு இடப்புறத்தில் தெய்வானைக் கென்று தனி சன்னதி உள்ளது. இச்சன்னதியில் பத்மபீடத்தில் நின்றுள்ள தெய்வயானையின் இடக்கை தொங்கிய நிலையிலும், வலக்கையில் நீலோற்பல மலர் ஏந்தியும் காணப்படுகிறது. காதுகளில் தொங்கல் அணிகலன், தலையில் கரண்ட மகுடம், ஆடைகள் பாதம் வரை அலங்கரிக்கின்றன.

## வினாயகர்

அர்த்தமண்டபத்தின் தெற்குப்பகுதியில் உள்ள கோட்டத்தில் வினாயகர் நின்ற நிலையில் இருக்கிறார். மேலிரு கைகளில் அங்குசம், பாசம், கீழிரு கைகளில் தந்தம், மோதகம், தலையில் கிரீட மகுடமும், வயிற்றில் உதரபந்தமும் காணப்படுகின்றது. வீரசன்னம் இரண்டாக பிரிந்து செல்கிறது.

## துர்கை

அர்த்தமண்டபத்தின் வடக்கு கோட்டத்தில் துர்கை சிற்பம் காணப்படுகிறது. இத்துர்கையின் உயரம் 2½ அடியாகும். மேல் வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும், கீழ் வலது கை அபய முத்திரையிலும், கீழ் இடது கை கடிஹஸ்த முத்திரையிலும் உள்ளன. தலையினை கிரீட மகுடம் அலங்கரிக்கின்றது. ஆடை பாதம் வரை காணப்படுகிறது.

## சண்டிகேசுவரர்

திருச்சுற்றின் வடக்குப்பகுதியில் சண்டிகேசுவரருக்கென்று தனிச் சன்னதி உள்ளது. இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு சாதாரண பீடத்தில் அமர்ந்திருக்கிறார். இரு கரங்களை வணங்கியபடியும் வலது கை பட்டையின் மீது சக்தி என்ற ஆயுதத்துடனும் காட்சியளிக்கிறார்.

மேலும் கருவறையிலுள்ள கோட்டங்களில் முருகன் மயில் வாகனத்துடன் காட்சியளிக்கிறார். அக்கமாலை, கமண்டலம், அபயம்,

கடிஹஸ்தம், காதுகளில் பத்ர குண்டலமும், கழுத்தில் அணிகலன்களும் அணிசெய்கின்றன. இதே அமைப்புகளுடன் மற்ற இரு புறங்களிலுள்ள கோட்டங்களிலும் முருகன் காட்சியளிக்கிறார்.

**பாலசுப்பிரமணியர்** (பல்லவர் காலம்)

முதல் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் பாலசுப்பிரமணியர் சன்னதி ஒன்றுள்ளது. இச்சிற்பம் உயரம் சுமார் 1½ அடி உயரமுடையது. மேல் கைகளில் அக்கமாலை, கமண்டலம், கீழிரு கைகள் அபயம், கடிஹஸ்தம் முத்திரையில் உள்ளன. உதரபந்தம் சற்று பெரியதாக உள்ளது. தலையில் கரண்ட மகுடம், நெற்றியில் கன்னிமாலை காணப்படுகிறது. காதுகளில் குண்டலங்கள் காட்சியளிக்கின்றன. இந்த சிற்பத்தின் காலம் பல்லவர் காலமாகும் என்று டாக்டர். நாகசாமி[1] அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பல்லவர் காலத்திற்கு முன்பு கருவறையில் இருந்த சிற்பமே இந்த பாலசுப்பிரமணியர் ஆகும் என்பது இவ்வாய்வாளரின் கருத்தாகும். பிறகு வந்த விஜயநகர மன்னர்களால் கோயில் அமைப்பு முழுவதும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது இதனையும் இடம் மாற்றி தனியே சன்னதி ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, விநாயகர், துர்கை, சண்டிகேசுவரர், தேவகோட்டச் சிற்பங்கள் ஆகியவற்றின் உருவ அமைதி மற்றும் அணிகலன்கள் கொண்டு இச்சிற்பங்கள் விஜயநகர காலத்தவை என்று கூறலாம்.

## இரண்டாம் திருச்சுற்று

இரண்டாம் திருச்சுற்றின் கிழக்கு மேற்கு திருச்சுற்றின் மூலைகளில் தூண்களால் ஆகிய மண்டபம் உள்ளது. தெற்கு சுவரின் மத்தியில் காமாட்சியம்மை உடனுறை ஏகாம்பர ஈசுவரர் சன்னதி இருக்கின்றது. அடுத்து பள்ளியறையும் உள்ளன. அர்த்தநாரீஸ்வரர் ஆலயமும் மூலையிலுள்ளன. திருச்சுற்றின் மேற்குச் சுவரில் அருணாசலீஸ்வரர், சிதம்பரேஸ்வரர் சன்னதிகள் உள்ளன.

---

1. Tiruttani - Velanjeri Copper Plate

## ஷண்முகர்

இங்குள்ள சண்முகர் ஆலயம் முக்கியத்துவம் பெற்றது. முருகன் ஆறு தலைகளுடனும், பன்னிரு கரங்களுடன் விளங்குவதால் ஆறுமுக சுவாமி கோயில் என்றழைக்கின்றனர். ஷண்முகர் என்பது 'ஆறுமுகம்' என்பதின் வடமொழியாக்கமாகும். இச்சிற்ப அமைதியைக் கொண்டு இது விசயநகர காலத்தது என்று கூறலாம்.

## சந்தனக்கல்[1]

முருகனுக்குப் பயன்படுத்தப் பெறுகின்ற சந்தனக் கலவை அரைப்பதற்கு வேண்டிய அற்புதமான பெரிய சந்தனக்கல் ஒன்றுள்ளது. இதுவும் தெய்வயானைக்குச் சீதனமாக தேவேந்திரன் கொடுத்தது என்பது புராணச் செய்தியாகும். இதில் அரைக்கும் சந்தனம்தான், சுவாமிக்கு திருமேனிப்பூச்சாகப் பயன்படுத்தப்பெற்று பின்பு அடியார்களுக்கு "ஸ்ரீபாதரேணு" என்னும் அருட்பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது. இது எல்லா நோய்களையும் தீர்க்கும் மருந்தாக கருதி நாள்தோறும் மிளகு அளவு உட்கொண்டு வருவதாக சில அடியார்கள் கூறுகின்றனர்.

இத்திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் குமாரேசுவர் சன்னதி உள்ளது. இதனை அடுத்து ஆறுமுகங்களுடன் தனிச் சன்னதி ஒன்று ஷண்முகருக்கு உள்ளது.

## ஆறுமுகர் சன்னதி

முருகன் தனது தேவியர்களுடன் மயில்வாகனத்துடன் காட்சியளிக்கிறார் பன்னிரு கைகள் உடைய இந்த ஆறுமுகர் சிற்பம்தான் கீழ்த்திருத்தணிகையிலுள்ள ஆறுமுக சுவாமி கோயிலின் கருவறையில் இருந்ததாக கூறுகின்றனர். தற்போது ஆறுமுக சுவாமி கோயிலில் உள்ள சிற்பம் ஒரு தலையுடன் காணப்படுகிறது. ஆறுமுகங்களுடன் விளங்கியதால்தான் "ஆறுமுக சுவாமி கோயில்" என்று பெயர் வந்தது.

## ஆபத்சகாய விநாயகர்

தனது தம்பி முருகனுக்கு வள்ளியை மணமுடிக்க யானை வடிவங் கொண்டு வள்ளியை பயமுறுத்தினார். பிறகு வள்ளி

1. திருத்தணிகை தலவிளக்கம்

முருகனைத் திருமணம் புரிந்துகொண்டாள். இதனால் இவருக்கு ஆபத்சகாய வினாயகர் என்ற பெயர் ஏற்பட்டது என்கின்றனர். இத்திருச்சுற்றின் கிழக்கில் அருணகிரிநாதருக்கென்று தனிச் சன்னதி அமைந்துள்ளது. இதனையடுத்து நவவீரர்கள் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதனருகே வீரபத்திரர் சிற்பம் ஒன்றும் உள்ளது.

## நவவீரர்கள்

1. வீரதீரன், 2. வீராந்தகன், 3. வீரமார்த்தாண்டன், 4. வீரராக்கதன், 5. வீரபுரந்தரன், 6. வீரமகேஸ்வரன், 7. வீரமகேந்திரன், 8. வீரகேசரி, 9. வீரவாகு ஆகிய நவவீரர்களின் சிற்பங்கள் விஜயநகர காலத்தவையாகும்.

## சூரியன்

நவவீரர்களை அடுத்து சூரியன் சிற்பம் உள்ளது. தனது இரு கரங்களிலும் தாமரை மலர்களைப் பிடித்துக்கொண்டு நின்ற நிலையில் உள்ளார்.

## மூன்றாம் திருச்சுற்று

மூன்றாம் திருச்சுற்றின் கிழக்கில் ஸ்ரீகுந்தாம் செங்கல்வராயரால் புதுப்பிக்கப்பட்ட கோபுரம் ஒன்றுள்ளது. கொடி கம்ப வினாயகர் சன்னதியும், ஐராவத யானை உருவமும் உள்ளன.

## ஐராவதம்

ஐராவத யானை முருகனை நோக்கிக் கொண்டு நிற்காமல், கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டு நிற்கின்றது. அதற்குக் காரணம் இந்திரனுக்குரிய வாகனமான 'ஐராவதம்' என்னும் யானை, தெய்வயானையம்மையின் திருமணத்தின் போது சீதனப் பொருளாக இந்திரனால் கொடுக்கப் பெற்றது. ஐராவத யானைத் தன்னை விட்டுப் பிரியவே, இந்திரனுடைய செல்வம் குறைந்தது. அக்குறை நீங்க, இந்திரன் இத்தலத்தில் செங்கழுநீர்ப்பூவால் முருகக் கடவுளை வழிபட்டான். வழிபாட்டிற்கு இரங்கி, ஐராவதத்தைக் கொண்டு செல்ல இந்திரனுக்கு முருகன் இசைவு தந்தார். ஆயினும், சீதனமாகத் தந்த பொருளைத் திரும்பப் பெற்றுக்கொள்வது முறையன்று என்று, இந்திரன் தயங்கினான். ஐராவதமும் முருகனுக்கு ஊர்தியாக இருத்தலையே பெரிதும் விரும்பியது. அப்பொழுது இந்திரன் 'ஐராவதம்

இங்கு தங்கள் சன்னதியிலேயே தங்கியிருக்கட்டும். ஆனால் கிழக்கே உள்ள என் உலகை நோக்கிக்கொண்டு இருந்தால் போதும். என்னுடைய நாடும், செல்வமும் வளங் குன்றாமல் இருக்கும்' என்று விண்ணப்பித்தான். முருகப்பெருமான் அவ்வாறே அருள்புரிந்தான். அதனாலேயே, ஐராவதம் கிழக்குத் திசை நோக்கி நின்று கொண்டு, முருகன் தன் மீது அமர்ந்து உலாவர சித்தமாக இருக்கும் நிலையில் விளங்குகின்றது. இந்த யானையை

"ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி"

என நக்கீரர் பாடியுள்ளார்.

## பிரசன்னகாதர் ஈசுவரர் சன்னதி

நுழைவாயிலின் தென்புறத்தில் இவ்வாலயம் உள்ளது. தனக்கு ஏற்பட்ட இன்னல் ஒன்றை நீக்கி அருள்செய்த காரணத்தால், காதர் என்னும் பெயருள்ள நவாப் ஒருவர் இங்கு இலிங்கத்தை நிறுவினார். இதற்கு தென்புறம் சர்வ வாத்திய மண்டபமும் உள்ளது. இந்து-முஸ்லீம் சமய ஒற்றுமைக்கு இக்கோயில் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## உமாமகேஸ்வரி கோயில்

இத்திருச்சுற்றின் மேற்கு மூலையில் உமாமகேஸ்வரி கோயில் தனியாகக் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன் முண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இருதளமுள்ள விமானம். நாகர சிகரத்தை உடையதாகும். இதன்மேல் ஒரு ஸ்தூபி உள்ளது. இக்கோயிலை அடுத்து விஜயநகர கால மண்டபம் ஒன்றுள்ளது.

## நான்காம் திருச்சுற்று

நான்காம் திருச்சுற்றின் நுழைவாயிலின் மேல் சிறிய கோபுரம் உள்ளது. இத்திருச்சுற்று இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும். இதன் கிழக்கில் யானைக் கொட்டில் உள்ளது. தெற்கில் அறநிலையத்துறை அலுவலகமும், கடைகளும் உள்ளன. இதன் தென்மேற்கு மூலையில் தங்கத் தேர் மண்டபம் உள்ளது. மேற்குப்

பகுதியில் நடுவில் நுழைவாயில் ஒன்று அந்தணர் குடியிருப்புக்குச் செல்கிறது. வடமேற்கு மூலையில் திருப்புகழ் மண்டபம் ஒன்றுள்ளது. வடக்குப் பகுதியில் எவ்வித கட்டட அமைப்பும் இல்லை. வெளிப்பிரகாரத்தின் தெற்குப் பகுதியில் பயணிகள் தங்கும் மண்டபங்கள் இரண்டு உள்ளன. இதற்கு தென்பகுதியிலுள்ள, வள்ளித் திருமண மண்டபம் விஜயநகர காலத்தில் கட்டப்பட்டதாகும்.

## கோபுரங்கள்

வெளிப்பிரகாரத்தின் நுழைவாயிலில் ஒன்றும், மூன்றாம் திருச்சுற்றின் நுழைவாயிலில் மிகச்சிறிய அளவில் ஒன்றும், இரண்டாம் திருச்சுற்றின் மேல் மூன்று தளங்களுடனும், திருச்சுற்றின் மேற்கு நுழைவாயிலில் ஒன்றுமாக கோபுரங்கள் அமைந்துள்ளன. இக்கோபுரங்கள் சிமெண்டினால் செய்யப்பட்டவைகள். சிற்ப வேலைப்பாடுகள் இன்றி சாதாரணமாகவே கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. கோபுரங்களில் குறிப்பிடத்தக்க அம்சம் இல்லையென்றே சொல்லலாம்.

## காலம்

சுப்பிரமணிய சுவாமியின் கோயில் எடுக்கப்பட்ட ஆண்டைக் குறிக்கும் சான்றுகள் மிகக்குறைவே. "வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே கோயில் இருந்திருக்கிறது. இக்கோயில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது"[1] என்று குறிப்பிடுகின்றன. இலக்கியச் சான்றுகளைக் காட்டிலும் செப்பேடு, கல்வெட்டுச் சான்றுகள் முக்கிய சான்றுகளாக உள்ளன. திருத்தணிக்கு அருகேயுள்ள வேலஞ்சேரி என்னும் சிறிய கிராமத்தில் இரண்டு செப்பேடுகள்[2] கிடைத்தன. ஒன்று பல்லவ மன்னன் அபராஜிதவர்மனின் 9-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. மற்றொன்று சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் 25-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. இவற்றில் அபராஜிதவர்மனின் செப்பேடு மிக முக்கியமானது. திருத்தணி சுப்பிரமணி சுவாமி கோயிலின் காலத்தைக் கணிக்க ஆதாரமாக உள்ளது.

---

1. Census of India, Chenglepet District, 1971.
2. Tiruttani - Velanjeri Copper Plate.

செப்பேட்டின் சமஸ்கிருத பகுதியில்

"1. . . . . . . . . ரா ஜா ய ி ரா ஜ  வ ர ெ ஜ ஷ்வ ெ ர ா
ஜெவ: ஸ்ரீ ஊ ந வ ரா ஜிதவொத

2. வஜ்ரா ஷ்வ ஷ்வாராஹிஷெக ஷ்வஜவஷ்ஷெர நவெஜ வத்ரு ஊரெ
குன்றவத்தன கோட்டா

3. நூ: வாதிநி தணியல் நாநீ ராஷெ்ரு வதூஊநஜ"

என்று செப்பேட்டுப் பகுதியில் அபராஜிதவர்மனின் பெயர் வருகிறது. இவன் பல்லவ குலத்தைச் சேர்ந்தவன் என்றும் குறிப்பிடுகிறது. இதே செப்பேடு அபராஜிதவர்மனின் ஆட்சியாண்டினையும் குறிப்பிடுகிறது.

மேலும் கோயிலுக்குக் கொடுத்த தானத்தைக் குறிப்பிடும்பொழுது ". . . . . . கோனோலை குன்றவத்தன கோட்டத்து மேண்மலை தணியல் நாட்டார் கண்டு தங்கள் நாட்டு பூதூர் முன்பெற்றாரை மாற்றி மேலிருஞ் செற்றோடேய் கலந்து ஒன்றாக்கி திருத்தணியில் திருமலையில் நின்றருளின ஸுப்ரஹ்மண்யர்க்கு ஆண்டு வரை சந்த்ராதித்யர் உள்ள அளவும்" என்று சுப்பிரமணிய சுவாமி கோயிலைப் பற்றி குறிப்பிடுகிறது. திருத்தணி திருமலையில் நின்றருளின என்று குறிப்பிடப்படுவதால் அபராஜிதவர்மன் காலத்திற்கு முன்பிருந்தே திருமலை மேல் கோயில் இருந்திருக்கிறது என்பதை இச்செப்பேடு உறுதி செய்கிறது.

அபராஜிதவர்மனின் ஆட்சிக்காலம் கி.பி. 870 முதல் 890 வரையாகும். இச்செப்பேடு இம்மன்னனின் 9-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது.[1] அதாவது கி.பி. 879-ஆம் ஆண்டாகும். எனவே இக்கோயில் கி.பி. 879-ஆம் ஆண்டிற்கு முன்பாகவே எழுப்பியிருக்கவேண்டும்.

மேலும் சிற்பச்சான்றுகளைக் கொண்டும் காலத்தை நிர்ணயிக்கலாம். தற்போது சுப்பிமணிய சுவாமிக்கு மேற்குப் பகுதியில் பாலசுப்பிரமணியர் கோயில் ஒன்று உள்ளது. இது பல்லவர்கால சிற்ப அமைதியைக் கொண்டிருக்கிறது. 'A stone sculpture of

---

1. Tiruttani - Velanjeri Copper Plate Page-8.

Subrahmanya, of Pallava age (9th century) is now worshipped as Balasubramanya in the Tiruttani temple. It is housed in the Prakara of the main shrine. The present main deity inside the sanction seems to be an installation of the 16th century in the Vijayanagar period, when the main temple seems to have been rebuilt. The Pallava image of Subrahmanya is obviously the deity that received the benefication of Aparajita, The existence of the Subramanya temple in Tiruttani hill, in the reign of Aparajita takes the history of the temple earlier than was hither to known.'[1]

அப்பரும் தனது புறம்பியத் தேவாரத்தில் "கல் மலிந்தோங்கும் கழுநீர் குன்றம்" என்று பாடியுள்ளார். இவருடைய காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு ஆகும். எனவே இக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செங்கற் தளியாகக் கட்டப்பட்டிருக்கலாம் என்று இதன் காலத்தைக் கூறலாம்.

## விஜயராகவப் பெருமாள் கோயில்

நந்தியாற்றுக்குத் தெற்கே ஆறுமுகசுவாமி கோயிலை அடுத்து விஜயராகவப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. திருத்தணியிலுள்ள வைணவக் கோயில்களில் காலத்தால் முற்பட்டது விஜயராகவப் பெருமாள் கோயில் எனலாம். இக்கோயிலின் அமைப்பு முழுமையும் விஜயநகர காலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

### கட்டட அமைப்பு

கோயிலின் கருவறையானது உபானம், விருத்த குமுதம் போன்ற அங்கங்களையுடையது. இதற்கு மேலேயுள்ள பித்தி, பிரஸ்தரப் பகுதி முழுவதும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உபானம், விருத்தகுமுதம் போன்ற பகுதிகள் நேராக செல்லாமல் இடையில் சிறிது வளைந்து செல்கிறது. இவைகளும் கூட விஜயநகர காலத்தில் மாற்றியமைத்திருக்க வேண்டும். ஆனால் இவைகளிலுள்ள கல்வெட்டுக்கள் முழுவதும் சோழர்காலத்தவை. இக்கல்வெட்டு களைச் சிதைக்காமல் மாற்றியமைத்திருப்பது பாராட்டிற்குரியது.

1. Velanjeri Plates of Aparajita, Page - 5.

## காலம்

இக்கோயில் கட்டப்பட்டதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. நாராயணராயர் என்பவர் இக்கோயிலைக் கட்டியதாகக் கல்வெட்டு[1] குறிப்பிடுகிறது. இந்த நாராயணராயரின் ஆட்சியாண்டு, அரசவம்சம் போன்ற ஆதாரங்கள் கிடைக்கவில்லையாதலால் நாராயணராயர் யார் என்று சரியாக அறிய முடியவில்லை. ராயர் என்பது விஜயநகரர் பெயரொட்டாகும். நாராயணராயர் என்பவர் விஜயநகரர் காலத்தில் இப்பகுதியில் இருந்த அரசு அதிகாரியாக இருந்திருக்கலாம். மற்றும் இத்தெலுங்கு கல்வெட்டு எழுத்தமைதியும் கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக உள்ளது. எனவே விஜயநகரர் காலத்தில் கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் முழுவதுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யலாம்.

## கோயில் அமைப்பு

கோயில் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், முன் மண்டபம் போன்ற அமைப்புக்களை பெற்றிருக்கிறது. கருவறையில் கோட்டங்கள் இல்லை. அர்த்தமண்டபம், முன்மண்டபம் விஜயநகர காலத்தவை. கோயிலைச் சுற்றி ஒரே ஒரு திருச்சுற்று மட்டும் இருக்கிறது. முன் மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் நுழைவாயிலும், வெளியே பெரிய தூண்களுடனான மண்டபம் ஒன்றும் கட்டப் பட்டிருக்கிறது.

## விமானம்

இக்கோயிலின் விமானம் ஏகதளமாகத் திகழ்கிறது. இதனின் சிகரம் திராவிட அமைப்பைக் கொண்டுள்ளது. சிகரத்தின் கழுத்துப் பகுதியை நான்கு திசைகளிலும் கருட ஆழ்வார் தாங்குகிறார். தளத்தில் கர்ணகூடு, சாலை இவைகளுக்கு இடையே கும்ப பஞ்சரம் போன்ற விமான அமைப்புக்களைக் கொண்டிருக்கிறது. விமானத்தின் சாலையின் நான்கு புறமும் விஷ்ணுவின் அவதாரங்கள் சுதைச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன.

---

1. A.R.E. 447 of 1905.

### விமானச்சிற்பங்கள்

கிழக்குப் பகுதியில் விஷ்ணு தனது இடக்காலைத் தொங்கவிட்டு, வலது காலை மடக்கி அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டிருக்கிறார். தனது முன்னிரு கரங்களில் வலது அபய முத்திரையும், இடது கடக முத்திரையுடனும், பின்னிரு கரங்களில் வலக்கரத்தில் சக்கரமும், இடக்கரத்தில் சங்கும் கொண்டு விளங்குகிறார்.

வடக்கே திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரம் செதுக்கப்பட்டுள்ளது. அமர்ந்த நிலையிலுள்ள இச்சிற்பத்தின் முன்னிரு கரங்களின், வலது கரத்தில் அபய முத்திரையும், இடக்கரத்தில் வரத முத்திரையும், பின்னிரு கரங்களில் வலது கரத்தில் சக்கரமும், இடது கரத்தில் சங்கும் கொண்டு விளங்குகிறார்.

மற்ற இரு பகுதிகளிலும் உள்ள சிற்பங்கள் சிதைந்த நிலையிலுள்ளது. விமானத்தின் அமைப்பு முழுவதும் சிமெண்டினால் மாற்றியமைக்கப்பட்டு தற்கால வண்ணம் பூசப்பட்டிருக்கிறது.

## கோயில் சிற்பங்கள்

### விஷ்ணு

விஷ்ணுவின் அமர்ந்த நிலை திருக்கோலம் கருவறையில் இருக்கிறது. முன்னிரு கரங்களில் பிரயோகச் சக்கரம், சங்கு, பின்னிரு கரங்கள் அபயம், கடக முத்திரையுடனும் உள்ளன. வலது கால் மடக்கி, இடது கால் தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறார். தலையில் கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் தொங்கல்கள் தொங்கிய நிலையிலும், கழுத்தில் மணியாலாகிய மாலைகளும், கைகளில் வாகு வளையமும், மூன்று கை காப்புகளும் அணிசெய்கின்றன. மார்பில் ஸ்ரீவத்சம் இருச்கிறது. இவ்வுருவத்தின் உயரம் சுமார் 5 அடியுடையதாகும்.

### ஸ்ரீதேவி

வலது கால் மடக்கி, இடது கால் தொங்கவிட்டு அமர்ந்த நிலைக் கோலம். வலக்கை தொடை மீதும், இடக்கையில் பத்மமும் காணப்படுகிறது. காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில்

பட்டையாகவுள்ள நகைகளும், கைகளில் வாகு வளையமும் அணிசெய்கின்றன. தலையில் கிரீட மகுடத்துடன் விளங்கும் ஸ்ரீதேவி விஷ்ணுவின் வலப்புறம் விளங்குகிறாள்.

## பூதேவி

வலது கால் மடக்கி, இடது கால் தொங்கவிடப்பட்டுள்ளது. வலக்கையில் அல்லி மலரும், இடக்கை தொடைமீதும் காணப் படுகிறது. காது மற்றும் கழுத்துகளில் அணிகலன்கள் அணிசெய்கின்றன.

இச்சிற்பங்களின் அமைதியைக் கொண்டு இச்சிற்பங்கள் விஜயநகர காலத்தவை என்பதை உணரலாம். கோயிலின் நுழைவாயிலில் கீழ்க்கண்ட சிற்பங்கள் காணப்படுகின்றன.

## விஷ்ணு

மகாமண்டபத்தின் நுழைவாயிலின் இரு புறமும் சிற்பங்கள் உள்ளன. மேலிரு கைகளில் சக்கரம். சங்கு, கீழிரு கைகளில் அபயம், ஊருஹஸ்தம் முத்திரையுடனும், தலையில் கிரீட மகுடமும், காதுகளில் வளையங்களும், மார்பில் உபவீதமும், வலது மார்பில் ஸ்ரீவத்சம், கழுத்தில் மணிமாலையும், பாதம்வரை புரளும் ஆடைகளும் கொண்ட இந்த விஷ்ணு விஜயநகர காலத்தவையாகும்.

## ஸ்ரீதேவி

இவ்விஷ்ணுவின் இடப்புறம் திரிபங்கத்துடன் நின்ற நிலையில் ஸ்ரீதேவி காணப்படுகிறாள். மார்பில் கச்சையின்றி காணப்படுகிறது.

## துவாரபாலகர்கள்

சுமார் ஐந்து அடி உயரமுள்ள துவாரபாலகரின் மேலிரு கைகள் சக்கரம், சங்கு ஏந்தியும், கீழிரு கைகள் அபயம், கதையினை வைத்தும் காணப்படுகிறது.. இத்துவாரபாலகரின் கையிலுள்ள கதையின் மேல் பாம்பு சுற்றியிருக்கிறது. மார்பு, இடுப்புகளில் அணிகலன்கள், ஆடைகள் அலங்கரிக்கின்றன. இதேபோன்ற அமைப்புகளுடன் மற்றொரு துவாரபாலகரின் சிற்பமும் அமைந்துள்ளது. வலக்கால் இதில் மடங்கிக் காணப்படுகிறது. கைகளில் சக்கரம், சங்கு, அபயம், கதை, தலையில் கிரீட மகுடமும்,

காதுகளில் தொங்கலும், மார்பில் முப்புரி நூலும், கழுத்தில் மூன்று உத்திராட்சை போன்ற அணிகலன்களும் காணப்படுகின்றன.

## விக்னசாச்சாரியார்

இச்சிற்பம் வலக்காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கி அமர்ந்து காணப்படுகிறது. இவ்வுருவத்தின் மேலிரு கைகளில் சக்கரம், சங்கு உள்ளன. கீழிரு கைகள் அபயம், விருச்சிக முத்திரையுடன் உள்ளன. மார்பில் உதரபந்தமும், தலையில் கிரீட மகுடமும், காதுகளில் காதணிகளும் காணப்படுகின்றன.

## ஆழ்வார்கள்

பன்னிரண்டு ஆழ்வார்களில் எட்டு ஆழ்வார்களின் சிற்பம் மட்டும் மகாமண்டபத்தின் வடக்குப்புறம் காணப்படுகின்றன. இவற்றில் திருமங்கையாழ்வாரின் சிற்பம் முக்கியமானவையாகும்.

மேற்கூறப்பட்ட சிற்பங்கள் அனைத்தும் விஜயநகரர் கால கலை அமைதியில் உள்ளன.

## முன்மண்டபம்

இக்கோயிலின் முன்பு சிற்பக்கலையம்சங்களுடன் மண்டபம் ஒன்று இருக்கிறது. இத்தூண்களின் சிறபங்கள் விஷ்ணுவின் அவதாரங்களைக் காட்டுகின்றன. இத்தூண்களில் தாமரை, சங்கு, சக்கரம், நரசிம்மர், முனிவர், கருடன், இராமர், விஷ்ணு, அனுமன், குரங்கு, சூரியன் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் அடிப்பகுதி உயர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் மண்டபத்தின் படிக்கட்டு பகுதி முழுவதும் தற்போது மண்ணால் மூடப்பட்டுள்ளது. மண்டபத்தின் மேல் பகுதியில் கொடுங்கை வரி நன்கு நீண்டு வளைந்து இருக்கிறது. இம்மண்டபத்தின் கிழக்குப் பகுதியின் மேல் இரு மூலைகளிலும் விஷ்ணுவின் வாகனமான கருடனின் சிற்ப வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

❖❖❖

# ஆறுமுகசுவாமி கோயில்

நந்தியாற்றுக்கு தென்கரையில் பசுமையான வயல்கள், மரங்களுக்கிடையே ஆறுமுகசுவாமி மற்றும் விஜயராகவப் பெருமாள் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் ஆறுமுகசுவாமிக் கோயில் ஆற்றங்கரையில் உள்ளது. இக்கோயிலைச் சுற்றி இரண்டு திருச்சுற்றுகள் அமைந்துள்ளன. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் போன்ற அமைப்புக்களைக் கொண்டுள்ளது.

## கோயில் அமைப்பு

**கருவறை:** கோயிலின் கருவறை அல்லது விமானத்தின் அடிப்பகுதி பூமியின் மேற்பரப்பிற்கு சற்று கீழ் இருந்து துவங்குகிறது. கருவறையின் அடிப்பகுதி உபானம், முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை போன்ற அமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளது. பட்டிகைக்கு மேலே வேதிகையின் கீழ்ப்பகுதி பத்ம வரியுடன் காணப்படுகிறது. பித்தி பகுதி தூண்கள் அடியில் நான்கு பட்டைகளுடனும், இடையில் எண்பட்டைகளுடனும், பலகை போதிகை, அதற்கு மேலே பத்மவரி போன்ற அமைப்புகளுடன் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோயிலின் மூன்று புறமும் உள்ள தேவகோட்டங்களில் சிற்பங்கள் இல்லை. அர்த்த மண்டபத்தின் வெளிப்புறத்தில் கோட்டங்கள் இல்லை. கோயிலின் விமானம் இரு தளங்களுடனும், நாகர சிகர அமைப்புகளுடனும் கட்டப்பட்டிருக்கிறது. விமானப் பகுதி முழுவதும் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. கோயிலின் நுழைவாயில் தெற்குப்புறமாக அமைந்துள்ளது.

## விமானம்

விமானம் இரு தளங்களை உடையது. சிகரம் நாகர வடிவுடையது. விமானம் முழுவதும் தற்காலத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது.

## விமான சிற்பங்கள்

முதல் தளமானது கர்ணக்கூடு, சாலை, கும்ப பஞ்சரம் போன்ற அமைப்புகளைக் கொண்டுள்ளது. இவற்றில் சிற்பங்கள் எதுவும் இல்லை.

இரண்டாம் தளமானது முதல் தளத்தைப் போன்றே அமைந்துள்ளது. கிழக்குப்புறச் சாலையில் முருகன் தனது தேவியர்களுடன் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். இதேபோன்ற சிற்ப அமைப்பு நான்கு புறமும் அமைக்கப்பட்டுள்ளது. விமானத்தின் கிரீவப் பகுதியை நான்கு அசுரர்கள் தாங்கியுள்ளனர். சிகரத்திற்கு மேலே ஒரே ஸ்தூபி மட்டும் உள்ளது. விமானப் பகுதி முழுவதும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் தற்காலத்தில் அமைக்கப்பட்டதாகும்.

## காலம்

ஆறுமுகசுவாமி கோயிலின் காலத்தை கணிக்க கல்வெட்டுக்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இக்கோயிலிலுள்ள 9 கல்வெட்டுகளில் ஒன்று மட்டுமே சோழர் காலத்ததைச் சார்ந்தது. மதுரை கொண்ட பரகேசரியான முதலாம் பராந்தகன் தூண் கல்வெட்டு[1] ஒன்று அர்த்தமண்டபத்தின் தரைப்பகுதியில் காணப்படுகிறது. இவனது 36-ஆம் ஆண்டினைக் குறிப்பிடும் இக்கல்வெட்டு சுப்பிரமணி சுவாமி கோயிலின் ஸ்ரீகார்யம் செய்ய கொடுக்கப்பட்ட தானங்களைப் பற்றி குறிக்கிறது. இக்கல்வெட்டு காலத்திற்கு முன்பே இங்கு கோயில் இருந்திருக்கவேண்டும். அக்கோயிலின் அமைப்பு முழுவதும் விஜயநகர அரசர்கள் காலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. விஜயநகர அரசனான வீர சுப்பண்ண உடையாரின் (சகம் 1288) 1366[2] - ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சோழர்கால கோயில், விஜயநகர காலத்தில் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. சோழர் காலத்தில் கோயில் இருந்திருப்பதற்கு ஆதாரமாக இதன் அருகிலே உள்ள விஜயராகவ பெருமாள் கோயிலிலும் பராந்தகனின் 34-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு[3] ஒன்று காணப்படுகிறது.

---

1. A.R.E. 441/1905
2. A.R.E. 440/1905
3. A.R.E. 449/1905

கோயிலின் உட்புறத் திருச்சுற்று, நுழைவாயிலின் இருபுறமும், இரண்டாம் திருச்சுற்றின் உட்புறமும் விஜயநகர காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இரண்டாம் திருச்சுற்றின் உட்புறச் சுவரில் விஜயநகர சின்னங்களான பன்றி, பிறை, வாள் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. விஜயநகர காலத்தில் கோயில் முழுமையும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இவைகள் சான்றுகளாக அமைகின்றன.

## முதல் திருச்சுற்று

உட்புற திருச்சுற்றின் தெற்குப் பகுதியில் நுழைவாயில் அமைந்துள்ளது. முதல் உட்புறத் திருச்சுற்று, கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபங்களைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றி வட்டத் தூண்களையுடைய மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கிறது. முன்மண்டபத்திலுள்ள 12 தூண்களும் சிற்பவேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. தூண்களின் அடிப்பாகத்தை சிம்மங்கள் தாங்குகிறது. தூண்களின் நாகபந்தமும், போதிகையும் வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. இவை விஜயநகரத்துக் கால தூண்களாகும். இத்தூண்களின் நுனியை யாளி வடிவ சிம்மங்கள் தாங்குகின்றன.

## இரண்டாம் திருச்சுற்று

ஆறுமுககசுவாமி கோயிலைச் சுற்றி இரண்டாம் திருச்சுற்று அமைந்துள்ளது. இத்திருச்சுற்றின் கிழக்கு திசையில் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலுக்கு அடுத்த பெரிய மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்து தூண்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறப்புற உள்ளன.

## தூண் சிற்பங்கள்

தூண்களில் வினாயகர், கண்ணப்பர், பிச்சாடனர், முனிவர்கள், பிறை, வாள், பன்றி உருவம் (விஜயநகர பேரரசு சின்னம்), குழந்தையை இடுப்பில் வைத்து கொஞ்சும் தாயின் சிற்பம், சக்தி, வஜ்ஜிர ஆயதங்களுடன் யானை மீது அமர்ந்துள்ள முருகன் சிற்பம், திரிபுராந்தகர், நரசிம்மர், ரதி, பார்த்தசாரதி போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பன்றி, வாள் சின்னங்களைக் கொண்டு இவை விஜயநகர காலத்தவை என்பதனை அறியலாம். திருச்சுற்றின் உட்புற, வெளிப்புற சுவர்களில் விஜயநகர சின்னங்களான பன்றி, வாள்,

பிறை போன்றவை காணப்படுகின்றன. கல்வெட்டு ஒன்றும் இப்பிரகாரத்தில் உள்ளது. இதன் காலமும் விஜயநகரர் காலமே.

## கோயில் கருவறைச் சிற்பங்கள்:-

### ஆறுமுகன்

கருவறையின் நடுவில் முருகன் தனது தேவியர்களுடன் நின்ற கோலத்துடன் காட்சியளிக்கிறார். தனது பின்னிரு கைகளில் அக்கமாலை, கமண்டலம், முன்னிரு கைகளில் அபயம், வரதம் போன்ற அமைப்புகளும், காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் அணிகலன்கள், மார்பில் உபவீதம் செல்கிறது. உதரபந்தம் இடுப்பிற்கு மேலே செல்கிறது. முருகன் இங்கு ஆறுமுகங்களுடன் அல்லாமல் ஒருமுகத்துடனே காணப்படுகிறார். இக்கோயிலில் இருந்த ஆறுமுகமுள்ள சிற்பம், சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இருப்பதாக இங்குள்ள குருக்கள் தெரிவித்தார்.

### வள்ளி

முருகனின் வலப்புறம் வள்ளி நின்ற நிலையில் காணப்படுகிறாள். இடது கையில் தாமரை மலரும், வலது கையைத் தொங்கவிட்டும் காதுகளில் பத்ர குண்டலங்களுடனும், தலையில் கரண்ட மகுடமும் அலங்கரிக்கின்றன.

### தெய்வயானை

ஆறுமுகனின் இடதுபுறம் இருப்பவள் தெய்வயானை. வலக்கையில் நீலோற்ப மலரும், இடக்கையினைத் தொங்கவிட்டும், பின் வலது கையில் அக்கமாலை, பின் இடது கையில் அங்குசம் போன்ற கருவிகளுடனும் காணப்படுகிறது. கருவறைச் சிற்பங்கள் விஜயநகர காலத்தியவை.

### பைரவர்

மகாமண்டபத்தின் வடக்கு மூலையில் பைரவர் சிற்பம் உள்ளது. தலையில் ஜ்வாலை மகுடமும், பின்னிரு கைகளில் வலக்கையில் உடுக்கையும், இடக்கையில் பாசமும், முன் வலக்கையில் சூலமும், இடது கையில் கபாலமும் உள்ளன. நிர்வாணத் தோற்றத்துடன் உள்ள பைரவரின் பின்புறம் அவரின் வாகனமான நாய் ஒன்று காணப்படுகிறது.

❖❖❖

# சிற்றாலயங்கள்

திருத்தணியைச் சுற்றிலும் ஏராளமான சிறு கோயில்கள் உள்ளன. இச்சிற்றாலயங்கள் மக்களால் சிறப்பாக வழிபடப்படுகின்றன.

## செங்கழுநீர் விநாயகர் - பெயர்க்காரணம்

கலைசை என்பது 'தொட்டிக்கலை' என்பதன் மருஉ வாகும். திருவள்ளூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தலம் கலைசை, கலைசாபுரி, கோவிந்தபுரம் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இங்கே பண்டைக்காலத்தில் பசுக்கொட்டில்கள் மிகுதியாக இருந்தன என்றும், அதனால் தொட்டிக்கலை என்னும் பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். தொட்டி - பசுந்தொழுவத்திலுள்ள கழுநீர்த்தொட்டி. இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் செங்கழுநீர் விநாயகர் என்பது. "கலைசைச் சிறுகளபம், செங்கழுநீர்க்குன்று, செங்கழுநீர் மதநந்தி விநாயகர், செங்கழுநீர்க் களிறு, செங்கழுநீர் இளங்களிறு, செங்குவளை நாயகன் செங்கழுநீர்க் குழகன், செங்கழுநீர்ப்பிரான், பரயோக முதல்வன், மந்திர சொரூபன், உருகும் அடியார் அள்ளூற உள்ளம் ஊறும் தேன், உண்ணத் தெவிட்டாச் சிவானந்த ஒளி, புலன்வழிப் போய்த்திருகும் உளத்தார் நினைவினுக்கும் சேயோன், உமையீன்ற சிறுவன், இருவிழியாற் பருகும் அமுது, உயிர்பைங்கூழ் தழைக்க கருணை மழை பரப்பும் முகில், நறும்பாகு, வரைகிழித்த முருகவேட்டு முன்னுதித்த முதல்வன், செங்கழுநீர் முனி, செங்கழுநீர்ச் சிறுவன், தெள்ளத் தெளிந்தோருக்க அள்ளூறும் செல்வன், விக்கினம் செய் மன்னன் உற்பல விநாயகன், உற்பல வேழம், அருறுரு வினைவு பூரணப் பொருள், சிந்தூரக் களபம், ஒற்றைக் கிறுக்கன், சச்சிதானந்த பரயோகம் எனப் பல படியாக "செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்"[1] போற்றுகின்றன.

செங்கழுநீர்ப் பிள்ளையார்க்கு சந்தி விளக்கு, நிலம் கொடுக்கப்பட்டதை தெலுங்குச்சோழர், விஜயநகர காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. "செங்கழுனீர்ப் பிள்ளையாற்கு வைத்த சந்தி விளக்கு" (138/1942-43) "செங்கழுனிப் பிள்ளையாற்க்கு

---

1. கலைசை - செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் திருவாடுதுறை ஆதினம் - 1960

வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு திருத்தணியில் அரையகாம்பையில் விட்ட குழி ருள ” என்றும் (139/1942-43) கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. “திருத்தணி திருமலைமேற் செங்கழுநிற் பிள்ளையார்க்கு திருத்தணியில் என்று மலை மேலுள்ள வினாயகரை கல்வெட்டு குறிப்பிடுகிறது. (135/1942-43).

விஜயநகர கல்வெட்டுகள் யாவும் திருமலைமேற் நின்றருளிய செங்கழுநீர்ப் பிள்ளையார்க்கு விட்ட திருநாமத்துக்காணி, சந்தி விளக்குகள் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றன.

1. **அருள்மிகு பாவாடை வினாயகர் கோயில் :** இவ்விநாயகர் கோயில் திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ளது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இக்கோயிலின் பரப்பு 800 சதுர அடிகளாகும். இதன் நுழைவாயில் தென்புறம் நோக்கியுள்ளது. இங்குள்ள வினாயகருக்கு பாவாடை வினாயகர் என்று பெயர்.

2. **அருள்மிகு சுந்தர வினாயகர் கோயில் :** திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் இருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டது. இக்கோயில் திரு. முத்தாயி குமாரசுவாமி முதலியார் அவர்களால் கட்டப்பட்டது. இதற்கு திருமதி முத்தாயி ஜானகியம்மாள் துணையாக இருந்துள்ளார். 600 சதுர அடி பரப்பிலுள்ள சுந்தர வினாயகர் கோயில் வடக்கு நோக்கியுள்ளது. காலை, மாலை இரு நேரங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

3. **சகஸ்சிரேசுவரர் கோயில் :** இக்கோயில் திருக்குளத்தின் கீழக்கரையில் உள்ளது. இக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தேவியின் பெயர் ஞானாம்பிகை.

4. **வீரபத்திர சுவாமி கோயில் :** திருக்குளத்துக்குக் கிழக்கே உள்ளது. பழைய சன்னதி வீதியில் இருக்கிறது.

5. **சரசுவதீசுவரர் கோயில் :** பிரமமேசுவரர் கோயில், செங்கழுநீர் விநாயகர் கோயில், ஏகாத்தம்மா, படைவீட்டம்மா கோயில்கள் மலை மீதுள்ளன.

6. **திருவாலங்காடு :** அருள்மிகு வடாரண்ய சுவாமி திருக்கோயில் பாடல் பெற்ற தலம்.

7. **திருப்பாசூர்** : அருள்மிகு பாசூர் நாத சுவாமி திருக்கோயில்

8. **நெடும்பரம்** : அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில்

9. **கரும்பேடு** : அருள்மிகு நாதாதீஸ்வரசுவாமி திருக்கோயில்

10. **பெரியநாகபூடி** : அருள்மிகு நாதாலீஸ்சுர சுவாமி திருக்கோயில்

11. **வேப்பகுண்ட பாளையம்** : அருள்மிகு சந்தான வேணுகோபால சுவாமி திருக்கோயில் மற்றும் இதனைச் சார்ந்த கோயில்கள்*

12. **அருள்மிகு மகிசாசூரமர்த்தினி** திருக்கோயில் மத்தூர்*

13. **மாணிக்கவாசகர்** : மடாலயம் - குருவராயப்பேட்டை

14. **அருள்மிகு கருமாணிக்கவாசகர் திருக்கோயில்**

15. **அருள்மிகு சாட்சி பூதஸ்வர சுவாமி திருக்கோயில்:** பழையனூர்*

16. **அருள்மிகு வாகீஸ்வர சுவாமி திருக்கோயில்** : திருப்பாச்சூர் - பாடல் பெற்ற தலம்*

17. **அகஸ்தீஸ்வர சுவாமி கோயில்** : மத்தூர்*

---

* இக்குறியிட்ட கோயில்கள் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலின் கட்டுப்பாட்டில் உள்ளன. .

# தணிகையில் வழிபட்டோர்

திருத்தணிகையில் முருகப்பெருமானைத் தியானித்துச் சிவபெருமான் பிரணவப் பொருள் உபதேசிக்கப் பெற்றார். முருகனாகிய குழந்தை பிரணவப் பொருளை விளக்கிய திறனைக்கேட்டு, "மக்கள் மெய்தீண்டல் உலகிற்கின்பம். மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" என்றபடி தந்தையாகிய சிவபெருமான் பெருமுழக்கம் செய்து சிரித்து மகிழ்ந்தருளினார். அதனால் அவருக்கு இங்கு வீர அட்டகாசர் என்று பெயராயிற்று. மந்தகாசம் - புன்முறுவல். அட்டகாசம் - ஓலமிக்க பெருமுறுவல். சிவபெருமான் பிரணவ உபதேசம் பெற்று வீர அட்டகாசம் புரிந்தருளிய கோயில், ஊருக்கு வடகிழக்கே நந்தியாற்றுக்கு வடகரையில் உள்ளது. அக்கோயில் "வீரட்டகாசம்" என்றும், வீராட்டகாச ஈசுவரர்-கோயில்" என்றும், பொதுமக்கள் "வீரட்டானேசுவரர் கோயில்" என்றும் "திருவீரட்டானத்து எம்பெருமான்" என்றும் அழைக்கின்றனர்.

## திருமால்

திருத்தணிகையில் முருகனை வழிபட்டு, தாரகாசுரனால் கவரப்பட்ட தமது சக்கரம், சங்கு முதலியவற்றைத் திருமால் மீண்டும் பெற்றார். அவர் உண்டாக்கிய விஷ்ணு தீர்த்தம், மலையின் மேல், கோயிலுக்கு மேற்கே உள்ளது.

## இராமபிரான்

இங்கு இராமபிரான் முருகனை வழிபட்டு இராவணனை வெல்லும் ஆற்றலையும், அருட்படைகளையும் பெற்றதுடன், இராவணனை வென்ற பிறகு வந்து, மீண்டும் முருகனைப் பூசித்து சிவஞானம் பெற்றார். இராவணனை வென்று, விஜயம் பெற்று வந்ததனால் இங்குள்ள இராமபிரானுக்கு 'விஜயராகவப் பெருமாள்' என்று பெயரமைத்து, விஜயவல்லித் தாயார் உடனுறை 'விஜயராகவப் பெருமாள் கோயில்' ஆறுமுக சுவாமி கோயிலுக்குத் தெற்கில் உள்ளது.

## பிரம்மா

திருத்தணிகையில் முருகனைப் பூசித்துப் படைப்புத் தொழில் செய்யும் ஆற்றலை பிரம்மா பெற்றார். மற்றும் சூரபதுமனால்

கவரப்பட்ட தமது செல்வங்களையும் முருகன் அருளால் திரும்பப் பெற்றார். கலைமகளும் இல்லத்தில் முருகனைப் பூசித்தனள். கிழக்கே மலையடிவாரத்திலிருந்து மலைமேல் ஏறிச் செல்லும் வழியில் பாதித் தொலைவில், மலைப்படிகளை அடுத்த வடபக்கத்தில் பிரமதேவர் உண்டாக்கிய பிரமதீர்த்தம் இருக்கின்றது. இது 'பிரம சுனை' என வழங்கும். இதன் தென்கரையில் பிரமேசுவரர் கோயில் இருக்கின்றது.

இங்ஙனம் இத்தணிகை தலத்தில் சிவபெருமான், திருமால், பிரம்மா என்னும் மும்மூர்த்திகளும் வழிபட்டு உய்ந்த வரலாற்றுக் குறிப்பினை,

"சிலைமகள் நாயன்
கலைமகள் நாயன்
திருமகள் நாயன்
தொழும் வேலா"

என அருணகிரி[1] பாடியுள்ளார்.

## இந்திரன்

சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, சிந்தாமணி, கற்பகத்தரு முதலிய செல்வங்களை சூரபதுமன் தேவலோகத்தில் இருந்து கவர்ந்து சென்றான். அச்செல்வங்களை மீண்டும் பெறுவதற்காக இந்திரன் முருகனை திருத்தணிகையில் வழிப்பட்டார். திருத்தணிகை மலைக்குத் தென்புறத்திலுள்ள ஒரு சுனையில் நீலோற்பல மலர்க்கொடியை நட்டு வளர்த்து அதன் பூக்களைக் கொண்டு, காலை, மாலை, நண்பகல் என்னும் மூன்று வேளைகளிலும் இந்திரன் முருகனை வழிப்பட்டு வந்தார். அப்போது அவன் நிறுவி வணங்கிய விநாயகருக்கு 'செங்கழுநீர் விநாயகர்' என்று பெயர். அதனால் உண்டாக்கப் பெற்ற நீலோற்பல மலர்ச்சுனை, 'இந்திர நீர்ச்சுனை' என்னும் பெயர் பெற்ற தீர்த்தமாக, மலைக்கோயிலின் தெற்கு வாயிலுக்கு நேராக இருக்கின்றது. இது 'கல்லார தீர்த்தம்' எனவும் அழைக்கப்படுகிறது. இத்தீர்த்தத்தின் நீர்தான் சுவாமியின் திருமுழுக்கிற்கும், திருமடைப்பள்ளிக்கும், பூசை செய்வதற்கும், தனிச்சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்திரனுடன் தேவர்கள் யாவரும் வந்து வழிபட்ட செய்தியை

1. திருப்புகழ் - அருணகிரிநாதர், பாடல் 261.

"இமையவர் பணி
திருத்தணிப் பொற்பதி"[1]

என்றும்,

"அண்டர்கள் தாம் மெச்சிய
நீள் தணிகையம்பதி"[2]

என்று அருணகிரி பாடுகிறார்.

## திருநந்திதேவர்

பசு, பதி, பாசம் என்னும் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் இயல்புகளைக் கூறும் சைவ சித்தாந்த நுட்பங்களை, தணிகை முருகனை வழிபட்டுத் 'திருநந்திதேவர்' அறிவு பெற்றார். அவர் பொருட்டு முருகப்பெருமான் வரவழைத்த "சிவதத்துவ அமிர்தம்'' என்னும் நதியே, இப்பொழுது 'நந்தியாறு' என வழங்குகின்றது. முருகனின் அருளைப் பெற நந்திதேவர் யோகம் புரிந்த குகை "நந்தி குகை" என வழங்கப்பெறுகின்றது.

## வாசுகி நாகம்

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தினை நாணாகவும் கொண்டு கடைந்தனர். அங்ஙனம் கடைந்தபோது, வாசுகி நாகத்தின் உடலிற் பல வடுக்களும், புண்களும், தழும்புகளும் ஏற்பட்டு பெரிதும் துயர் விளைவித்தன. ஒரு சுனையில் நாடோறும் முறையாக நீராடி, முருகனை வழிபட்டு வாசுகி நாகம் அத்துயரங்களினின்று நீங்கி உய்ந்தது. அது நீராடிய சுனை "நாக சுனை"என வழங்கி வருகின்றது. ஆதிசேடனும் இவ்வாறு வழிபட்டு அருள் பெற்றான். ஆதிசேட தீர்த்தம் என்பது விஷ்ணு தீர்த்தத்திற்கு மேற்கே மலைப்பாதைக்குத் தென்புறம் அமைந்துள்ளது.

## அகத்தியர் தீர்த்தம்

தணிகை முருகனை வழிபட்டு, அகத்திய முனிவர் முத்தமிழ்ப் புலமையும், சிவஞானத் தெளிவும் பெற்றார். அவர் உண்டாக்குவித்த 'அகத்திய தீர்த்தம்', ஆதிசேட தீர்த்தத்திற்கு தென்கிழக்கில் உள்ளது.

---

1. திருப்புகழ் - அருணகிரிநாதர், பாடல் 311.

2. மேலது பாடல் 303

## நாரத முனிவர் தீர்த்தம்

இவர் ஞானத்திலும், பக்தியிலும் சிறந்து விளங்குபவராயினும், அவருக்குச் சில ஐயப்பாடுகள் இருந்து வந்தன. அவ்வையப்பாடுகள் நீங்கி மெய்யுணர்வு பெறுவதற்காக, நாரதர் இங்கு வந்து முருகனை வழிபட்டு அருள் பெற்றார். அவர் ஏற்படுத்திய நாரத தீர்த்தம், அகத்திய தீர்த்தத்திற்கு கிழக்கே உள்ளது.

## ஏழு முனிவர்கள்

'சப்தரிஷிகள்' என்று கூறப்பெறும் வசிட்டர் முதலிய ஏழுமுனிவர்கள், தணிகை முருகனைப் பூசித்தனர். அவர்கள் பூசித்த இடம் மலையின் தென்கீழ்த் திசையிலுள்ளது. அவர்கள் அமைத்த ஏழு சுனைகளும், கன்னியர் கோயிலும் இங்கு உள்ளன. இந்த இடம் இப்போது "ஏழு சுனை" என்றும், "கன்னியர் கோயில்" என்றும் வழங்குகின்றது. அடர்ந்த சோலைகளால் சூழப்பெற்று பசுமையும், தனிமையும் நிறைந்துள்ள இடமாகும். வெயில் நுழையாமல் அமைதி மிகுந்த இடமாகத் திகழும் இந்த இடம் தவத்திற்கும் தியானத்திற்கும் ஏற்ற இடமாக விளங்குகின்றது.

"தவமுனிக் கணத்தவர்
மதுமலர் கொடுபணி
திருத்தணிப் பதி"[1] என்று அருணகிரி பாடியுள்ளார்.

## குமரக்கடவுள்

குமரக்கடவுள் என்னும் முருகப்பெருமானே, தணிகையில் தம் தந்தையாகிய சிவனை வழிபட விரும்பினார். அதனால் தணிகை மலையின் மீது தாம் இருக்கும் வடகிழக்குப் பக்கத்தில், ஆபத்சகாய விநாயகர் என்னும் மூர்த்தியை நிறுவி, முதற்கண் வழிபட்டு, பின்னர் சிவலிங்க திருமேனியை அமைத்து வழிபட்டார். அப்போது சிவபெருமான் சூரபதுமனை வெல்வதற்கு "ஞானசக்தி" என்னும் சிறந்த வேற்படையை முருகனுக்கு வழங்கியருளினார். அதனால் இங்குள்ள முருகனுக்கு "ஞானசக்திதரன்" என்றும் சிவபெருமானுக்கு "குமாரேசுவரர்" "குமாரலிங்கம்" என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இரண்டாவது உட்பிரகாரத்தின், வடக்குப்பக்கத்தில் இச்சன்னதி அமைந்துள்ளது. குமாரேசுவரர் ஆகிய சிவபெருமானுக்கு அபிடேகம்

1. திருப்புகழ் - அருணகிரிநாதர் பாடல் 266

செய்யக் குமாரக்கடவுள் வரவழைத்த கங்கா தீர்த்தமே மலையடிவாரத்திலுள்ள பெரிய திருக்குளமாகும். இதுவே 'குமார தீர்த்தம்' அல்லது 'சரவணப் பொய்கை' என்றழைக்கப்படுகிறது. சுமார் 200 ஆண்டுளுக்கு முன்னர் வாழ்ந்த கச்சியப்ப முனிவர் காலத்தில் கூட சரவணப் பொய்கை என்னும் இத்திருக்குளம், மிகச் சிறப்பாகப் போற்றப்பெற்றிருந்தது என்பதை

"எத்துயர்த் திரளும்
அத்தினத்து அகற்றும்
சரவணப் பொய்கைத்
தடம்புனல் துளைக"[1]

என்று அவர் பாடியருளிய தணிகையாற்றுப் படையில், சரவணப்பொய்கை என்னும் இந்தக் "குமார தீர்த்தம்" ஆகிய திருக்குளத்தைப் புகழ்ந்திருப்பதைக் காணலாம்.

---

1. தணிகையாற்றுப்படை, கச்சியப்ப முனிவர்.

❖❖❖

# கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டு என்பது கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துகளையும் அதன் செய்திகளையும் குறிக்கும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளின் மூலம் அன்று நிலவிய அரசியல், பண்பாடு, சமுதாய பொருளாதார நிலைகளை அறியமுடிகிறது.

திருத்தணியில் மொத்தம் 39 கல்வெட்டுகள் காணப் படுகின்றன. இக்கல்வெட்டுகள் 1905-ஆம் ஆண்டு படியெடுக்கப்பட்டு இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் வரிசை எண் 429 முதல் 451 வரை இடம் பெற்றுள்ளன. வரிசை எண் 432-ஆம் எண்ணுள்ள கல்வெட்டு மட்டும் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி - 13-இல் வெளிவந்துள்ளது. வரிசை எண் 433-ஆம் கல்வெட்டு தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி 19-இல் வெளிவந்துள்ளது. 433, 435 ஆகிய இரு கல்வெட்டுகள் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி - 12-இல் வெளிவந்துள்ளன. ஏனைய கல்வெட்டுகளின் வாசகங்கள் முழுவதுமாக வெளிவரவில்லை. இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் 1942-43-இல் வரிசை எண் 128 முதல் 143 வரை 16 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் தெலுங்குக் கல்வெட்டுகளும் அடங்கும். ஒரு சில கல்வெட்டுகள் சிதைந்துள்ளன.

திருத்தணி தவிர வேலஞ்சேரி என்ற கிராமத்திலும் சில கல்வெட்டுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வேலஞ்சேரியில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளின் குறிப்புகள் Annual Report on Epigraphy 1942-43 - இல் 115, 116, 122 என்ற எண்களில் வெளியாகியுள்ளன. வேலஞ்சேரியின் மேற்கேயுள்ள ஏரித்தூம்பில் ஒரு கல்வெட்டு புதியதாகக் கண்டறியப்பட்டது.

திருத்தணிகையில் காணப்படும் கல்வெட்டுகளில் பல்லவர், சோழர், தெலுங்குச்சோழர், பாண்டியர், விஜயநகரர், சாளுவர் போன்ற அரசமரபினர் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டுகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தவை.

## கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள்

திருத்தணியிலுள்ள கல்வெட்டுகள் வீரட்டானேசுவரர், சுப்பிரமணிய சுவாமி, ஆறுமுகசுவாமி, விஜயராகவ சுவாமி ஆகிய கோயில்களில் காணப்படுகின்றன. இக்கோயில்களின் உபானம், முப்பட்டை குமுதம், பட்டிகை, பித்தி போன்ற கட்டட அமைப்பு பகுதிகளிலும், மகாமண்டபங்களின் உட்புற, வெளிப்புற சுவர்களிலும், திருச்சுற்று சுவர்களின் உட்புறங்களிலும் காணப்படுகின்றன. கல்பலகைகளிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. திருத்தணி - அரக்கோணம் இரயில்வே பாதையிலுள்ள ஏரிக்கரையிலும், வேலஞ்சேரியிலுள்ள ஏரித்தூம்புகளிலும் கல்வெட்டுகள் காணப் படுகின்றன.

# அரசர்கள்

## அபராஜித விக்கிரமவர்மர் (870-888)

பல்லவ குலத்தின் இறுதி அரசன் அபராஜித விக்கிரமவர்மர் ஆவான். இவனது 18-ஆம் ஆட்சியாண்டு வரை கல்வெட்டுகள்[1] கிடைக்கின்றன. இவனது ஒன்பதாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது திருத்தணி - வேலஞ்சேரி செப்பேடுகள்[2] ஆகும். இவனது மற்றொரு கல்வெட்டு[3] இவன் வெண்பா பாடுவதில் வல்லவன் என்பதனை

"திருந்து திருத்தணியல் செஞ்சடை ஈசர்க்கு
கருங்கல்லாற் கற்றளியாற் நிற்க - விரும்பியே
நற்கலைகளெல்லாம் நவின்ற சீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து"

இவ்வெண்பா பாடல் உணர்த்துகிறது. இதில் நம்பியப்பி என்பவரின் திருப்பணியைப் புகழ்ந்து வெண்பா இயற்றியவன் பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் என்பது தேற்றம்.[4] இவன் தன் நண்பர்களான முதலாம் ஆதித்தச் சோழன், கங்க மன்னன் முதல் பிருதிவபதி ஆகியோர் துணை கொண்டு, இரண்டாம் வரகுண

---

1. A.R.E. 435/1905
2. Tiruttani - Velanjeri Copper Plates.
3. A.R.E. 433/1905
4. கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள் - சதாசிவ பண்டாரத்தார் பக்கம் 101.

பாண்டியனைத் திருப்புறம்பியம் பெரும் போரில் கி.பி. 880-ஆம் ஆண்டில் வென்று வாகை சூடியவன். இப்பெரும் போருக்குப் பின்புதான் தனது வெற்றியின் நினைவாக "தூங்கானை மாடக்கோயிலை" கட்டினான் என்று எண்ண இடமுண்டு.

## மதுரை கொண்ட பரகேசரி

சோழமண்டலத்தில் முடிசூடி ஆட்சி புரிந்து வந்த சோழ மன்னர்கள் எல்லோரும் இராசகேசரி, பரகேசரி என்ற இரு பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்டனர். என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. அவற்றுள் பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன் விசயாலய சோழன். இங்கு குறிப்பிடும் பரகேசரி என்ற பட்டப் பெயர் புனைந்தவன். "மதுரை கொண்ட பரகேசரியான முதலாம் பராந்தகச் சோழன்" ஆவான். இவனது 16, 32, 34-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருத்தணியில் கிடைக்கின்றன. இவன் மதுரை வரை படையெடுத்துச் சென்று பாண்டியன் இரண்டாம் இராஜசிம்மனைத் தோற்கடித்து இலங்கைக்கு ஓடச் செய்தான் இவ்வெற்றியின் காரணமாக இவன் "மதுரை கொண்ட பரகேசரி" என்ற பட்டம் பெற்றான்.

## மூன்றாம் கிருஷ்ணன்

இராட்டிரகூட அரச மரபினனான மூன்றாம் கிருஷ்ணன் எனும் கன்னர தேவனின் கல்வெட்டு 'கச்சியம், தஞ்சையும் கொண்ட கன்னர தேவன்' என்று குறிப்பிட்டு ஆட்சியாண்டுக் குறிப்பிடாத கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இவன் பராந்தகனுடன் போர் செய்து தஞ்சையைக் கைப்பற்றியவன் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

## முதலாம் இராஜராஜன்

முதலாம் இராஜராஜன் கல்வெட்டு மெய்க்கீர்த்தியுடன் துவங்குகிறது. "திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை" என்று கல்வெட்டு ஆரம்பிக்கிறது. முதலாம் இராஜராஜனின் 12-வது, 28-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஒரு கல்வெட்டு ". . . . . . எம்பெருமானுக்கு தமளத நாட்டு தன்னடியார் திருநாளில் ஸ்ரீவெங்கடயாதெ பொவாற்கும், வருவாற்கும் ஆஹாரம் இடுவதற்கு ஸஹையொம்

விற்றுக் கொடுத்த நிலமாவது . . . ." என்று நிலம் தானமாகக் கொடுத்தது பற்றியும், மற்றொரு கல்வெட்டு ". . . . . . . உழக்கினால் நிசதம் உழக்கெண்ணை சந்திராதித்தவல் உள்ளதனையு முட்டாமை அட்டி ஒரு திரு நுந்தாவிளக்கு எரிப்பிப்போமாகவும்" என்று கோயிலில் நொந்தா விளக்கு ஒன்று எரிப்பிப்பதற்காகக் கொடுத்த தானங்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

## முதலாம் இராசேந்திர சோழன்

முதலாம் இராசேந்திர சோழன் என்பவன் முதலாம் இராஜராஜனின் மகனாவான். இவனது கல்வெட்டுகள் "கெங்கையும் கிடாரமும் வடவ்வுதெசமும் கொண்ட . . . . .கொப்பரகெஸரி பந்மராந ஸ்ரீராஜெந்த்ரசொழ தெவற்கு யாண்டு" என்றும், "திருமன்னி வளர" என்றும் துவங்குகின்றன. இராஜேந்திர சோழனின் 10-வது ஆட்சியாண்டு முதல் 19-வது ஆட்சியாண்டு வரை கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் விளக்கு எரிக்கக் கொடுத்த பசுக்களைப் பற்றியும், கோயில்களுக்குக் கொடுத்த நிலங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. ஒரு கல்வெட்டு இவனது மெய்க்கீர்த்தியுடனே முடிவடைகிறது.

## இராஜாதிராஜன்

முதலாம் இராஜேந்திர சோழனின் முதல் மகன் இராஜாதிராஜன் ஆவான். இவனுடைய 31-வது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. "திங்களேர் தருதந்றொங்கல் வெண்குடைக் கீழ்" என்ற மெய்க்கீர்த்தி துவங்குகிறது. ". . . . . அரையன் முடிகொண்டான் ஆன ராஜாதிராஜக் காரைக் காடுடையாற்கு இவர் யஜுஸாவஸ்தம் வக்காணிப்பார்க்கு இவர் விட்ட வ்ருத்தியாக வைப்பாராக விற்றுக்குடுத்த நிலமாவது" என்று கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. தன்ம சாஸனம் எனும் தர்ம சாத்திரத்தை விளக்கிச் சொல்லித் தரும் ஆசிரியருக்கு நிலம் அளித்துள்ளச் செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## விக்கிரம சோழன்

முதலாம் குலோத்துங்க சோழனுடைய புதல்வன் விக்கிரமச் சோழன் ஆவான். இவனுடைய 11-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு "சந்தி விளக்கு ஒன்றுக்கு

விட்ட ஆடு பன்னிரெண்டு" என்ற குறிப்பு சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு பன்னிரெண்டு ஆடுகள் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தருகிறது.

## விஜயகண்ட கோபாலன்

தெலுங்குச் சோழ குலத்தைச் சேர்ந்த விஜயகண்ட கோபால தேவன் என்பவன் திரிபுராந்தகன என்பவனின் மகனாவான். இவனுடைய 4, 17, 26-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் "செங்கழுனீர்ப் பிள்ளையாற்கு வைத்த சந்தி விளக்கு," "செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக விட்ட நிலம்," பலிபீடம் வைக்கக் கொடுத்த தானங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

## மாறவர்மன் குலசேகரன்

இரண்டாம் பாண்டியப் பேரரசில் ''எம்மண்டலமுங் கொண்டவன்'' என்ற புனைப்பெயர் பெற்றவன். இவனுடைய 30-வது ஆட்சியாண்டு கல்வெட்டு கிடைக்கிறது. இவனது கல்வெட்டு செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு உச்சி சந்தி அமுது காட்டவும், திருநாள் எழுந்தருளவும் திருப்பணிக்குக் கொடுத்த தானங்களைப் பற்றிய விவரங்களை விரிவாக எடுத்துரைக்கின்றன.

## வீரகம்பண்ண உடையார்

தமிழகத்தில் பாண்டியப் பேரரசு நலிவுற்றபோது விஜயநகர மன்னர்களது ஆளுகைக்குத் தமிழகம் இலக்காகியது. இவர்கள் தென்னகத்தின் 'இந்துமதக் காவலர்கள்' என வரலாற்று ஆசிரியர் களால் புகழப்படுகின்றனர். துக்ளக் வம்சத்திற்கு அடிமையாக இருந்த ஹரிஹரர், புக்கர் என்ற இருவர் தாங்கள் கட்டாயத்தின் பேரில் தழுவியிருந்த இஸ்லாம் மதத்தை விடுத்துத் தங்களது இந்து மதத்திற்கு திரும்பி வந்த இந்து சாம்ராஜ்யத்தை நிறுவினார்கள். முதலாம் புக்கரின் மகனான வீர கம்பண்ண உடையாரின் 1366-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைக்கிறது. ஆனால் இக்கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ள நிலையில் கிடைக்கிறது.

## இரண்டாம் தேவராயர்

முதலாம் விஜய புக்கரின் மகனான இரண்டாம் தேவராயரின் சக வருடம் 1359 குறிப்பிட்ட கல்வெட்டு ஒன்றும், ஆண்டு குறிப்பிடாதக் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளன. இவை சோபன மண்டபம் கட்ட அளித்த தானங்களைக் கூறுகின்றன.

## கிருஷ்ண தேவராயர்

கிருஷ்ண தேவராயர், வீரநரசிம்மர் என்பவனின் தம்பியாவார். இவருடைய காலத்தில் விஜயநகர அரசு வலிவடைந்தது. பல கோயில்களின் இராஜகோபுரங்களைக் கட்டியவன் இவனே. சக வருடம் 1433, 1436-ஆம் ஆண்டுக் குறிப்பிட்ட கல்வெட்டுகள் திருத்தணியில் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்கும், பொலியூட்டுக்கும் அளித்த கொடைகளைக் குறிப்பிடுகின்றன.

## திருமலை தேவராயர்

விஜயநகரப் போரரசின் போது அச்சுதராயருக்கு இரு மைத்துனர்கள் இருந்தனர். இருவரும் திருமலை என்ற பெயரையே கொண்டிருந்தனர். சக வருடம் 1447-அம் ஆண்டுக் குறிப்பிட்ட கல்வெட்டு திருத்தணியில் கிடைக்கிறது. இதற்கு சரியான ஆங்கில வருடம் கி.பி. 1525 ஆகும். இதே ஆண்டின் போது கிருஷ்ண தேவராயர் விஜயநகரப் பேரரசராகத் திகழ்ந்தார். அப்போது திருமலை ராயர் விஜயநகர கிழக்கு மண்டலத்தின் அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கலாம். அப்போது இவர் திருத்தணியிலுள்ள கோயிலுக்கு தானம் கொடுத்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## அச்சுத தேவராய மகாராயர்

கிருஷ்ண தேவராயரின் மாற்றான் தாயின் மகன் அச்சுத தேவராய மகாராயர் என்பவராகும். இவனுடைய கால சக வருடம் 1453-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைக்கிறது. அமுதுபடிக்காகக் கொடுத்த தானத்தைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## சதாசிவதேவ மகாராயர்

அச்சுத தேவராயரின் மருமகன் சதாசிவதேவ மகாராயரின் காலத்தில் சக வருடம் 1470, 1486-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள்

கிடைக்கின்றன. இக்கல்வெட்டு விளக்கநேரி குப்பம் என்ற கிராமத்தை தானமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றன.

### வெங்கடதேவ மகாராயர்

இவருடைய கல்வெட்டு ஒன்று சிதைந்துக் காணப்படுகிறது. தாணிப்பதக்கம் தானமாக அளித்ததைக் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

### பொம்மராஜு

சூரிய குலத்தைச் சேர்ந்த Matli வம்சத்தின் நிறுவனர் பொம்மராஜு ஆவார். இவருடைய கல்வெட்டு ஒன்று ஆட்சியாண்டுக் குறிப்பிடாமல் கிடைத்துள்ளது. தெலுங்கிலுள்ள இக்கல்வெட்டு பொம்மராஜுவின் வம்சாவளியினைக் குறிப்பிடுகிறது. தனது மூதாதையர்களான நாராயணராயரின் காலத்தில் அளிக்கப்பட்ட தானங்களை மீண்டும் திரும்ப அளிப்பதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## அரசர்களும் கொடைகளும்

### பல்லவர் காலம்

பல்லவ மன்னர்களில் இறுதி அரசன் அபராஜிதவர்மன் ஆவான். இவனே திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலைக் கட்டியவன். இக்கோயில் கல்வெட்டுகள் இக்கோயிலை "திருவீரட்டானமுடையார்" என்று குறிப்பிடுகின்றன. கோயிலைக் கட்டியவன் கோயிலின் திருவமிர்துக்கு நானாழி அரிசியும், இரண்டு சந்தி விளக்கெரிக்க உழக்கெண்ணையும் நடந்து வரவும் 1000 குழி நிலத்தைத் தானமாக திருத்தணியல் சபைக்கு இறையிழிச்சிக் கொடுத்துள்ளான்.

## சோழர்

### முதலாம் இராஜராஜன் (985-1014)

முதலாம் இராஜராஜன், காலத்தில் தொண்டைமண்டலம் ஜயங்கொண்ட சோழ மண்டலமாக மாறியது. இவன் திருத்தணி வீரட்டானமுடைய தேவர்க்கு பல தானங்களை அளித்துள்ளான். திருவேங்கட யாத்திரை (திருப்பதி) போவார்க்கும், வருவார்க்கும்

உணவு அளிப்பதற்காக நிலங்களைத் தானமாக இறையிழிச்சிக் கொடுத்துள்ளான். நுந்தா விளக்கெரிக்கவும் உழக்கெண்ணை தினமும் கொடுக்க ஏற்பாடுகள் செய்தான்.

## முதலாம் இராஜேந்திரன் (1012-44)

முதலாம் இராஜேந்திரன் தனது எல்லையை வடக்கிலும் விரிவுபடுத்தினான். ஆங்காங்கே இருந்த கோயில்களுக்கு தானங்கள் பல அளித்தான். இவனுடைய 19-வது ஆட்சியாண்டில் தணியல் முத்தரையன் என்பவன் திருவீரட்டானமுடைய மகாதேவருக்கு திருநுந்தா விளக்கு எரிப்பதற்காக முப்பது பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளான். இவனுடைய 10-வது ஆட்சியாண்டில் திருநுந்தா விளக்கு எரிப்பதற்காக 90 ஆடும், நிலமும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு திருவனந்தபுரத்தாழ்வார்[1] கோயிலுக்குக் கொடுத்த நிலக்கொடைகளைக் குறிக்கிறது.

## முதலாம் இராஜாதிராஜன் (1018-1054)

முதலாம் இராஜேந்திர சோழனின் மகனான இவனது 31-ஆம் ஆட்சியாண்டில் "அரையன் முடிகொண்டான் ஆன *ராஜாதிராஜக்* காரைக்காடுடையாற்கு இவர் *யநபாஸ்ரூம்* வக்காணிப்பார்க்கு இவர் விட்ட வ்ருத்தியாக வைப்பாராக இவருக்கு விற்றுக் கொடுத்த நிலமாவது" என்று தர்மசாத்திரம் சொல்லித் தரும் ஆசிரியருக்கு நிலங்களைத் தானமாக கொடுத்ததைக் கூறுகின்றது.

## விக்கிரம சோழன் (1118-1136)

விக்கிரம சோழன் முதலாம் குலோத்துங்கனின் மகனாவார். இம்மன்னனது 11-வது ஆட்சியாண்டில் அனுக்கன் காமக்கோடி என்பவன் திருவீரட்டானமுடையார்க்கு சந்தி விளக்கு ஒன்று வைக்க பன்னிரண்டு ஆடுகளைத் தானம் அளித்துள்ளான்.

# தெலுங்குச் சோழர்

"ஆந்திர மாநிலம், கடப்பை மாவட்டம், புல்லம்பட்டி தாலுக்காவிலுள்ள பொத்தப்பி என்ற கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த குறுநில மன்னர்களே பிற்கால தெலுங்குச் சோழர்களாவர். தெலுங்குச் சோழர்களில் முதலாமவன் மதுராந்தக

---

1 திருவனந்தபுரத்தாழ்வார் என்பது விஜயராகவ சுவாமி கோயிலின் மற்றொருபெயராகும்.

பொத்தப்பி சோழன் ஆவான். மதுரைமீது படையெடுத்ததால் இவன் மதுராந்தக பொத்தப்பி சோழன் என்ற அழைக்கப்படுகின்றான்.[1] விக்கிரம சோழன் காலத்திலிருந்து புதிய வம்சாவளி ஒன்று காணப்படுகிறது. இதில் பேடா (Beta) என்பவன் வரலாற்று முக்கியத்துவமானவன். இவனுக்கு எரசித்தி என்று ஒரு மகன் இருந்தான். எரசித்திக்கு நல்ல சித்தி என்ற மன்ம சித்தி, பேடா, தாமுசித்தி என்ற மூன்று மகள்கள் இருந்தனர். நல்ல சித்தரசர் என்பவன் மூன்றாம் குலோத்துங்கனின் சம காலத்தவன். இவன் நெல்லூரை தலைநகராகக் கொண்டு சோழர்களுக்குக்கடங்கிய குறுநில மன்னனாவான். இவனும் இவனுடன் பிற குறுநில மன்னர்களும் திருப்பழனம், காளஹஸ்தி, நண்டலூர் ஆகிய கோயில்களுக்குத் தானங்கள் அளித்துள்ளனர். கி.பி. 1213-ஆம் ஆண்டளவில் தெலுங்குச் சோழர்கள், சோழர்களின் இறைமையை ஏற்றுக்கொண்டனர். இதனால் மூன்றாம் குலோத்துங்கன் தொடர்ந்து பாண்டியப் பகுதி மீது போர் செய்ய முடிந்தது.[2]

## விஜயகண்ட கோபாலன் காலம் (1256-1285)

இவன் வீர கண்ட கோபாலனின் சகோதரன். இவனுடைய நான்காம் ஆட்சியாண்டில் முதுசோர் இறங்கல் மிட்டாற் கொடிகள் எனும் கைக்கோளர்கள் செங்கழுநீர்ப் பிள்ளையாற்கு திருநாமத்துக் காணியாக ஒரு வேலி நிலம் அளித்துள்ளனர். இவனுடைய 17-ஆம் ஆட்சியாண்டில் காலியாயர் மகன் தேர்பொலிய நின்றான் என்பவன் பலிபீடம் ஒன்று செய்வித்தான். சீயப்ப நாயக்கனும், மாதினாயக்கனும் செங்கழுனீாப் பிள்ளையார்க்கு சந்தி விளக்கெரிக்கச் செய்ததை இவனது 26-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

# பாண்டியர்

பிற்கால பாண்டியர் கல்வெட்டுகளும் திருத்தணியில் கிடைத்துள்ளன. அது மாறவர்மன் குலசேகர பாண்டியனுடையது.

---

1. செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தின் மீது படையெடுத்து சென்று வென்றதால் மதுராந்தக பொத்தப்பி சோழன் என்றும் அழைக்கப்படலாம்.
2. Later Chola Temples, S.R. Balasubramaniam, Page - 290.

### மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1314-1346)

இவனுடைய 30-ஆம் ஆட்சியாண்டில் யாதவராயன் என்பவன் செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு உச்சி சந்தி அமுது காட்டவும், திருநாள் எழுந்தருளவும், திருப்பணிக்கும் வல்லயன் பாக்கம் என்ற கிராமத்தைத் தானமாகக் கொடுத்து தனது பெயரால் யாதவராய நென் நரசிங்க தெவன் சந்தியையும் ஏற்படுத்தினான் என்பதை விளக்குகிறது.

## விஜயநகர காலம்

### வீரகம்பண்ண உடையார்

செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு பல தானங்கள் செய்துள்ளான்.

### இரண்டாம் தேவராயர்

இவனுடைய ஆட்சிக்காலத்திற்கு இணையான சகாப்தம் 1359-ஆம் ஆண்டு கல்வெட்டால் திருக்காரப்பிள்ளை மலையாள உடையான் வெளாள் என்பவன் செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு சோபன மண்டபமும், தெற்கு மதிலும், வினாயகருக்குத் திருமண்டபமும் கட்டுவித்து பிரதிஷ்டை செய்தான் என்ற செய்தியை அறிகிறோம். சந்திரகிரி பண்டாரத்திற்கு செல்லுகின்ற சூல வரி தவிர்த்து பிற வரிகளை வசூலித்து தனது பெயரால் சந்தியை ஏற்படுத்தியுள்ளான்.

### கிருஷ்ண தேவராயர் காலம் (1509-1529)

கிருஷ்ணதேவராயரின் சக வருடம் 1436-ஆம் ஆண்டு (கி.பி. 1514) திருத்தணியில் வாழும் செவ்வயன் உய்யக்கொண்டான் என்பவன் செங்கழுனீர்ப் பிள்ளையார் கோயிலின் மண்டபத்தில் விளக்கு எரிப்பதற்காக ஏரியின் கீழுள்ள துண்டு நிலத்தை விலைக்கு வாங்கி தானமாகக் கொடுத்தான். இதே தானத்தையும் மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

### அச்சுததேவராய மகாராயர்

இவனது சக வருடம் 1458 (கி.பி. 1536) ஆட்சியாண்டில் திப்பயன் என்பவன் திருத்தணி இளைய நாயனார் கோயிலுக்கு அர்த்த சாமத்து அமுதுபடிக்காக கொடுத்த அரிசியைக் குறிப்பிடுகிறது.

### சதாசிவராய மகாராயர்

இவரது சக வருடம் 1470-இல் (கி.பி. 1548) சோழ மண்டலத்திலுள்ள மகாமண்டல பிரதிநிதிகளான கிராமராயர், சின்ன திம்ம மகாராயர் இருவரும் திருத்தணி எல்லை சூழ்ந்த விளக்கநெரி குப்பம் என்ற கிராமத்தை வீரராகவப் பெருமாள் கோயிலுக்கு கொடை அளித்துள்ளனர்.

### வெங்கடதேவ மகாராயர்

இம்மன்னனது ஆட்சியாண்டில் குமாரஸ்வாமி என்பவன் ஐயடைப்பதக்கம் ஒன்றினை கடவுளுக்குக் கொடையாக அளித்தான்.

திருத்தணிகை கோயில்களுக்கு அரசர்கள் நேரிடையாக தானங்கள் கொடுத்துள்ளனர். அரசர்களின் பிரதிநிதிகளும், மற்றும் பொதுமக்களும் கோயில்களுக்கு தானங்கள் அளித்துள்ளனர்.

## கோட்டமும் நாடும்

### கரிகாலன் அமைத்த கோட்டம்

கரிகாலன் சோழநாட்டிலிருந்து வேளாளர்களைக் குடியேற்றித் தொண்டை மண்டலத்தை 24 கோட்டங்களாகவும், 79 நாடுகளாகவும் பிரித்தான் என்று கூறுவர்.[1] சதகமும்

"காவிய மாகிய காமீகங் கண்டுங்கங்கா குலத்தோர்
ஓவிய சூத்திர ராக இருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத்திலுங் கரிகால் வளவன் மிக்க
வாவிய மேன்மை கொடுத்தான் தொண்டை மண்டலமே"

என்று பாடும்.

"கோட்டமோ இருபா னான்காம்
கூறுநா டெழுபத் தொன்பான்
றோட்டெழில் ஆயிரத்துத்
தொள்ளாயிர நத்தமாகும்"[2]

---

1. கொங்கு நாடு 24 பிரிவு, ஒப்புமை ஆராயத்தக்கது.
2. தொண்டைமண்டல சதகம், பக்கம் - 332

என்ற பழம் பாடலில் நாடு 79 என்பதும், அவற்றுள் அடங்கிய ஊர்கள் 1900 என்பதும் விளங்குகிறது.

திருத்தணிகையும் பழம்பெரும் பிரிவுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது.

## மண்டலம்

தொண்டை மண்டலம் 'ஜயங்கொண்ட சோழமண்டலம்' என்றே குறிக்கப்படுகிறது.

## நாட்டுப்பிரிவு

இளையூர் நாடு, ஒகவல் நாடு, மென்மலை தணியல் நாடு தாமர் நாடு போன்ற நாடுகள் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன

## கோட்டம்

குன்றவத்தன கோட்டம், தாமற் கோட்டம், மேலூர் கோட்டம் ஆகிய கோட்டங்கள் குறிக்கப்படுகின்றன.

## திருத்தணி சபை

திருத்தணியில் நிலையான சபை ஒன்று இருந்தது என்பதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. "திருத்தணியல் சபை" என்று சபையின் பெயர் குறிப்பிடப்படுகிறது. அபராஜிதவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டில் "திருத்தணி சபை" குறிக்கப்படுகிறது. நம்பியப்பி என்பவன் திருத்தணி நாட்டாரிடம் நிலம் 1000 குழி வாங்கியதற்கு திருத்தணியல் சபை வரிவிலக்கு அளித்துள்ளது. திருவீரட்டான முடையார்க்கு அமுது படைக்கவும், விளக்கெரிக்கவும் கொடுக்கப் பட்ட இந்நிலத்தின் கொடைகளை இவ்வூர் சபையார் கண்காணித்து வந்தனர். மதுரை கொண்ட கோப்பரகேசரியான முதலாம் பராந்தகன் கல்வெட்டில்[1] திருத்தணி நிலமான மஞ்சிக்கமாந பூமி பாப்பான் தோட்டத்தை வெசாலிப்பாடித் தென் கரைகிளையூர் நாட்டுச் சிறுவெனூருடையான் வெளானுக்கு விலைக்கு விற்றதற்கு திருத்தணி சபையார் ஆவணம் எழுதி கையெழுத்திட்டு கொடுத்துள்ளனர். மற்றொரு கல்வெட்டில்[2] "பெருங்காஞ்சி சபை" பற்றிக் குறிப்பிடுகிறது.

---

1. A.R.E. 438/1905
2. A.R.E. 439/1905

இவனுடைய மற்றொரு கல்வெட்டும்[1] திருத்தணி சபை பற்றிக் குறிப்பிடுகிறது. முதலாம் இராஜராஜன் காலத்திற்குப் பின் 'திருத்தணியல் சபை'யைத் தவிர 'ஜநநாத சதுர்வேதி மங்கலத்து சபை'யைப் பற்றியும் குறிப்பு வருகிறது. திருத்தணிக்கு அருகே சதுர்வேதிமங்கல சபை ஒன்று இருந்ததை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம்.

திருத்தணியல் சபை மூலம் நிலம் வாங்கல், விற்றல் நடைபெற்றிருக்கிறது. திருத்தணியல் சபை ஆவணங்களைப் பதிவு செய்தும் வைத்திருந்தது. இச்சபை பிற தானங்களையும் மேற்பார்வை செய்து வந்தது என்பதை அறியலாம். நிலங்களையோ, கிராமங்களையோ கோயில்களுக்குத் தானமாக அளிக்கும்போது திருத்தணி சபை அதற்கு வரிவிலக்கு அளித்திருக்கிறது. நிலவரி, மற்றும் பிற வரிகள் கோயில் நிலங்களில் இருந்து வசூலிக்கமாட்டா போன்ற செய்திகளைக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது.

## கல்வெட்டுகளில் இறைவனின் பெயர்

திருத்தணி கல்வெட்டுகளில் இறைவனது பெயர்கள் குறிக்கப்படுகின்றன. அபராஜிதவர்மன் கல்வெட்டு "திருத்தணியல் திருவீரட்டானத்து தேவர்" என்றும் (435/1905), விக்கிரமசோழதேவர் கல்வெட்டில் "திருவீரட்டானமுடையார்" என்றும் (431/1905), முதலாம் இராஜராஜன் கல்வெட்டில் "திருவீரட்டானமுடைய மஹாதேவர்" என்றும் (432/1905), (434/1905) வீரட்டானமுடையாரின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.

விஜயராகவப் பெருமாள் குறித்து "பெருமாள் வீரராகவத் தெம் பெருமான்" என்று சதாசிவ தேவராயர் கல்வெட்டுக் (443/1905) கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு (445/1905) "திருவாநபுரத்து எழுந்தருளி இருந்து தேவர்" என்று குறிப்பிடுகிறது. மதுரை கொண்ட பரகேசரியின் கல்வெட்டில் "திருவாநந்தபுரத்து ஷெவர்" என்று குறிப்பிடுகிறது (449/1905), "திருவனந்தபுரத்தாழ்வார்" என்றும் (445/1905) குறிப்பு காணப்படுகிறது.

---

1. A.R.E. 441/1905

திருத்தணியிலுள்ள ஆறுமுகசுவாமி கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று (128/1942-43) "திருத்தணி இளைய நயினார் திரு ஒற்ற சாமத்து தேவர்" என்று இறைவனின் பெயரைக் குறிப்பிடுகிறது.

திருத்தணி மலைமேலுள்ள முருகனுக்கும் பல பெயர்கள் இருந்ததைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. "கந்தசாமி" என்றும் (136/1942), "திருவிளங்கோயில்" என்றும் (137, 142/1942-43), "சுப்பிரமணிய தேவர்" என்றும் (439/1905), பராந்தகன் கல்வெட்டில் "திருத்தணியற் திருமலை மேல் எழுந்தருளி நிற்கும் சுப்ரமண்யர்" என்றும் (439/1905) குறிப்பிடுகின்றன.

இவ்வாறு வீரட்டானமுடையாருக்கும், சுப்ரமண்யர்க்கும், விஜயராகவ சுவாமிக்கும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்ட பெயர்கள் பற்றி அறிந்தோம்.

## தானங்கள்

கோயில் என்றதும் நமது நினைவிற்கு வருபவை தீபம், திருவிளக்குகள், பூசை, அலங்காரம் முதலியவையாகும். பெரும்பாலான தமிழகக் கல்வெட்டுகள் பூசைக்கான செலவிற்காகத் தக்க வருவாய் உடைய நிலங்களும், தீபமேற்ற நெய்க்காக வேண்டி கால்நடைகளும், இறைவனை அழகுபடுத்துவதற்காக அணிகலன் களும், திருப்பரிகலன்களும் கொடுக்கப்பட்டதையே தெரிவிக்கின்றன. திருத்தணிக் கல்வெட்டுகளிலும் இத்தகைய கொடைகளைப் பற்றி அறியமுடிகிறது.

## திருவிளக்குகள்

கோயில்களில் விளக்கேற்றுவது என்பது ஒரு புனிதமான பணியாகும். இச்சிறப்பு மிக்க விளக்குகள் எரிக்க ஆடு, மாடு போன்றவைகள் தானமாக அளிக்கப்பட்டன. ". . . எம்மூர்த் திருவீரட்டான முடைய மஹாதெவருக்கு பொன் பன்னிரு கழஞ்சு கொண்டு ஒரு நுந்தா விளக்கு எரிக்கக் கொடுத்த கொடையைக் குறிக்கிறது. (432/1905).

விசையகண்ட கோபால தேவருடைய ஆட்சியின்போது செங்கழுனீர்ப் பிள்ளையார்க்கு சந்தி விளக்கு ஒன்றும் (138/1942-43), 500 குழி நிலத்தை செங்கழுனீர்ப் பிள்ளையாற்கு சந்தி விளக்கெரிக்கவும் கொடுக்கப்பட்டுள்ளது. (139/1942-43),

தணியல் முத்திரையன் என்பவன் திருவீரட்டான மகாதேவருக்கு திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு முப்பது பசுக்களை தானமாகக் கொடுத்துள்ளான் (434/1905), அணுக்கன் காமகோடி என்பவன் வீரட்டானமுடையாருக்கு சந்தி விளக்கு எரிக்க 12 ஆடுகளைத் தானமாக வழங்கியுள்ளான்.(431/1905)

நுந்தா விளக்கு வைத்து அது சந்திராதித்தவர் (சூரியன் சந்திரன் இருக்கும்) காலத்துக்கும் எரியவேண்டும் என்பதற்காக ஆடுகள், மாடுகள், நிலங்கள், எருமைகள் போன்றவற்றை தானங்களாக அளிப்பது பழங்காலத்தில் புனிதமாகக் கருதப்பட்டது.

## ஆடு, மாடு

விக்கிரம சோழன் காலத்தில் அணுக்கன் காமக்கோடி என்பவன் 12 ஆடுகளைச் சந்தி விளக்கெரிக்கக் கொடையாக அளித்துள்ளான். தணியல் முத்தரையன் என்பவன் 30 பசுக்களை திருநுந்தா விளக்கெரிக்கக் கொடுத்துள்ளான். இப்பசுக்களின் மூலம் தினமும் ஒரு உழக்கு எண்ணை நெய் சந்திராதித்தவரையும் அளித்து வரவேண்டும் என்று நிபந்தனையுடன் வழங்கியுள்ளான்.

இவ்விதம் கொடுக்கப்பட்ட ஆடுகளாயினும் மாடுகளாயினும் கோயிலிலேயே பராமரிப்பது என்பது இயலாத ஒன்று. இவைகள் இடையர்களிடம் கொடுக்கப்படும். அவர்கள் நாள்தோறும் உழக்கு நெய் கோயிலுக்குக் கொடுத்து வருவார்கள். விளக்கு என்றென்றும் எரிய வேண்டுமாதலால் ஆடு பெற்ற இடையன் இறந்து போனாலும், அவனது சந்ததியினர் அதைத் தொடர்ந்து செய்யக் கடமைப் பட்டவர்கள் ஆவர். ஆடுகள் இறந்தோ, மூப்படைந்தோ போகலாம். அதே சமயத்தில் அவை விருத்தியும் அடையலாம். ஆனால் கொடை கொடுத்தவருக்கு அது பொருட்டல்ல. அவர்கள் கொடுத்த ஆடுகளின் எண்ணிக்கையில் இருந்து கிடைக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நெய் என்றென்றும் கோயிலுக்குக் கொடுக்கப்படவேண்டும். எனவே தான் ஆடு, மாடுகளைக் குறிப்பிடும்போது "சாவா மூவா பேராடு" என்று குறிக்கப்படுகின்றனர். சில கல்வெட்டுகள் ஆடு, மாடுகளுக்குப் பதிலாக பொன் கொடுக்கப்பட்டதைக் குறிக்கின்றன.

## கிராமங்கள்

கோயில்களுக்கு கிராமங்களையேத் தானமாகத் தருவது என்பது பழங்கால மரபு. தானமாக தரப்பட்ட கிராமங்களின் வருவாயைக் கொண்டு கோயில் ஸ்ரீகார்யம் செய்யவும், பூஜைகள் செய்யவும் வழிவகை செய்யப்பட்டன. விஜயநகர அரசனான சதாசிவராயரின் கல்வெட்டு ஒன்று[1] இதனைக் குறிப்பிடுகிறது. ". . செயங்கொண்ட சோழ மண்டலத்தில் ஸ்ரீமன் மகாமண்டலேசுர ராம ராசு சின்ன திம்மய தெவ மகாராசர் நம்மிட சீர்மையான சந்திரகிரி ராச்சியத்தில் ணாராயணபுர பற்றில் குன்ற வத்தன கோட்டத்து தணிகை னாட்டில் திருத்தணி எல்லை சூழ்ந்த கிராமம் விளக்கு நெரி குப்பம் திருத்தணியல் பெருமாள் வீரராகவத்தெம் பெருமானுக்கு தன்ம சாதனம் பண்ணிக் குடுத்தபடி" என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு, "செயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்ற வத்தனக் கோட்டத்து திருத்தணி செங்கழுனீர் பிள்ளையார்க்கு பல்லக்கு செர்வைக்கு அ(ம்)பையில் விடப்பட்ட நாயகர் குமாரர் நாகப்ப நாயகர் தன்மமாக நம்மிட நாயக்கத்தனச் சீர்மையான மயிலைக் குப்பம் உதக பூறுவ தன்ம சாதனம் பண்ணிக் குடுத்தோம்" என்றும் குறிப்பிடுகிறது. பாண்டியன் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டு ஒன்று[2] 'வல்லயன் பாக்கம்' என்ற கிராமத்தைத் தானமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது.

## திருப்பணிகள்

மன்னர்களும், அதிகாரிகளும் கோயில்கள் கட்டி, திருப்பணிகளும் செய்துள்ளனர். விசயநகரர் காலத்தில் இப்பகுதியில் சிற்றரசராக விளங்கிய "கரிகால் சோழனின் நான்காம் தலைமுறையினரான நாராயணராயர் என்பவன் வீரராகவ சுவாமிக் கோயிலைக் கட்டினான்" என்று கல்வெட்டு (தெலுங்கில்) குறிப்பிடுகிறது.[3] (447/1905). மற்றொன்றில் (130/1942-43) திருத்தணியில் பிள்ளையார் திருவிளங் கோயிலில் ஸோபான மண்டபமும், தெற்கில் திருமதிலும், வினாயகர் திருமண்டபமும் அமைத்த திருக்காரப் பிள்ளை மலையாள உடை ஆன் வேளாண் திருப்பணியைக் குறிக்கிறது.

---

1. A.R.E. 443/1905
2. A.R.E. 132/1942-43.
3. See Mr. Sewells Antiquities, Vol. I , P. 1586.
   See also Ep. Rep. 1906, Page - 86. Para 61.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் காணப்படும் தெலுங்குச்சோழன் விஜயகண்ட கோபாலன் கல்வெட்டொன்றில் காலியாயர் மகன் தேர்பொலிய நின்றார் என்பவன் செய்வித்த பலிபீடம் பற்றிக் குறிப்பிடுகின்றது (141/1942-43).

## அணிகலன்கள்

திருத்தணிக் கல்வெட்டுகளில் அணிகலன்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுகள் மிகக்குறைவு. ஒரேயொரு கல்வெட்டு மட்டும் அணிகலன் பற்றிய செய்தியைத் தருகிறது. ". . .மயிட்ட சடயன் வேலாயுதன் புத்திரன் குமாரசுவாமி உபையம் ஆக கந்தசாமி யார்க்கு சாத்தின தாளிப் பதக்கம்" என்று அணிகலன் பற்றிய செய்தி நமக்குக் கிடைக்கிறது (136/1942-43).

## நிலங்கள்

நிலங்களைத் தானமாக கோயிலுக்கு வழங்குவது பண்டைய மரபாகும். திருத்தணியிலுள்ள கல்வெட்டுகளும் நிலங்கள் தானம் அளித்ததைக் குறிப்பிடுகின்றன.

## நிலக்கொடைகள்

அபராஜிதவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டில் திருத்தணி குடிமக்களிடம் 1000 குழி நிலம் வாங்கி அதனை திருவீரட்டானமுடையார்க்கு அமுது படைக்கவும், இரண்டு சந்தி விளக்கு எரிப்பதற்கும் தானமாகக் கொடுத்தான் (435/1905). முதலாம் இராசராசன் கல்வெட்டில் (430/1905) "கூஷ்ணபுரத்து எழுந்தருளி நின்ற எம்பெருமானுக்கு தமனத நாட்டுத் தன்னடியார் திருநாளில் ஸ்ரீவெங்கடயாத்ரை போவாற்கும், வருவாற்கும் ஆஹாரம் இடுவதற்கு ஸஹெயொம் விற்று இறை இழிச்சிக் குடுத்த நிலமாவது" என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக "ஸ்ரீவேங்கட யாத்திரை" என்னும் திருப்பதி செல்லும் யாத்திரிகர்களுக்கு போகும் பொழுதும் வரும்பொழுதும் அவர்களுக்கு உணவளிக்க வேண்டி நிலம் தானமளித்துள்ளச் செய்தியை அறியமுடிகிறது. இவ்வுணவு அளிக்கும் வழக்கம் 10-ஆம் நூற்றாண்டில் இருந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதே செய்தியினை(429/1905) மற்றொரு கல்வெட்டும் குறிப்பிடுகின்றது. இராசாதிராசன் காலத்திலும் நிலங்கள் தானமாக தரப்பட்டன. "அரையன் முடிகொண்டான் ஆன

*ராஜாயிராஜக்* காரைக்காடுடையாற்கு இவர் *யநுபாஷூம்* வக்காணிப்பார்க்கு இவர் விட்ட வ்ருத்தியாக வைப்பாராக இவருக்கு விற்றுக் கொடுத்த நிலமாவது" என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றன (444/1905).

## பூசைகள், செலவுகள்

கோயில்கள் என்றாலே பூசைகள் உண்டு. பூசைகளுக்கான அமுதுகள் பலவகைப்படும். அமுதுகள் மற்றும் தேவைப்படும் பொருட்கள் பற்றி (445/1905) கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. திருமுளையட்ட வேண்டும் பயற்றுக்குங் கடுகுக்கும் உள்ளிட்டனவற்றுக்கு நெல் - 2 நாழியும், பாலிகைக் கீழடிக்கு நெல் - 4 நாழியும், திருமுளையட்டும் நாள் திருவமுதுக்கு அரிசி - 4 நாழிக்கு நெல்லுக்கு குறுணி இரு நாழியும், கறியமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுதுக்கு நெல் - 4 நாழி, திருமுளைப்பாலிகை எட்டும் கலசம் 108-ம், திருவமுது பானை உட்பட வேண்டும் சகலங்களுக்கு நெல் - 2 தூணி, வரிய நூல் இருபலத்துக்கு நெல் - 1 பதக்கு, ஜலபவித்தரம் புடவைக்க நெல் - தூணிப் பதக்கு, பால் - 4 நாழி, தயிரமுதுக்கு நெல் - குறுணி, பெருந்திருவமுதுக்கு குத்தலரிசி - 16 நாழிக்கு நெல் - முக்குறுணி, நெய்யமுது - 1 ஆழாக்கு என்ற இக்குறிப்புகளின் வாயிலாக பூசைகளுக்கு அளிக்கப்பட்ட திருவமுது பற்றியும் பொருள்களின் அளவு பற்றியும் தெரியவருகிறது.

## விழாக்கள்

கோயில்களில் ஆண்டு முழுவதும் சிறப்பான நாட்களில் திருவிழாக்கள் நடைபெறும். திருத்தணியில் பங்குனி உத்திர திருவிழா இன்றும் சிறப்பாக நடந்து வருகிறது. இத்திருவிழா 13-ஆம் நூற்றாண்டில் இருந்தே நடந்து வருகிறது என்பதனை மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 30-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருப்பங்குனித் திருநாள் எழுந்தருளுவதற்காக வல்லயன்பாக்கம் என்ற ஊரை சர்வ மான்யமாகக் கொடுத்த கல்வெட்டுச் சொற்றொடர் மூலம் அறியமுடிகிறது.

# அளவைகள்

## நில அளவை

குழி, சதுரம், மா, அரை, காணி, முந்திரி, மாகாணி என்ற நில அளவைகள் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

'உலகளந்தான் பாதக் கோல்' எனும் நிலத்தினை அளக்கும் அளவுகோல் பற்றிய செய்தியும் கிடைக்கிறது.

## பொன் அளவை

'வராகன்' அளவு மட்டும் இவ்வூர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

## நந்தவனம்

முதலாம் பராந்தகனின் 34-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கணப்பெருமக்கன் என்பவர்கள் 300 குழி நிலம் கொடுத்து நந்தவனம் ஏற்படுத்தியுள்ளனர். (449/1905).

# ஆறுகளும், வாய்க்காலும்

| ஆறுகள் | ஏரிகள் | வாய்க்கால்கள் |
|---|---|---|
| கண்ணாறு | அகுவூர் பெரிய ஏரி, | கூரை மடை |
| தாமணியாறு | அகுவூர் கீழை ஏரி, | ராஜராஜ வாய்க்கால் |
| | வேங்கை போனந் | ராஜராஜ பெரிய வாய்க்கால் |
| | திருப்போகிசன் | புறங்கரைக்காலு |
| | மண்குட்டை | சனனாத சதுர்வேதிமங்கல வாய்க்கால் |
| | | ஆற்றுக்கால் |
| | | ராமதேவர் வாய்க்கால் |
| | | குப்பையார் வாய்க்கால் |

# சிறப்புச் செய்திகள்

## நில விலையாவணம்

நிலம் வாங்கியவுடன் கிரையம் செய்து கொள்வது மரபு. இம்மரபு பழங்காலம் தொட்டே இருந்து வருகிறது. இதனை அபராஜிதவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இதில் நம்பியப்பி என்பவன் திருத்தணி குடிமக்களிடம் வாங்கிய நிலத்திற்கு திருத்தணி சபையார் இறை இழிச்சி கோயிலுக்கு தானமாகக் கொடுத்தனர் (435/ 1905). முதலாம் ராஜராஜன் கல்வெட்டில் நில விலையாவணம் பற்றிய செய்தி காணப்படுகிறது. "ஜயங்கொண்ட சோழமண்டலத்து மென்மலைத் தணியல் நாட்டு ஜநநாதச் சதுர்வேதி மங்கலத்து சபையோம் "ஹூமி நில விலையாவணம்" என்று நில விலையாவணம் பற்றி குறிப்பிடுகின்றது.

இதேபோன்று இராஜாதிராஜன் கல்வெட்டு "ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றவத்தன கொட்டத்து மென்மலை தணியல் நாட்டு ஜநநாதச் சதுர்வேதி மங்கலத்து பிடாகை திருத்தணியல் ஸஹையொம் நில விலையாவணக் கையெழுத்து" என்றும் குறிப்பிடுகிறது.

நிலம் வாங்கல், விற்றல், நிலங்களைப் பதிவு செய்தல் அனைத்தும் திருத்தணி சபை மூலமே நடைபெற்று இருக்கிறது. இச்சபை தற்காலத்து 'பதிவு அலுவலகம்' போன்று செயல்பட்டிருக்கிறது.

## ஸ்ரீபண்டாரத்தார்

ஸ்ரீபண்டாரம் என்பது கருவூல அலுவலகமாகும். தானம் அளித்தவர்கள் அத்தானம் சந்திராதித்தவரையும் நடைபெறவேண்டி ஸ்ரீபண்டாரத்தாரிடம் ஒப்படைத்து பண்டாரத்தினரை மேற்பார்வை செய்ய கோரியுள்ளனர்.

"யிந்த தன்மம் சந்திராதித்தவரையிலும் ஸ்ரீபண்டாரத்தாரும், தாநத்தாரும் நடத்தக் கடவொமாகவும்" என்று கல்வெட்டு (129/ 1942-43) குறிப்பிடுகிறது.

❖❖❖

# செப்பேட்டுச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணிக்கு அருகிலுள்ள வேலஞ்சேரி என்னும் ஊரில் செப்புத் திருமேனி பூமிக்குள்ளிருந்து தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆய்வு செய்ய சென்றபொழுது அவ்வூரில் இரு செப்புப்பட்டயங்கள் இருப்பது தெரிய வந்தது. இச்செப்புப் பட்டயங்களே "திருத்தணி - வேலஞ்சேரி செப்புப்பட்டயங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

## திருத்தணி-வேலஞ்சேரி செப்பேடுகள் சுருக்கம்

திருத்தணி - வேலஞ்சேரி செப்புப்பட்டயங்கள் இரு அரச பரம்பரையினர்களால் வெளியிட்டவை. ஒரு செப்புப்பட்டயம் பல்லவ மன்னன் அபராஜிதவர்மன் காலத்தியது. மற்றொன்று சோழ மன்னன் முதலாம் பராந்தகன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

முதல் செப்புப் பட்டயம் அபராஜிதனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பட்டயம் அரசனின் நேரடி ஆணையைத் தாங்கி வருபவை என்பதை 'கோனோலை' என்றே அச்செப்புப்பட்டயம் தெரிவிக்கிறது. அபராஜித மன்னன் திருத்தணியில் திருமலையில் நின்றருளின சுப்ரமண்யர்க்கு ஒவ்வொரு ஆண்டும் 1000 காடி நெல் மேலிருஞ்செறு சபையார் அளிப்பதற்காகச் சில காணிகளைத் தேவதானப் பிரமதேயமாக அளித்ததை இப்பட்டயம் தெரிவிக்கிறது.

இச்செப்புப் பட்டயத்தின் சமஸ்கிருதப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் கம்பவர்மன் நிருபதுங்கனை வென்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு கம்பவர்மனுக்கு விஜயா என்ற அரசி மூலம் பிறந்த முதல் மகன் அபராஜிதன் என்பதும் அறியப்படுகிறது. இச்செய்தி இதுவரை பல்லவர் வரலாற்றில் நிலவி வந்த குழப்பத்தைப் போக்குவதாக உள்ளது.

இதுவரை கம்பவர்மன், நிருபதுங்கன், அபராஜிதன் ஆகியோரின் உறவுமுறை புரியாத புதிராக இருந்துவந்தது. இச்செப்புப் பட்டயத்தின் மூலம் கம்பவர்மனும், நிருபதுங்கனும் மூன்றாம் நந்திவர்மனின் குமாரர்கள் என்றும், அபராஜிதன் கம்பவர்மனின்

மைந்தன் என்றும் திடமாகப் புரிகிறது. எனவே அந்த வகையில் இச்செப்புப் பட்டயம் பல்லவர் வரலாற்றுக்கு மிக மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

சோழமன்னன் முதலாம் பராந்தகன் காலத்தியச் செப்புப்பட்டயம், அவனது பராந்தகனின் 25-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டதாகும். இதில் சில நிலங்களைத் தேவதானப் பிரமதேயமாக ஆக்கி மேலிருஞ்செற்று ஸபையார் வசம் ஒப்படைத்து ஆண்டு ஒன்றுக்கு 3000 காடி நெல் திருத்தணியில் திருமலை நின்றருளின சுப்ரமண்ய சுவாமிக்கு அளக்க மன்னன் ஆணையிட்டது பற்றி குறிப்பிடுகிறது.

இச்செப்புப்பட்டயத்தின் சமஸ்கிருதப் பகுதி சோழ மன்னர்களின் பட்டியலைத் தருகிறது. அதில் கோச்செங்கணான் ஒருவன் குறிக்கப்படுகிறான். அவன் மகன் ஒற்றியூரான் என்றும், அவன் மகன் சிரந்த போர் வீரன் என்றும், அவன் மகன் ஆதித்யன் என்றும் கூறுகிறது. இதிலிருந்து ஆதித்யன் தந்தையான விஜயாலயனுக்கு ஒற்றியூரான் தகப்பனாக விளங்கியிருக்கிறான் என்பதும், ஒற்றியூரானின் தந்தையான கோச்செங்கணான் என்பவன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்திருக்கிறான் என்பதும் தெரியவருகிறது.

இலக்கியத்தில் கோச்செங்கணான் என்பவன் பற்றிக் குறிப்பு காணப்படுகிறது. அவன் பெருஞ்சேரல் இரும்பொறையோடு பொருது வெற்றி பெற்றான் என்று அறிகிறோம். அதே கோச்செங்கணான்தான் இவனா? அல்லது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வேறொரு கோச்செங்கணான் சோழ வமிசத்தில் இருந்திருக்கின்றானா என்பது ஆய்வுக்குரியதாகும்.

மேற்காணும் பல புதிய செய்திகளைத் தெரிவிப்பதால் இவ்விரு செப்புப் பட்டயங்களும் பல்லவர், சோழர் வரலாற்றை ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கு பெரும் கருவூலமாக விளங்குகின்றன எனலாம்.

# அபராஜிதவர்மனின் செப்புப்பட்டயம்

## அமைப்பு

அபராஜிதவர்மனின் செப்புப் பட்டயம் ஐந்து பட்டயங்களை உடையது. ஐந்து செப்புப் பட்டயங்களையும் ஒரு வளையம் இணைக்கிறது. இச்செப்புப் பட்டயம் எவ்வித சிதைவும் இன்றி முழுமையாகக் கிடைத்துள்ளது. இச்செப்புப் பட்டயங்களின் நீளம் 27 செ.மீ. அகலம் 10 செ.மீ. வளையம் 10 செ.மீ விட்டமுடையது. அரச முத்திரை 9.5 செ.மீ விட்டமுடையது. இப்பட்டயங்களில் எண்கள் குறிக்கப்படவில்லை. செப்பேட்டின் முதல் பக்கமும் கடைசி பக்கமும் வாசகங்களின்றி சாதாரணமாக உள்ளது. இச்செப்பேட்டு வாசகங்கள் பிழைகளின்றி வெட்டப்பட்டுள்ளன.

## முத்திரை

முத்திரையில் அமர்ந்த நிலையில் எருது சின்னம் காணப்படுகிறது. இதன் இருபுறமும் குத்துவிளக்கு காணப்படுகிறது. இவற்றின் மேல் குடைகள் உள்ளன. இம்முத்திரையின் விளிம்பு பகுதியில் கிரந்த எழுத்துகள் காணப்படுகின்றன.

> "Svasti Sri
> .....ntrasa siras sreni Sri Sikha Sayisasanam
> rajnah Pallava vamsendoh Aparajitavarmanah
> Aparajitavarmanah"

## மொழி

கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டு பல்லவ செப்புப்பட்டயங்கள் யாவும் இருமொழியில் எழுதப்பட்டவை. செப்பேட்டின் முதல்பகுதி சமஸ்கிருத மொழியில் கிரந்த எழுத்தாலும், இரண்டாம் பகுதி தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களாலும் எழுதப்பட்டுள்ளன. வடமொழிப் பகுதி செய்யுள், உரைநடை வடிவில் எழுதப்பட்டுள்ளது. செய்யுள் பகுதியில் கம்பவர்மனின் வெற்றிகள், அபராஜிதவர்மனின் தாய் விஜயாவின் புகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகிறது. இதன் செய்யுள் நடை இசையுடன் பாடத்தக்கவை. இதன் வாசகங்களை எழுதிய புலவர் மகாதேவர் ஆவார். இவர் தன்னுடைய தந்தை ஸ்ரீகுமாரன் என்ற புலவரின் புலமைத் திறமைகளைப் பெற்றிருந்தார். தமிழ்ப்பகுதியும் பிழைகளின்றி எழுதப்பட்டுள்ளது.

## தானங்கள்

அபராஜிதவர்மன் தனது 9-ஆம் ஆட்சியாண்டில் தானங்களை அளித்தான். இதனைச் செப்பேடு "யாண்டு ௯ நாள் உஅக · ௯ என்று குறிப்பிடுகிறது. செப்பேட்டின் ஆரம்பத்தில் பல்லவ வம்சாவள முறையும் கம்பவர்மனின் கொடைகளும் குறிப்பிடப்படுகின்றன கம்பவர்மன் பல்லவ மன்னன் நிருபதுங்கனிடமிருந்த ஆட்சியைக் கைப்பிடித்தான். இவன் கங்க வம்சத்து நற்குணங்கள் பெற்ற விஜயாவை மணந்தான். அபராஜிதன் இவர்களுக்கு பிறந்த மகன் அபராஜிதன் பாணர்களின் யானைகளை அழித்து, காராணை என்ற பாண்டிய நகரைக் கைப்பற்றி சிற்றாரூர் என்ற இடத்தில் சோழர்களுடன் போர் செய்தான் என்றும் குறிப்பிடுகிறது. அபராஜிதனும் வாமநய்யன் விண்ணப்பத்திற்கிணங்கி, திருத்தணியல் நாட்டு பூதூர் கிராமத்தை மேலிருஞ்செற்று சபையார்க்கு தேவதானப் பிரம்மதேயமாகக் கொடுத்தான். கிராமத்தைப் பெற்ற சபையார் திருத்தணி திருமலை மேல் நின்றருளின சுப்ரமண்யர்க்கு பஞ்சவாரமட்டி உண்பதற்காக ஆண்டுக்கு 1000 காடி நெல்லைத் தானமாகக் கொடுத்தனர் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வரிவிலக்கு பெற்ற நிலங்கள், கிராமங்களின் பெயர்களும் காணப்படுகின்றன.

## அபராஜிதனின் பக்திப்பெருக்கு

அபராஜிதவர்மன் திருத்தணி சுப்ரமண்ய சுவாமி மீதிருந்த பக்தியினால் கிராமங்களைத் தானமாக அளித்தான். திருத்தணி கிராமம் அக்ரஹாரம் என்றும், மேலிருஞ்செறு மஹா அக்ரஹாரம் என்றும் அழைக்கப்பட்டது. பூதூர் கிராமத்தைப் பெற்ற மேலிருஞ்சேற்று சபையார் அதன் வருவாயில் 1000 காடி நெல்லை சுப்ரமண்யர்க்கு பஞ்சவாரமட்டி உண்பதற்காக அளிக்கவேண்டும். சமஸ்கிருதப் பகுதியில் கடவுளின் பெயர் மகேஸ்வரன் மகன் ஷண்முகன் "Maheswara Sūnave Shanmukhāya" என்றும் தமிழ்ப்பகுதியில் திருத்தணி திருமலை மேல் நின்றருளிய சுப்ரமண்யர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

திருத்தணி முருகன் மீது அபராஜிதவர்மனுக்கு தனிப்பற்று இருந்தது. திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலின் கருவறையின் மேற்குப்புறம் பல்லவ அமைதியுடன் விளங்கும் பாலசுப்ரமணியர் சிற்பம் இவனுடைய காலத்தவை. பதினைந்தாம் நூற்றாண்டில் விஜயநகர காலத்தில் தற்போது உள்ள சிற்பம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## அரசியல் வரலாறு

இச்செப்பேடு பல அரசியல் சிக்கல்களுக்கு விடை காண்கிறது. பிற்கால பல்லவர்களான கம்பவர்மன், நிருபதுங்கன், அபராஜிதன் ஆகியோரின் உறவு முறைகளைத் தெளிவாக்குகிறது.

கம்பவர்மனும், நிருபதுங்கனும் சகோதரர்கள் என்பதை ஆரம்பத்தில் வரலாற்றறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். பாகூர், சிற்றூர் செப்பேடுகள் மூன்றாம் நந்திவர்மனுக்கும், இராட்டிரகூட இளவரசி சங்காவுக்கும் பிறந்தவனே நிருபதுங்கன் என்று குறிப்பிடுகிறது. சோழபுரம் சான்றுகளின் மூலம் கம்பவர்மனின் தந்தை நந்தி என்பது புலனாகிறது. ஆனால் அபராஜிதவர்மனின் உறவுமுறை விளங்காத புதிராகவே இருந்தது. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியும், டி.வி. மகாலிங்கமும் நந்திவர்மனின் மற்றொரு மகன் அபராஜிதன் என்றும், நிருபதுங்கனின் தம்பி என்றும் முடிவு செய்தனர். இவ்வித பல்வேறு வரலாற்று சந்தேகங்களை இச்செப்பேடு தீர்த்து வைத்தது. கங்க இளவரசி விஜயாவுக்கும், கம்பவர்மனுக்கும் பிறந்தவனே அபராஜிதன் என்ற தெளிவான உறவுமுறையினை இது குறிப்பிடுகிறது.

"Umēva Rudrasya RamēvaVishnor
visuddha Gangānvaya Janma mānya|
Gunōnurūpa Vijayābhidhāna Patnis
Sapatni Vijaya Sriyaibhūt-||
Bahumukha subhagas tatōta tasyām
Prathama mabhūt
Aparājitah Sa Saktih"

கம்பவர்மனும், அபராஜிதவர்மனும் கங்க மன்னர்களின் உதவியைப் பெற்றார்கள். பல்லவ ஆட்சியை கம்பவர்மன், நிருபதுங்கனிடமிருந்து கைப்பற்றினான் என்ற செய்திகளையும் குறிப்பிடுகிறது.

"Yo Vijiya Nirupatungam Āhave Pallzvam
Prabala Vallabhānvitam
Srīcakara vasudam Saha Sriya Sagarormi
Valayaika mēkhalām"

வரலாற்றாசிரியர்கள்[1] கீழ்கண்டவாறு பல்லவ மன்னர்களின் ஆட்சியாண்டைக் குறிப்பிடுகின்றனர்.

| | KAN | TVM | SRB | TNS |
|---|---|---|---|---|
| Nirupatunga | 859- 99 | 869-910 | 855 | — |
| Aparajita | 885-903 | 895-913 | 878 | — |
| Kampavarman | 870-912 | — | 878 | — |
| Aditya | 872 | 871 | 871 | 870 |

ஆதித்தன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியதை திருக்கழுக்குன்றம், தக்கோலம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவனுடைய தொண்டை மண்டலக் கல்வெட்டுகளில் முதன்மையானவை 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இதனை சான்றாக ஏற்றுக்கொண்டால் அபராஜிதன் கி.பி. 890-ல் இறந்திருக்க வேண்டும் (ஆதித்தனின் 20-ஆம் ஆட்சியாண்டில்). அபராஜிதனின் 18-ஆம் ஆட்சியாண்டு வரை கல்வெட்டுகள் கிடைக்கின்றன.[2] அபராஜிதவர்மன் கி.பி. 870-இல் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும். இவனுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன் கம்பவர்மன் (868) ஆட்சியேறி இருக்கவேண்டும். கம்பவர்மனுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் நிருபதுங்கன் பதவியேறி இருக்கவேண்டும். எனவே நிருபதுங்கனின் ஆட்சியாண்டு தொடக்கம் கி.பி. 865 எனலாம்.

## குறுநில மன்னர்கள்

பிற்காலப் பல்லவர்களின் காலத்தில் இருந்த குறுநில மன்னர்களைப் பற்றி குறிப்பிடுதல் அவசியமாகும். இக்காலத்தில் பாணர்கள், கங்கர்கள் முத்தரையர், இருக்குவேளிர், விழுப்பரையர்,

1. KAN, stands for K.A. Nilakanta Sastri, T.V.M. for T.V. Mahalingam SRB for S.R. Balasubramaniam and T.N.S. for T.N. Subramaniam.

2. A.R.E. 435/1905

தமிழ் பேரரையர், பல்லவரையர் போன்ற குறுநில மன்னர்கள் ஆட்சிசெய்தனர்.

அபராஜித பல்லவனின் செப்பேடு கண்டுபிடிக்கப்பட்டதின் மூலம் பல்லவ வரலாற்றின் இறுதியில் நிலவிவந்த வரலாற்றுச் சிக்கல்களுக்கு முடிவு கட்டடப்பட்டது. இந்த வகையில் இது முக்கியத்துவம் பெற்ற செப்பேடாகும்.

## முதலாம் பராந்தகச் சோழனின் வேலஞ்சேரிச் செப்பேடு

### வடமொழிப்பகுதி[1]

1. நீர் நிறைந்த சிவந்த மேகங்களின் ஒளியில் அழகு ஒளிரும் முராரியின் செந்தாமரைத் திருவடிகள் மாலைகள் நிரம்பிய மலர்கள் தவழும் திருவடிகள் - இலக்குமியின் தாமரை ஒத்த கரத்தினால் எப்பொழுதும் சிவந்து விளங்கம் திருவடிகள் நம்முடைய இன்பத்தையும் வளத்தையும் மிகுவிப்பதாக

2. பொன் வண்ண மேகம் ஒத்து ஒளிவீசும் உருத்திராக்க மணிகள்- இடப்பக்கத்தே பெருத்த அணி செய்யம் நகில்கள் - சடைக்கூந்தலில் தெள்ளிய நீரின் தூய அலைகள் - பிறையொத்த காதணிகள் - கருமை ஒளிரும் கழுத்து - பின்னும் பாம்பு வளையல்கள் - திருநீறு துலங்கும் நெற்றி நமக்கு வளம் நல்குவதாக

3. எல்லா அரசர்களின் முடிகளிலும் தாமரையடி பதித்த சோழேந்திர ஆட்சி - உலகு முழுவதும் அரசாட்சி ஒச்ச வாளால் உறுதியேற்ற பரம்பரை உலகம் முழுவதும் காப்பதாக

4. முராரியின் உந்தியில் எழுந்த தாமரையில் பிரம்மன் தோன்றினான். மெல்லிய பின்னிய கூந்தலினும் மேம்பட்ட ஒளியினால் அவன் சற்றுத் தாழ்ந்தபோது அவனிடத்து மரீசி பிறந்தான்.

---

1. திருத்தணிகைச் சன்னதி முறை, பக்கம் 269 - பதிப்பாசிரியர்- மு. சண்முகம் பிள்ளை.

5. காசிபன் இந்த மரீசியினித்தில் பிறந்தான். காசிபனிடத்துச் சூரியன் (அவிச்சாரிய மார்க்கம்) தோன்றினான். அவன் தன் தூய துணைவர்களோடு உலகை அணி செய்தான்.

6. உலகம் துய்த்துப் பல அரசர்கள் தெய்வத்தன்மை எய்திய பின்னர், அந்தப் புகழ் வாய்ந்த பெருங்குடும்பத்தில் உசிநாதன் என்னும் பெயரிய பெருங்கடவுள் தோன்றினான்.

7. அந்தக் குடும்பத்தின் அணிகலனாகிய அரசன், அக்னி தேவன் கழுகு வடிவத்தில் வந்து அணுகியபோது தன் தசையைத் தந்தான் அதுமட்டுமின்றி புறாவின் துன்பத்தைப் போக்கி காக்கச் சிபியாக பிறந்தான்.

8. அந்தக் குடும்பத்தில் கரிகாலச் சோழேந்திரன் பிறந்தான். அவனுடைய ஆணையாலே 'காவேரியின்' இருமருங்கும் கரை எழுப்பியது. காஞ்சி நகரத்தில் மேகம் தழுவும் மாளிகைகள் நிறைந்தன.

9 ஒரு சிலந்தி சிறிய, மெல்லிய, அழகிய கூட்டினைச் சிவனுக்காகத் தன் வாய் நூலால் கட்டியது. இதனைக் கண்டு மகிழ்ந்த அரனால் இச்சிலந்தி அந்த அரச குடும்பத்தில் கோச்செங்கண்ணானாகப் பிறந்தது.

10. வெற்றித்திறன் செறிந்த ஒற்றியூரான் பிறந்தான். அவன் மகன் பகையரசர்களாகிய காட்டிற்குப் பெருந்தீயாகினான்.

11. இவனுக்கு குபேரனை யொத்த ஆதித்தன் பிறந்தான். இவன் பகையரசிகளின் தாமரை ஒத்த திருமுகங்களுக்கு நிலவொளி போல விளங்கினான்.

12. பாற்கடலிலிருந்து பெருநில எழுதல் போல, இமயத்திலிருந்து கங்கை வெள்ளம் புறப்படுதல் போல, சூரியனிடமிருந்து வெப்பம் எழுதல் போல மேருவிலிருந்த திரிகூடம் வருதல் போல, இவனுக்குப் பராந்தகன் தோன்றினான்.

13. பகையரசர்கள் இவனைத் தம் யமனாகக் கருதினார்கள். அறிஞர்கள் இவனை பிரகஸ்பதி என நினைத்தார்கள். அன்புள்ளோர் சிந்தாமணி எனக் கருதினர். மக்கள் தமது பெற்றோராகப் போற்றினர். நல்லவர்கள் கருவூலமாக நினைத்தார்கள். அழகிகள் மன்மதனாகப் போற்றினர்.

14. அரசன் வீரத்தால் ஈட்டிய தங்கத்தைக் கொண்டு திறன் வாய்ந்த குரங்குக் கூட்டம் பாலம் கட்டிய அழகிய இடமான ஸ்ரீராம தீர்த்தத்திலும், தென்மூலையை ஆட்சிப்பரப்பில் உள்ளடக்கிய கன்னியா தீர்த்தத்திலும், பாம்பணையில் பரமன் பள்ளிகொண்ட கமுகஞ்சோலை சூழ் திருவரங்கத்திலும் துலாபாரம் செய்தான்.
15. கல்வி, செல்வம். புகழ் இவற்றின் இருப்பிடமாகிய பிரம்ம வனவாதிராஜன் அந்த அரச பரம்பரையின் விஞ்ஞானப்தி ஆவர்.
16. வசிட்டி குடும்பத்தில் தோன்றிய கிளிநல்லூர் நன்கு கற்று வல்லவர். அக்குடும்பத்தின் அணிகலன். அந்தப் பரம்பரையின் ஆஞ்ஞாப்தி ஆவர்.

## வேலஞ்சேரி முதலாம் பராந்தகன் செப்பேடு

முதலாம் பராந்தகனின் செப்பேடும், அபராஜிதவர்மனின் செப்பேட்டுடன் இணைந்தே கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரு செப்பேடுகளும் தனித்தனியாக வளையத்தால் இணைக்கப்பட்டு அரச முத்திரையுடன் காணப்படுகிறது. இச்செப்பேட்டின் நீளம் 22 செ.மீ. அகலம் 36.5 செ.மீ. தடிமம் 3.3. மி.மீ. செப்பேட்டின் எல்லா பக்கங்களிலும் எழுத்துக்கள் பிழைகளின்றியும் தெளிவான முறையிலும் எழுதப்பட்டுள்ளன.

## முத்திரை

இச்செப்பேடு 15 செ.மீ. விட்டமுள்ள வளையத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்ட பகுதியில் 7.5. செ.மீ. விட்டமுள்ள அரசமுத்திரை வைக்கப்பட்டுள்ளது. முத்திரையில் சோழ இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு மீன்கள், அமர்ந்த நிலையிலுள்ள புலி இவற்றின் இரு புறமும் இரண்டு குத்துவிளக்கு, இவைகளுக்கு மேல் இரு சாமரங்கள் முத்திரையில் காணப்படுகின்றன. முத்திரையினைச் சுற்றி கிரந்தத்தில் பரகேசரிவர்மனின் செப்பேடு என்று எழுத்துக்கள் காணப்படுகின்றன.

*𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌶𑍍𑌰𑍀 [illegible]*
*𑌚𑍋𑌲 𑌵𑌂𑌶 𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑍇𑌃*
*[illegible]*
*𑌪𑌰𑌕𑍇𑌸𑌰𑌿 𑌵𑌰𑍍𑌮𑌣𑌃*

In English

"Svasti Sri

Srimat Chandra nyntereva Chola vamsa Sikhamaneh

Sasanam Chola bhubartuh Parakesarivarmanah"

## தானங்கள்

செப்பேடுகள் இரு பகுதிகளாக உள்ளன. முதல் பகுதி சமஸ்கிருத மொழியான கிரந்த எழுத்துக்களாலும், இரண்டாம் பகுதி தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேடு பராந்தக சோழனால் கிராமம் தானமாகக் கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. தமிழ் பகுதியில் நிலங்களின் தன்மை நிலத்தின் அளவு குறிக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருதப் பகுதியில் பராந்தக சோழனின் வம்சாவளி குறிப்பிடப்பட்டுள்ளதால் அரசியல் வரலாற்றிற்கு முக்கியத்துவம் பெறுகிறது. அபராஜிதன் செப்பேட்டில் உள்ளது போலன்றி பராந்தகன் செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதி உரைநடை வடிவில் எழுதப்பட்டிருக்கிறது.

பராந்தகனின் 25-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட இச்செப்பேட்டிற்குச் சரியான ஆங்கில ஆண்டு கி.பி. 932 ஆகும். விஷ்ணு, பிரம்மா, மரிச்சி, காஸ்யபா, சூரியா, உஷினாரா போன்றோர் இக்குலத்தில் தோன்றினார்கள். மேலும் இச்செப்பேடுகளில் கரிகாலன், சிபி, கோச்செங்கணான் போன்ற சோழ முன்னோர்களின் செய்திகளும் காணப்படுகின்றன. சிபி சக்கரவர்த்தி பற்றி பிற சோழ செப்பேடுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கரிகாலன்

கரிகாலன் காலத்திய மூன்று நிகழ்ச்சிகள் பற்றி இச்செப்பேடு கூறுகிறது.

1. சோழர்களின் புகழை இமயம் வரை பரப்பினான்.
2. காவேரியாற்றின் இரு கரைகளிலும் அணைகள் கட்டி வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தினான்
3. காஞ்சியில் பல அரண்மனைகள் கட்டினான்.

## கோச்செங்கணான்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பரின் பாடலின் மொழி பெயர்ப்பாகவே சமஸ்கிருதப் பகுதியின் செப்பேட்டுப் பகுதி அமைந்துள்ளது.

சிலந்தியும் ஆணைக்காவில் திருநிழல் பந்தர் செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்கண்ணானும் ஆகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே
- அப்பர்

விஜயாலயனின் தந்தை ஒற்றியூரான் என்பதும் செப்பேட்டின் மூலம் அறிகிறோம்.

## பராந்தகன்

ஆதித்தனின் மகன் முதலாம் பராந்தகனாவான். இச்செப்பேடு பராந்தகனின் 25-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டாலும் இவனுடைய போர்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவரங்கம் கோயில்களுக்கு துலாபாரம் அளித்தான் என்ற புதிய செய்தியைத் தருகிறது. முதலாம் பராந்தகன் சிதம்பரம் கோயிலுக்கு பொன்வேய்ந்தது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

## கொடைகள்

இச்செப்பேடு தாழை வீடு, மயங்காறு, கீழகல் என்ற மூன்று கிராமங்களையும் சாம வேதத்தில் புலமை பெற்ற மேலிருஞ்செறு பிராமணனுக்குக் கொடையாக அளித்துள்ளான். பராந்தகன், பிரமவானவாதிராஜாவின் விண்ணப்பத்தினால் கொடுத்தான் எனக் கூறுகிறது. தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமத்தின் எல்லைகளும், வரிவிலக்குகளும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. திருத்தணிக்கு அருகிலுள்ள பூண்டி, நென்மலி, அருங்குளம், மேலிருஞ்செறு, பதப்பாக்கம், நெடுங்குன்றம், முடிப்பள்ளி, மதுரா, உழஞ்சூர், நல்லாற்றூர் ஆகிய ஊர்கள் இச்செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றன. இவைகள் தற்போதும் இப்பெயரிலேயே வழங்கி வருகின்றன. தானமாக வழங்கப்பட்ட மூன்று கிராமங்களும் மேலிருஞ்செரி கிராமத்துடன் இணைக்கப்பட்டு ஆண்டொன்றினுக்கு 3000 காடி

நெல்லும், ஒன்பது கழஞ்சு பொன்னும் அளிக்கப்பட வேண்டு இவற்றில் 3000 காடி நெல்லும் பஞ்சவாரியமாக ஆண்டுக்கு ஐந் முறை செலுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமமும் 1000 காடி நெ தரவேண்டும். அபராஜிதவர்மனின் செப்பேடும் 1000 காடி நெல்லை பஞ்சவாரியமாக அளித்தது குறிப்பிடத்தக்கது.

## செப்பேட்டில் நாட்டுப்பிரிவு

அபராஜிதவர்மன், முதலாம் பராந்தகன் ஆகிய இருவ செப்பேடுகளிலும் “குன்றவத்தன கோட்டம்”, “மேன்மலைத் தணிய நாடு” என்ற நாட்டுப் பிரிவு காணப்படுகிறது. அதேபோல் இவ்வூ கல்வெட்டுக்களிலும் “குன்றவத்தன கோட்டம்”, “தணியல் நாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## எல்லைகள்

செப்பேடுகளில் காணப்படும் ஊர்களும், எல்லைகளும இன்றும் அப்படியே இருப்பது வியப்பிலாழ்த்துகிறது. அபராஜிதவர்மன செப்பேட்டில் “. . . . . கல்லும், கள்ளியும் நாட்டி அறையோலை செய்து படாகை நின்ற நிலத்தில் கெல்லை கீழ்பாற்கெல்லை மேலிரிஞ்செற்றெல்லையின் மேற்கு தென்பால் எல்லை திருத்தணியல் ஓவியூரிலும் இருகனூரும் மெல்லையினினும் (இ) கிழக்கும் வடபாற்கெல்லை பொன்பதி நாட்டும் மேலிருஞ்செற்றெல்லையினினும் தெற்கும் இவ்விசைந்த பெரு நான்கெல்லை உள்ளும் அகப்பட்ட நீரும் நிலமும் புன்செயும் ஊரிருக்கையும்”- என்று நிலத்தின் எல்லைகளைக் குறிப்பிடுகிறது. பராந்தகன் செப்பேட்டில் “. . அறையோலை செய்து படாகை நடந்த நிலத்துக்கு எல்லை கீழ்பாலெல்லை பூண்டியும் நென்மலியும் அருங்கனமும் இம்மூன்று எல்லைக்கு மேற்குந் தென்பாலெல்லை மேலிருஞ்செற்று எல்லைக்கு வடக்கும் மேல்பாலெல்லை பாற்பாக்கமும் நெடுங்குன்றமும் முடிப்பலியும் மதிரையும் இந்நாலூரெல்லைக்குங் கிழக்கும் வடபாலெல்லை உழையூரும் நல்லாற்றூரும் இவ்விரண்டூர் எல்லைக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லையுள்ளும்” என்று எல்லைகள் குறிப்பிடப்படுகின்றன.

## அளவுகள்

இரு செப்பேடுகளில் "1000 காடி நெல்", என்றும் "3000 காடி நெல்" என்றும் முகத்தல் அளவைக் குறிப்பிடுகிறது.

"பொன் ஒன்பதின் கழஞ்சு" என்று பொன் நிறுத்தல் அளவைக் குறிப்பிடுகிறது.

## செப்பேடுகள் குறிக்கும் கிராமங்கள்

திருத்தணியல், பூதூர், மேலிருஞ்செறு,[1] ஓவியூர், இருகனூர், பொன்பதிநாடு, தாழைவேடு, மயங்காறு, கீழகல், கிளிநல்லூர், பூண்டி, நென்மலி, அருங்கனம், பாற்பாக்கம், நெடுங்குன்றம், முடிப்பலி, மதிரை, உழையூர், நல்லாற்றூர் ஆகிய ஊர்கள் செப்பேடுகளில் காணப்படுகின்றன. இவ்வூர்கள் அனைத்தும் இதே பெயரில் தற்போதும் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார வளம்

இச்செப்பேடுகளின் செய்திகளைக் கொண்டு அக்கால பொருளாதார நிலையை ஓரளவு அறியலாம். ஊர் இருக்கையினைச் சுற்றி நீர் வசதி, நில வசதி இருந்திருக்கிறது. நிலங்களில் புன்செய் பயிர் செய்தனர் எனத் தெரிகிறது. தென்னந்தோட்டம், பாக்குத் தோட்டம் போன்ற தோட்டங்களும் இருந்தன. நீர் வசதிக்காக ஆற்றுக்கால்கள் வெட்டப்பட்டன. ஆடு, மாடுகள் போன்ற கால்நடைச் செல்வங்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. இப்பகுதி விவசாயம் சார்ந்திருந்தப் பகுதி என்பது இச்செப்பேட்டுச் செய்திகள் வாயிலாக தெரியவருகிறது.

## சிறப்புச் செய்திகள்

அபராஜிதவர்மனின் செப்பேடு பிற்கால பல்லவ குலத்தில் நிலவி வந்த வம்சாவளியினுக்கு விடையளித்துள்ளது. இச்செப்பேட்டின் மூலம் திருத்தணி சுப்ரமண்யர் கோயில்

---

1. தற்போது மேலிருஞ்சேறு வேலஞ்சேரி என்று அழைக்கப்படுகிறது. திருத்தணிக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவிலுள்ளது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே கட்டப்பட்டது என்பதை உறுதிபடுத்த முடிகிறது. முதலாம் பராந்தகனின் செப்பேட்டில் பராந்தகனின் தந்தை ஒற்றியூரான் என்பது புதிய செய்தியாகும். இராமேச்வரம், தி நவரங்கம், கன்னியாகுமரி கோயில்களுக்கு இவன் துலாபாரம் அளித்தான் என்ற புதிய செய்தியையும் அளிக்கிறது.

இவ்வாறு தமிழக வரலாற்றினுக்கு முக்கியச் செய்திகளை அளிப்பதால் இச்செப்பேடுகள் முக்கிய இடம் பெறுகின்றன என்பதில் ஐயமில்லை.

❖❖❖

# செப்புத் திருமேனிகள்

தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள செப்புத்திருமேனிகள் உலக மக்களின் கவனத்தைக் கவருகின்றன. இவை எழில் மிகுந்து கலை நிறைந்து காணப்படுவதால் விலை மதிப்பற்ற செல்வங்களாகத் திகழ்கின்றன.

## செப்புத் திருமேனி வரலாறு

செம்பில் சிறந்த உருவங்களைப் படைக்கும் கலை சங்க காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பதற்கு சான்றுகள் உள்ளன. ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் செம்பாலான பல தொல்பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் 'தாய் தெய்வம்' ஒன்றின் உருவம் கிடைத்துள்ளது. அதுதான் இதுகாறும் கிடைத்துள்ள செப்புப்படிமங்களில் மிகவும் தொன்மையானது. அத்துடன் கோழி, நாய் போன்ற செப்பாலான உருவங்களும் கிடைத்துள்ளன. இவை கிறிஸ்துவிற்கு முன்பு 700 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என தொல்லியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பல்லவர் காலத்தில் பல செப்புப் படிமங்கள் கிடைத்துள்ளன. இச்செப்புப் படிமங்களின் அமைதியைக் கொண்டே அவை பல்லவர் காலத்தவை எனத் திட்டவட்டமாகக் கூறும் அளவிற்கு அமைந்திருக்கின்றன. கோயில்களிலே செம்பாலான தெய்வப் படிமங்களை அலங்கரித்து வீதியில் உலாவாக எடுத்துச் செல்வது தேவாரத் திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தணியில் கிடைக்கப்பட்டுள்ள செப்புத்திருமேனிகளில் காலத்தினால் முற்பட்டவை வேலஞ்சேரி என்னும் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புப்படிமம் ஆகும். திருத்தணி திருமலை மேல் நின்றருளியிருக்கும் சுப்ரமண்ய சுவாமி கோயிலில் காணப்படும் செப்புத் திருமேனிகள் விஜயநகர காலத்திற்கு பின்னர் செய்யப்பட்டவையாகும்..

## உமாமகேசுவரர் (ரிஷப வாகனர்)

இத்திருமேனி தற்போது வேலஞ்சேரி கிராமத்திலுள்ள சிறிய கோயிலில் வழிபாட்டில் இருந்து வருகிறது. இக்கிராமத்திலுள்ள பள்ளியின் விளையாட்டு மைதானத்தை சமன் செய்யும் போது இத்திருமேனிகள் கிடைத்தன. சுமார் 3 அடி உயரம் உள்ள இச்செப்புப் படிமம் பத்மபீடத்தின் மீது நின்றுள்ளது. மேலிரு கைகளில் வலது கையில் மழுவும், இடது கையில் மானும், கீழிரு கைகளில் வலது கையில் விருச்சிக முத்திரையுடனும், இடது கை ரிஷபத்தின் மீது கையை வைத்தும் விளங்குகிறது. ஜடாமகுடத்துடன் விளங்கும் இத்திருமேனியின் தலையில் பிறைச் சந்திரனும், பாம்பும் காணப் படுகிறது. கழுத்தணி, கையணி, காலணிகள் அலங்கரிக்கின்றன. உதரபந்தத்தில் ஒரு நூல் பிரிந்து செல்கிறது. கடிபந்தம், வாகுபந்தம் பல்லவர் காலத்தை நினைவூட்டுகிறது. ஜடாமகுடம் தோள்பட்டையின் மீது புரளுகிறது. மகுடத்தின் பின்புறம் பிரபை காணப்படுகிறது.

## பார்வதி

சுமார் 2 அடி உயரமுள்ள பார்வதி திரிபங்க நிலையில் சிவனுக்கருகில் நிற்கிறாள். இரு கரங்கள் மட்டுமே உடைய தேவியின் வலதுகரம் மலர் பிடித்திருக்கும் முத்திரையிலும், இடது கை தொடை வரை நீண்டிருக்கிறது. கழுத்தில் சிறிய ஆபரணங்களும், கை, கால்களில் வளையல்களும் காணப்படுகின்றன. மார்புக் கச்சை காணப்படவில்லை. தலையை கிரீட மகுடம் அலங்கரிக்கின்றது. பின்புறம் பிரபை காணப்படுகிறது.

## ரிஷபம்

சுமார் 1 அடி உயரமுள்ள ரிஷபம் சிவனுக்கு பின்புறம் நிற்கிறது. கொம்புகள் சிறியதாகவும், பிடரி முடி நன்றாக வளர்ந்து வளைந்தும் காணப்படுகிறது. ரிஷபத்தின் கழுத்தில் மணி, மலர்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. ரிஷபத்தின் கால்கள் பீடத்தின் மீது நிற்கிறது. சிவன் தனது முன் இடக்கையினை ரிஷபத்தின் மீது வைத்திருக்கும் நிலை காணப்படுகிறது.

மேற்கூறப்பட்ட மூன்று செப்புத் திருமேனிகளும் ஒரே பீடத்தில் நிற்கிறது. இவைகளைச் சுற்றி வட்ட வடிவ பிரபை

வைக்கப்பட்டுள்ளது. இதன் வட்ட வடிவ பகுதிகளில் ஜ்வாலை காணப்படுகிறது. இதனின் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகும். ஆடைகள் இடைவரைக் காணப்படுகிறது. இத்திருமேனியின் அமைதி, அணிகலன்களைக் கொண்டு இதுமுற்காலச் சோழர் காலம் எனக் கூறலாம்.

## கல்யாண உற்சவர்

சுப்பிரமணிய சுவாமியின் இரண்டாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் கல்யாண உற்சவர் செப்புத் திருமேனி வைக்கப்பட்டுள்ளது. சுமார் 2½ அடி உயரமுள்ள முருகன் தேவியர்களுடன் காட்சியளிக்கிறார். முருகனின் பின்னிரு கைகளில் வலது கை அக்கமாலையும், இடது கையில் கமண்டலமும், முன்னிரு கைகளில் வலது கையில் அபய முத்திரையுடனும் காணப்படுகின்றன. முருகனின் வலப்புறம் வள்ளியின் இடக்கரத்தில் தாமரை மலரும், இடப்புறம் தெய்வயானையின் வலக்கரத்தில் நீலோற்ப மலரும் காணப்படுகின்றன. இதனின் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

## பெரிய உற்சவர்

திருவிழாக் காலங்களில் உற்சவமாக எடுத்துச் செல்லப்படும். சுமார் 2½ அடி உயரமுள்ள சுப்பிரமணியர் தேவியர்களுடன் நின்ற நிலையில் காணப்படுகிறார். சுப்ரமண்யரின் முன்னிரு கரங்களில் வலது கையில் அபயம், இடது கையில் வரதம் ஆகிய முத்திரைகளில் காணப்படுகிறது. பாதம் வரை ஆடைகள் காணப்படுகிறது. சுப்ரமண்யரின் இடப்புறமுள்ள தெய்வ யானையின் கையில் நீலோற்ப மலரும், வலப்புறமுள்ள வள்ளியின் இடக்கையில் தாமரை மலரும் காணப்படுகிறது. தற்போது வெள்ளித் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளது.

❖❖❖

# திருவிழாக்கள்

திருத்தணியில் நடைபெறும் பல திருவிழாக்கள் தென்னிந்திய மக்களைப் பெரிதும் கவர்கின்றன. இவ்வூரில் சைவ, வைணவ கோயில்களும் இருப்பதால் ஆண்டுதோறும் திருவிழாக்கள் நடைபெற்றவண்ணம் இருக்கிறது. திருத்தணியிலுள்ள பழம்பெருமை பெற்ற வீரட்டானேசுவரர் கோயில், ஆறுமுகசுவாமி கோயில், விஜயராகவசுவாமி கோயில், சுப்ரமண்யர் கோயில் ஆகியவற்றில் திருவிழாக்கள் மிகச்சிறப்புடன் நடைபெறுகின்றன. திருமலையில் உள்ள சுப்ரமண்யர் கோயிலில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. இப்பங்குனி உத்திரத் திருவிழாவிற்கு தென்னிந்தியா முழுவதிலிமிருந்து பக்தர்கள் வந்து கலந்துகொள்கின்றனர்.

## விழாக்கள்

திருத்தணியில் வாரந்தோறும், மாதந்தோறும், ஆண்டுதோறும் விழாக்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன. மாசி மாதம் நடைபெறும் வள்ளித் திருமண விழா, சித்திரை மாதம் நடைபெறும் தெய்வயானை திருமண விழா, மகாசிவராத்திரியில் முருகனுக்கு 1008 சங்காபிஷேக விழா, ஆடிக்கிருத்திகையில் நடைபெறும் தெப்பத் திருவிழா, ஐப்பசியில் நடைபெறும் கந்தர் சஷ்டி விழா, திருப்புகழ் திருப்படித் திருவிழா, வைகாசி விசாகம், மாதாந்திர கிருத்திகைகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

# கிருத்திகை திருவிழா

திருத்தணிகையில் ஒவ்வொரு கிருத்திகை நாளன்றும் விழா நடைபெறுகிறது. கார்த்திகைக் கிருத்திகை, தைக் கிருத்திகை, மாசிக் கிருத்திகை நாட்களில் சிறப்பாகவும், ஆடிக்கிருத்திகை மிகச்சிறப்பாகவும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ஆடிக்கிருத்திகையின்போது சரவணப் பொய்கையில் தெப்ப உற்சவம் நடைபெறுகின்றது. இவ்விழா மூன்று நாட்கள் கொண்டாடப்படுகிறது. இது ஒரு சிறந்த தத்துவ நுட்பத்தை கூறுகிறது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர்" -

என்று வள்ளுவர் அருளிய குறளை அன்பர்கள் அறிவர். அதன்படி "பிறவியாகிய கடலில் வீழ்ந்து அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் சிற்றுயிர்களாகிய நமக்கெல்லாம் ஒரு தெப்பம் போல இருந்து உதவி புரிந்து இறைவன் நம்மை வீடு பேறு ஆகிய கரையில் கொண்டு போய் சேர்த்து அருள்புரிகின்றான் என்பதே தெப்பத் திருவிழாவின் தத்துவம்" என ஆன்றோர்கள் விளக்குகின்றனர். இதனை,

"துன்பக் கடலிடைத் தோணித்
தொழில் பூண்டு, கொண்டார் தம்மை
இன்பக் கரை முகந்த ஏற்றும் திறந்தன"

எனத் திருநாவுக்கரசரும் அருளிச் செய்து இருத்தல் வாயிலாகவும் அறியமுடிகிறது.

## திருப்புகழ் - திருப்படித் திருவிழா

புத்தாண்டு தொடங்கும் டிசம்பர் 31-ஆம் தேதி நள்ளிரவிலும் ஜனவரி 1-ஆம் தேதியிலும் இக்கோயிலில் உள்ள 365 படிகள் தோறும் பூசை செய்து திருப்புகழ் பாடல்களைப் பாடி அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகின்றனர்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் அவர்களால் தொடங்கப்பட்ட இவ்விழா இன்று ஆயிரக்கணக்கான பக்தர்களை புத்தாண்டு துவக்கத்தன்று திருத்தணிகைக்கு அழைத்து வருகிறது. சச்சிதானந்த சுவாமிகள் மட்டுமன்றி, மேலும் இக்கோயிலின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்கள் திருப்புகழ் T.M. கிருஷ்ணஸ்வாமி ஐயர், அருள்மொழி அரசு, திருமுருக கிருபானந்த வாரியார், சாது பித்துக்குளி முருகதாஸ், திருமதி. மா. ஷண்பகவள்ளி அம்மையார், மாசித்தர் M.A.மஜீத் போன்ற பெருந்தகையினராவர்கள்.

## பிரமோற்சவங்கள்

ஓராண்டில் இங்கு இரண்டு பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் வள்ளியம்மையுடனும் சித்திரை மாதத்தில் தேவசேனையுடனும் திருமண விழாக்கள் நடைபெறு

கின்றன. மாசி விழாவில் 8-ஆம் நாள் இரவு வள்ளியம்மை திருமணம் மேலைத் திருத்தணியில் நடைபெறும். அவ்விழாவில் வள்ளியம்மையை திருமணம் புரிந்த புராணக் காட்சிகள் நிகழ்த்தப்படும்.

சூரபதுமனோடு செய்த போரின் பின்பு இங்கு முருகன் சினம் தணிந்து எழுந்தருளி இருப்பதால், பிற முருகன் தலங்களிற் போல் இங்கு சூரசம்மார விழாக் கொண்டாடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கந்தர் சஷ்டி உற்சவம், இங்கு வைதீக முறைப்படி நடைபெறுகின்றன. அப்போது யந்திர பூசை நடத்தப்பெறும். அந்த ஆறு நாட்களிலும், பெரிய உற்சவருக்கும், ஆறுமுக சுவாமிக்கும் அபிஷேகம் நடைபெறும். ஆறாம் நாள் ஆறுமுகப்பெருமான் திருவீதி உலா நடைபெறுகிறது.

## மகாசிவராத்திரி விழா

மகாசிவராத்திரி இரவில் இங்கு முருகனுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாகக் கண்டுகளிக்கத்தக்கது. ஒவ்வோர் ஆனி மாதமும் 29-ஆம் தேதி, வர்த்தந்தி என்னும் உற்சவம் நடைபெறும். அன்று 108 சங்காபிஷேகம் செய்யப்பெற்று, மாலையில் விசேட தீபாரதனை நிகழும். இரவு தங்க மயிலில் முருகன் தரிசனம் அளிக்கிறார்.

## தினசரி வழிபாடுகள்

| | | |
|---|---|---|
| காலை | 8-00 | கால சந்தி |
| காலை | 10-00 | உச்சிக்காலம் |
| மாலை | 5-00 | சாயரட்சை |
| இரவு | 8-00 | அர்த்தசாமம் |
| இரவு | 8-45 | பள்ளியறை |

# ஓவியங்கள்

தமிழர்கள் காதல், வீரம் என்ற இரு செயல்களிலும் சிறந்து விளங்கியதைப் போன்றே கலைப் படைப்புக்களிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் ஆகிய கவின்மிகு கலைகள் சங்ககாலந் தொட்டு இன்று வரை வளர்ந்தோங்கி வந்துள்ளன.

**திருத்தணி - ஓவியங்கள் :**

திருத்தணியில் பழங்கால ஓவியங்கள் யாவும் காணப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் ஓவியங்கள் சுப்ரமண்யர் கோயிலின் மூன்றாம் திருச்சுற்றின் தெற்கு பிரகார சுவரின் மேல் பகுதியில் வரையப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் இந்நூற்றாண்டின் ஓவியக்கலையினைப் பிரதிபலிப்பனவாக விளங்குகின்றன.

❖❖❖

# துணை நூற்பட்டியல்


1. தணிகைப்புராணம் - குமாரசுவாமிபிள்ளை
2. தணிகைப்புராணம் - பி. பாண்டித்துறை
3. திருத்தணிகை திருவிருத்தம்
4. தணிகைப்புராணம் மூலமும் உரையும் - உ.வே. சாமிநாதையர்
5. தணிகைப்புராணம் அரும்பதவுரை - அ. வைத்தியலிங்க உபாத்தியாயன்
6. திருத்தணிகை முருகன் பாமாலைத் திரட்டு - தணிகை ஸ்ரீசுப்ரமண்யசுவாமி
7. தணிகைப்புராணம் - கச்சியப்ப முதலியார்
8. திருத்தணிகை திருவித்தம் - உ.வே. சாமிநாதையர்
9. திருத்தணிகை பிள்ளைத் தமிழ் - வ. சு. செங்கல்வராயர்
10. திருத்தணிகை பிள்ளைத் தமிழ் மூலமும் உரையும் - இராவ், சுவாமி நல் முருகேசன் முதலியார்
11. அருணகிரிநாதர் திருப்புகழ்
12. கந்தரலங்காரம் - அருணகிரிநாதர்
13. செங்கழுனீர் விநாயகா பிள்ளைத் தமிழ் - மாதவ சிவஞான யோதியார்
14. திருத்தணிகை ஆற்றுப்படை - முனைவர் மா. இராசமாணிக்கனார் (திருக்கோயில் 1964)
15. திருத்தணி முருகன் பிள்ளைத் தமிழ் - ஈ.வே. வேங்கடசுப்ரமண்யம்
16. செங்கழுநீர் பிள்ளையார் பிள்ளைத் தமிழ் - திருவாடுதுறை ஆதினம்(1960)
17. திருமுருகாற்றுப்படையும் நச்சினார்க்கினியார் உரையும் - கு. குமாரசுவாமி
18. Early Chola Temples - S.R. Balasubramaniam
19. Later Chola Temples - S.R. Balasubramaniam
20. Early Chola Architecture and Sculptures, S.R. Balasubramaniam
21. இந்தியக் கலை வரலாறு - கோ. தங்கவேலு
22. தமிழகக் கோயில் கலைகள் - முனைவர் நாகசாமி, மா. சந்திரமூர்த்தி
23. திருவையாறு - சு. இராசகோபால்

24. செங்கை மாவட்ட வரலாற்று கருத்தரங்கு, பதிப்பாசிரியர் முனைவர் இரா. நாகசாமி
25. கல்வெட்டியல் - நடன. காசிநாதன்
26. மாமல்லை - முனைவர் இரா. நாகசாமி
27. திருத்தணிகைத் தல விளக்கம்
28. G. J. Dubreil (in his Archaeology of Indian Iconography catalogue. (pp. 22-23)
29. Tamil country uender Vijayanagar -Dr. A. Krishnasamy
30. செந்தமிழ் பொழில்
31. கல்வெட்டுகள் கூறும் உண்மைகள் - சதாசிவ பண்டாரத்தார்
32. Pallava Architecture, P.III by A.H.Longhurst
33. Pallava Antiquities by G.J. Dubvell .vol.II
34. The Temple of Virattanisvara - Tiruttani Douglass Barrot(1958) William Willets(1960)
35. The Temple of Virattanisvara, at Tiruttani Douglass Barrot(1958) Bombay.
36. தென்னிந்திய வரலாறு கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி
37. திருத்தணி திருமுருகன் படிவிழா - தணிகைக் குழு
38. Later Pandyas - Sethuraman
39. Historical sketchus of Ancient Dekham - K. Subramanya Iyer
40. Census of India, 1971, Chenglepet District
41. The Cholas - K.A. Neelakanda Sastri
42. Cave Temples of Pallava - K.R. Srinivasan
43. பிற்கால சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார்
44. Tiruttani - Velanjeri copper plates - Tamilnadu, Department of Archaeology
45. திருத்தணிகைக் குறிப்புகள்

# நிழற் படங்கள்



வீரட்டானேசுவரர் கோயில் வடபுறத் தோற்றம்





வீரட்டானேசுவரர் கோயில் துவாரபாலகர்கள்
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

வீரட்டானேசுவரர் கோயில் தேவகோட்டச் சிற்பங்கள்



விநாயகர் - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



தட்சணாமூர்த்தி
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

வீரட்டானேசுவரர் கோயில் தேவகோட்டச் சிற்பங்கள்



விஷ்ணு - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



பிரம்மா - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

வீரட்டானேசுவரர் கோயில் தேவகோட்டச் சிற்பங்கள்



துர்கை - 9-ஆம் நூற்றாண்டு



சண்டிகேசுவரர் - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



அபராஜிதவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு



வீரபத்திரர் - கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



சூரியன்



விநாயகர்



அறுபத்து மூன்று
நாயன்மார்கள்



வீரட்டானேசுவரர் சிற்பங்கள் - நால்வர்



ஆறுமுகசுவாமி கோயில் தோற்றம்



ஆறுமுகசுவாமி கருவறைத் தோற்றம்



ஆறுமுகசுவாமி கோயில் - விசயநகர கால தூண்கள்





விசயநகர கால சிற்பங்கள்



வீரட்டானேசுவரர் கிரீவ - நந்தி



ஆறுமுகசுவாமி கோயில் - யானை சிற்பம்



விஜயராகவப் பெருமாள் கோயில் தோற்றம்



விஜயராகவப் பெருமாள் கோயில் தூண்கள்



பார்வதியுடன் ரிஷப வாகன சிவன்
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

அபராஜிதவர்மனின் வேலஞ்சேரி செப்பேடுகள்
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு





முதலாம் பராந்தகச் சோழனின் வேலஞ்சேரி செப்பேடு
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



வீரட்டானேசுவரர் கோயில் சப்தமாதர்கள்
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



திருத்தணி - சரவணப் பொய்கை